வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu
விரமலர்




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 03.10.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 302 | பக்கங்கள் : 20


08
'மொட்டு' அணிக்குள் பனிப்போர்


09
புலம்பெயர் தமிழருக்கான ஜனாதிபதியின் அழைப்பு


10
அரசியல் தீர்வும் இணக்கப்பாடும் அவசியம்


13
ஹவாய் தீவுகளில் தமிழர் கலாச்சாரம்

# இலங்கையில் தீவிரவாத தாக்குதல் மீண்டும் இடம்பெற வாய்ப்புண்டு!

## நியூஸிலாந்து கத்திக்குத்து சம்பவம் இங்குதான் நடக்க சந்தர்ப்பம் அதிகம் இருந்தது என்கிறார் சரத் வீரசேகர

கொழும்பு, ஒக்ரோபர் 03

நியூஸிலாந்தில் அண்மையில் இடம்பெற்ற தீவிரவாத தாக்குதல், இலங்கையில்தான் நடத்தப்பட வாய்ப்புகள் இருந்தன என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார். 19



## 2 சிறுநீரகங்களும் செயலிழந்ததால் ஹாட்லி மாணவன் பரிதாப மரணம்

வடமராட்சி, ஒக். 02

சிறுநீரகங்கள் இரண்டும் செயலிழந்த நிலையில் பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் வடமராட்சிப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 11ஆம் தரத்தில் கல்வி கற்கும் மணடான், கரணவாய் தெற் 19

## தமிழ் கூட்டமைப்பின் ஒற்றுமையை சிதைப்பதற்கு சில சக்திகள் முயற்சி!

### சம்பந்தன் பகிரங்கக் குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 03

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை சிதைப்பதற்கு, சில சக்திகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. ஒற்றுமையை உறுதி செய்யும் முகமாக, இந்த விடயங்கள் தொடர்பில், சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடல்கள் இடம்பெறும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் குறிப்பிட்டார். 19

## மதவாதத்தை தூண்டி மக்களை குழப்பாதீர்!

### யாழ். நாக விகாரை விகாராதிபதி வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 03

"அரசியல் தேவைகளுக்காக - அரசியல் இலாபங்களுக்காக மதவாதங்களைத் தூண்டி மக்களைக் குழப்பி மதங்களுடையில் பிரச்சினைகளைத் தூண்டிவிடும் 19



## மத சார்பு அடையாளங்களுக்கு ஆரியகுளத்தில் அனுமதி இல்லை

### யாழ். மேயர் மணிவண்ணன் திட்டவட்டம்



யாழ்ப்பாணம், ஒக். 03

யாழ்ப்பாணம், ஆரியகுளம் அபிவிருத்தியில் எந்தவொரு மதச் சார்பு அடையாளங்களையும் உட்புகுத்தவில்லை; புகுத்தப்போவதுமில்லை என்று யாழ். மாநகர 19

## நேற்று தொற்று 855 பேர்

கொழும்பு, ஒக். 03

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 855 பேர் 19

## பிறந்து 24 நாள்களேயான குழந்தை யாழில் கொரோனாவால் மரணம்!

யாழ்ப்பாணம், ஒக். 03

பிறந்து 24 நாள்களேயான குழந்தை கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளது.

நீர்வேலியைச் சேர்ந்த பவிகரன் நிருஜா என்ற பெண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை மூச்செடுக்க சிரமப்பட்ட நிலையில் 19



## இப்படியும் நடக்கிறது...!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மூன்று கட்சிகளின் தலைவர்களும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனைச் சந்தித்த விடயத்தை நேற்று இந்தப் பத்தியில் நேரலையாக தந்திருந்தோம்.

நேரலை என்றாலும் இடையிடையே சில தொழில்நுட்பத் தடங்கல்கள் ஏற்படத்தானே செய்யும். ஆனாலும் அந்த விடயங்களையும் தரவேண்டும் என்ற கோரிக்கைகளும் நேற்று ஏராளமாக வந்தன.

ஆனால் கொஞ்சம் கடுப்பான ஒரு கூட்டமைப்பு விசுவாசி ஒருவர், கனடாவிலிருந்து தொடர்புகொண்டார்.

சந்திப்பில் மூன்று கட்சிகளின் தலைவர்களும் அதாவது தமிழரசின் தலைவர் மாவை சேனாதிராசா, ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் இவர்களுடன் ரெலோ பொதுச் செயலாளர் ஜனா என்ற கோவிந்தம் கருணாகரன் ஆகிய நால்வருமே இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டவர்கள். அப்படியிருக்க, அங்கு பேசப்பட்ட விடயங்களை ஒன்றும் விடாமல் ஊர்க்குருவியார் எழுதுகிறார் என்றால் இந்த நால்வரில் ஒருவர் தானே தந்திருக்கவேண்டும். கட்சிக்குள் நடக்கின்ற இதுபோன்ற விடயங்களை ஊடகங்களுக்கு தெரிவிப்பது கட்சியை மேலும் பலவீனப்படுத்தும் அல்லவா? சுமந்திரன் கட்சியை பலவீனப்படுத்துகிறார் என்று முறையிடும் இவர்களும் அதைத்தானே செய்கின்றார்கள்? என்று கொதிப்புடன் கேட்டார் அந்த கனடா நண்பர்.

நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த சம்பந்தன் ஐயாவே, இந்த விடயத்தை பகிரங்கப்படுத்த வேண்டும் என்பதற்காக நடந்த உரையாடலை ஊர்க்குருவியிடம் கசிய விடும்படி கூட்டத்தில் கலந்துகொண்டவர்களிடம் கூறியிருக்கலாமோ என்று சிரித்துக்கொண்டே அந்த கனடா நண்பரிடம் சொன்னேன்.

ஆனால் இவ்வளவு விடயங்களும், அதாவது பங்காளிக் கட்சிகள் சம்பந்தனிடம் சொன்ன விடயங்கள் எல்லாமே பொதுவெளியில் அதுகும் அனேகமாக எல்லா ஊடகங்களிலும் வந்தவை. ஆனால் அதுபற்றி எதுவுமே தனக்கு தெரிந்திருக்கவில்லை என்று சம்பந்தன் ஐயாவே சொல்கின்றபோது, அவர் பொதுவெளியிலிருந்து எவ்வளவு தூரம் விலகி இருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளலாம்.

நண்பரின் ஆத்திரம் நியாயமானதுதான், அதனால் அந்த நண்பரின் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக கூட்டமைப்பின் பங்காளிக்கட்சித் தலைவர் ஒருவரின் அபிப்பிராயத்தை அறிந்துகொள்ள இந்த ஊர்க்குருவிக்கு ஆவல்.

நண்பரின் இந்த நியாயமான முறைப்பாட்டை அந்த பங்காளிக்கட்சி தலைவருக்கு சொன்னபோது, அவர் சொன்ன கதை ஆச்சரியமானது.

தேர்தலுக்கு முன்னதாக சிங்கள ஊடகம் ஒன்றுக்கு, புலிகளின் போராட்டதை தான் ஆதரிக்கவில்லை என்று சுமந்திரன் சொல்லப்போய், அந்த விவகாரம் கூட்டமைப்பினரிடைய கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தபோது, இந்த பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் சம்பந்தனிடம் சென்று முறையிட்டனராம். வழக்கம்போல அந்த விடயத்தை தெரிந்திராத சம்பந்தன், சுமந்திரனை கூப்பிடுங்கள் பேசுவோம் என்றாராம். உடனே மாவையர் சுமந்திரனுடன் தொடர்புகொண்டபோது அவர் திருகோணமலையில் இருந்தார்.

சம்பந்தனின் அழைப்புக்குறித்து மாவையர் சுமந்திரனிடம் சொல்லி மறுநாள் மீண்டும் சுமந்திரனுடன் சேர்ந்து சந்திப்பது என்று முடிவாகிவிட்டது.

இந்த இரண்டாவது கூட்டமே சுமந்திரனுடன் சந்திப்பதற்காக அவருடன் சேர்ந்து நிர்ணயிக்கப்பட்ட கூட்டம்.

ஆனால் கூட்டம் நடந்த அன்று யாழ்ப்பாணத்திலிருந்து வரும் பத்திரிகை ஒன்று, சுமந்திரனுக்கு அழைப்பு இல்லாமல் மீண்டும் பங்காளிக்கட்சிகள் கூடுகிறார்கள் என்று செய்தி வெளியிட்டது.

ஓர் ஊடகம் இவ்வாறு செய்தி வெளியிடுவதெனில், சம்பந்தப்பட்ட சுமந்திரனிடம் உறுதிசெய்துகொண்டே வெளியிடும் என்பதும் தெரிந்ததுதான்.

கூட்டம் ஆரம்பமானதும் இந்தச் செய்தி பற்றி செல்வம் கேள்வி எழுப்பியபோது, சர்வ சாதாரணமாக, 'அது நான் தான் கொடுத்தேன். சும்மா பரபரப்புக்காக நான் இப்படி கொடுப்பது வழக்கம்' என்று பதிலளித்திருக்கிறார் சுமந்திரன்.

இந்தச் சம்பவத்தை ஊர்க்குருவிக்கு சுட்டிக்காட்டிய அந்தத் தலைவர், 'அங்கு என்ன நடந்தது என்பது வெளியே தெரியவரவில்லை என்றால், தங்கள் தங்களுக்கு வேண்டிய மாதிரி ஒவ்வொருவரும் எழுதத் தொடங்கிவிடுவார்களே' என்றார்.

அங்கு நடந்த மற்றுமொரு சுவாரஷ்யமான விடயத்துடன் நாளை சந்திப்போம்!

**- ஊர்க்குருவி.**

# வெளிநாட்டிலிருந்து வந்த கணவனால் மனைவி கொடூரமாக அடித்துக்கொலை

மட்டக்களப்பு, ஒக். 03

மட்டக்களப்பு மாவட்டம், களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள மகளூர் பிரதேசத்தில் கணவன் - மனைவிக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் மனைவி அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த 31 வயதுடைய ராஜேநதிரன் ரஜேந்தினி என்பவரே கொலைசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த பெண் தொழிலுக்காக வெளிநாடு சென்றிருந்த நிலையில் கடந்த 18 நாட்களுக்கு முன்னர் நாடு திரும்பியுள்ளார்.

இதையடுத்து வெளிநாட்டில் இருந்து அனுப்பிய பணம் தொடர்பில் கணவன் - மனைவி இடையே அடிக்கடி சண்டை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் இரவு இருவருக்கும் இடையே மீண்டும் சண்டை ஏற்பட்ட நிலையில் கணவனின் தாக்குதலில் மனைவி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் 38 வயதுடைய கணவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த மனைவியின் சடலம் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இ)

## சட்ட விரிவுரையாளர் கமலா நாகேந்திரா காலமானார்



சிட்னி, ஒக். 03

இலங்கை சட்டக்கல்லூரி மற்றும் கொழும்பு பல்கலைக் கழக சட்ட பீடம் என்பவற்றின் முன்னாள் சட்ட விரிவுரையாளர் கலாநிதி கமலா நாகேந்திரா கடந்த 30ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் காலமானார்.

தேச வழமைச் சட்டம் மற்றும் பெண்கள் சிறுவர் உரிமைகள் தொடர்பான சட்டங்கள்,தொழிலாளர் தொடர்புடைய சட்டங்கள்,குடும்பச் சட்டம் என்பவற்றில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற அவர் தேச வழமைச் சட்டத்தில் பெண்களது சொத்துரிமை தொடர்பில் ஆங்கில மொழிமூல நூல் ஒன்றையும் எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணம் அல்வாயை பிறப்பிடமாக கொண்ட இவர் யாழ்.இந்து மகளிர் கல்லுரியின் பழைய மாணவியுமாவார்.

## சட்ட விதிகளை மீறிய 81 பேர் கைது

கொழும்பு, ஒக். 03

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 81 பேரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நேற்றுக் காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்திலேயே குறித்த சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அந்தவகையில் தனிமைப் படுத்தல் சட்டவிதிகளை மீறியதாக இதுவரை மொத்தம் 79 ஆயிரத்து 804 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### கல்வி TV CHANNEL-1

**03.10.2021**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

### கல்வி TV CHANNEL - 2

**03.10.2021**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
03.10.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 17

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

## இந்திய வெளியுறவு செயலரின் விஜயம்

இந்திய வெளிவிவகாரச் செயலர் ஹர்ஸ் வர்தன் ஷ்ரிங்லாவின் இலங்கை விஜயம், பலரது கவனத்தை பெற்றிருக்கின்றது. 2ஆம் திகதி தொடக்கம் 5ஆம் திகதி வரையில் அவர் இலங்கையில் தங்கியிருப்பார் என்று செய்திகள் கூறுகின்றன. இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜெயநாத் கொலம்பகேயின் அழைப்பிலேயே அவர் இலங்கைக்கு விஜயம் செய்வதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. ஒரு நாட்டுக்கு ராஜதந்திரிகள் வருகின்ற போது கடைப்பிடிக்கும் ஒரு சாதாரண நடைமுறைதான் இது.

பல மாதங்களாக இழுபறி நிலையிலிருந்த கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனைய விவகாரம் தற்போது எவ்வித ஆர்பாட்டமும் இல்லாமல் முடிவுக்கு வந்திருக்கின்றது. இந்த நிலையிலேயே ஹர்ஸ் வர்தனின் விஜயம் இடம்பெற்றிருக்கின்றது. அவரது விஜயத்திற்கு முன்னரே கொள்கலன் முனைய விவாகரத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்னும் முனைப்பில்தான் விடயங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட தனது கடமைகளை பொறுப்பேற்றதன் பின்னர், கிடப்பில் போடப்பட்டிருக்கும் இந்தியாவுடனான உடன்பாடுகள் அனைத்தும் விரைந்து முடிக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார் என்பதையும் இந்த இடத்தில் நாம் குறித்துக் கொள்ள வேண்டும்.

அதே வேளை, இந்திய வெளியுறவுச் செயலர் திருகோணமலை, யாழ்ப்பாணம், மலையகம் ஆகிய பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. அவர் இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் வேளையில், இந்திய - இலங்கை இராணுவத்தினர் பங்குகொள்ளும் 'மித்திர சக்தி' என்னும் தீவிரவாத முறியடிப்பு தொடர்பான பயிற்சி நெறியொன்றும் திருகோணமலையில் இடம்பெறவுள்ளது. 4ஆம் திகதியிலிருந்து 15ஆம்திகதி வரையில் இந்த பயிற்சி நெறி இடம்பெறவுள்ளது. இதில் 120 இந்திய படையினர் பங்குகொள்ளவுள்ளனர்.

தெற்கில் வலுவாக காலூன்றியிருக்கும் சீனா, வடகிழக்கு மற்றும் மலையகப் பகுதியிலும் வர்த்தக நோக்கில் ஆர்வம் காண்பிப்பதாக செய்திகள் வெளியாகிவரும் நிலையிலேயே, இந்திய வெளியுறவுச் செயலர் குறிப்பிட்ட பகுதிகளுக்கு செல்லவுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதன் பின்னர், புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையிலான உறவில் பெரியளவில் மகிழ்ச்சியான முன்னேற்றம் இருந்திருக்கவில்லை. மிலிந்த மொறகொட ஜனாதிபதியிடம் கையளித்த மூலோபாய ஆவணத்திலும் இரு நாடுகளுக்கிடையிலுமான நம்பிக்கையில் பற்றாக்குறை இருப்பதை ஒப்புக் கொண்டிருந்தார். அதனை சரிசெய்வதே தனது பிரதான இலக்கு என்றும் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் கொழும்பு இந்தியாவுடனான உறவை வலுப்படுத்திக் கொள்வதில் சற்று கூடுதல் ஆர்வம் காண்பிப்பது போல் தெரிகின்றது. ஆனால் மிலிந்த மொறகொட தனது ஆவணத்தில் திட்டமிட்டு, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பான விடயத்தை தவிர்த்திருந்தார். இதன் மூலம் தமிழர் பிரச்சினை என்பது ஒரு உள்நாட்டு விவகாரம், அதனை நாங்கள் பார்த்துக் கொள்வோம் என்னும் நிலைப்பாடே மேலோங்கியிருக்கின்றது. இதனை சில இந்திய அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

இந்த நிலையில் இந்திய வெளியுறவுச் செயலர் யாழ்ப்பாணம் மற்றும் மலையகத்திற்கு செல்வதானது, ஒரு தெளிவான செய்தியை கொழும்புக்கு சொல்ல முற்படுகின்றது. இலங்கை தமிழர் விவகாரத்தின் மீதான இந்தியாவின் கரிசனையில் மாற்றமில்லை. அதே வேளை வெளியுறவுச் செயலர் கூட்டமைப்பை சந்தித்தால், நிச்சயம் 13வது திருத்தச்சட்டத்தை வலியுறுத்துவார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் சம்பந்தனோ வழமைபோல் அரசியல் யாப்பு தொடர்பில் பேசி, கிடைக்கும் சந்தர்ப்பத்தை செல்லாக் காசாக்க முற்படுவார். இந்தியா எதனை வலியுறுத்துகின்றதோ, அதனை ஏற்றுக்கொண்டு, அதன் வழியில் செல்வதுதான் இன்றைய காலத்திற்கு உகந்த தமிழ் ராஜதந்திர அணுகுமுறையாக இருக்க முடியும். காலத்தை தவறவிட்டுவிட்டு, மற்றவர்களை குற்றம் சாட்டுவதில் எவ்வித பயனுமில்லை. இதனைத்தான் தமிழர் தரப்புக்கள் வெகுகாலமாக செய்துவருகின்றன.

# சிறுவர் உரிமைகளை பாதுகாக்க நாம் செய்ய வேண்டியது என்ன?



*ஒவ்வோர் ஆண்டும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி உலக சிறுவர்தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறான தொரு தினம் அனுஷ்டிக்கப்படுவதற்கான காரணம் சிறுவர்களுக்கெதிராக அரங்கேற்றப்படுகின்ற துஷ்பிரயோகங்ளையும் அநீதிகளையும் இயன்றளவு குறைத்து அவர்களுக்கான சகலவிதமான உரிமைகளையும் பெற்றுக் கொடுப்பதேயாகும்.*

*இன்றைய உலகம் எதிர்நோக்கும் மிக முக்கிய சமூகப் பிரச்சினைகளுள் ஒன்றாக சிறுவர் மீதான துஷ்பிரயோகம் விளங்கு கின்றது. சிறுவர் துஷ்பிரயோகம் என்ற விடயமானது வளர்ச்சி அடைந்த மற்றும் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் என்ற எந்தவித வேறுபாடுகளுமின்றி உலகம்முழு வதும் காணப்படும் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்த பிரச்சினையாக இருந்தாலும் கூட வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் அது ஒரு பாரியபி ரச்சினையாக உருவெடுத்து வருகின்றது.*

*சிறுவர்கள் என்போர் மனித சமூகத்தின் மிக முக்கிய பகுதியினராகக் கருதப்படுகின்றனர். அத்தோடு அவர்கள் அடுத்தவர்களில் தங்கி வாழ்கின்ற பலவீனர்களாகக் காணப்படுவதனாலேயே அவர்களது உரிமைகள் அதிகம் மீறப்படுகின்றன.*

*இவ்வாறான உரிமை மீறல்கள், துஷ்பிரயோகங்களில் இருந்தும் சிறுவர்களைப் பாதுகாப்பதற்காகப் பல கொள்கைகள் மற்றும் பிரகடனங்கள் காலத்துக் குக் காலம் வெளியிடப்பட்டு வந்துள்ளன. அவற்றிடையே 1989 இல் ஐ.நா. சபையில் வெளி யிடப்பட்ட சிறுவர் உரிமைகளைப் பற்றிய கொள்கையானது சிறுவர்களைப் பாதுகாத் தல் தொடர்பாக குறிப்பிடத்தக்க அளவு ஏற்பாடுகளை கொண்டுள்ளது. மேலும் ஐ.நா சபையானது 18வயதுக்குட்பட்ட அனை வரையும் சிறுவர்கள் என வரையறுத்துள்ளது. சிறுவர்கள் எதிர்கால உலகின் அத்திவாரம் என்ற வகையில் அவர்களது எதிர்காலத்தைச் சிறப்பாக்கத் திட்டமிட்டு வழிநடத்த வேண்டும்.*

> **சிறுவர் தினம் சம்பந்தமாக குறிப்பிட்ட தினத்தில் மாத்திரம் மும்முரமாக செயற்படுவதில் எந்தப் பயனும் இல்லை. வருடத்தில் ஏனைய நாட்களிலும் சிறுவர் துஷ்பிரயோகம் அனைத்து தரப்பினரதும் கவனத்திற்கு உட்பட வேண்டியது அவசியமாகும்.**


*ஆனால் இன்றைய மனித சமுதாயமானது நாகரிகத்தின் விளிம்பை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் அதேவளை சிறுவர்களுக்கெதிராக மேற் கொள்ளப்படும் வன்முறைகளும் துஷ்பிரயோகங்களும் அதிகரித்துக் கொண்டேசெல்கின்றன.சிறுவர் துஷ்பிரயோகத்தின் பல்வேறு வடிவங்கள்*

- *உடலியல் ரீதியான துஷ்பிரயோகம்.*
- *உளவியல் ரீதியான துஷ்பிரயோகம்.*
- *பாலியல்ரீதியான துஷ்பிரயோகம்.*
- *உணர்வு ரீதியான துஷ்பிரயோகம்.*
- *புறக்கணிப்பு ரீதியான துஷ்பிரயோகம்.*

*குறிப்பாக உலகில் உள்ள அனைத்துசிறுவர்களும் இவற்றுள் ஏதாவதொரு துஷ்பிரயோகத்திற்கு முகம் கொடுத்தேவருகின்றனர் என்பதனை ஆய்வறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான பல ஏற்பாடுகள் இன்றைய நவீன உலகில் காணப்பட்டாலும் கூட அவற்றையும் மீறி சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக் கப்பட்டு வருகின்றனர். மேற்படி சிறுவர் துஷ்பிரயோக வடிவங்களை நீக்குவதற்காக உலகின் பல அரசுகள், அரச சார்பற்ற நிறு வனங்கள், சமூக மற்றும் சமய நிறுவனங்கள் போன்ற வற்றால் பல ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன.*

*மேற்படி அனைத்து நிறுவனங்களினதும் சேவைகளை ஒருங்கிணைத்து நடை முறைப் படுத்துவது அத்தியவசியமாகும். இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு உலக சிறுவர்தினத்தை சிறப்பாக திட்டமிட்டுப் பயன்படுத்தலாம். மேலும் சிறுவர் தினம் சம்பந்தமாக குறிப்பிட்ட தினத்தில் மாத்திரம் மும்முரமாக செயற் படுவதில்எந்தப் பயனும் இல்லை. வருடத்தில் ஏனைய நாட்களிலும் சிறுவர் துஷ்பிரயோகம் அனைத்து தரப்பினரதும் கவனத்திற்கு உட்பட வேண்டியது அவசியமாகும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை இழக்கும் அபாயம் உள்ளதா?

**சுகீஸ்வர சேனாதீர**

ஜீ.எஸ்.பி. பிளஸ் எனும் ஏற்றுமதி வர்த்தகச் சலுகைகளுக்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகளுக்கு இணங்குவதை மதிப்பாய்வுச் செய்வதற்காக, ஐரோப்பிய ஒன்றியத்தின் குழுவொன்று தற்போது இலங்கைக்கு விஜயம் செய்திருக்கிறது. செப்டெம்பர் 24ஆம் திகதியன்று இலங்கை வந்த இக்குழு, ஒக்டோபர் 5ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து, தமது நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது.

இக்குழுவில், ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தக மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான மூத்த ஆலோசகர் நிக்கொலஸ் ஜைமிஸ், தெற்காசியாவின் ஐரோப்பிய வெளிப்புற நடவடிக்கைகள் மற்றும் சேவைகள் பிரிவின் தலைவர் அயோனிஸ் ஜியோகாரகீஸ்-ஆர்கிரோபோலோஸ், ஜிஎஸ்பி வர்த்தக விருப்பத்தேர்வு ஒருங்கிணைப்பாளர் கைடோ டோலாரா, ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழுவின் வேலைவாய்ப்பு மற்றும் சமூக விவகாரங்களுக்கான இணைப்பாளர் லூயிஸ் பிராட்ஸ், இலங்கை மற்றும் மாலத்தீவுக்கான அதிகாரி மோனிகா பைலைட் ஆகியோர்அடங்குகின்றனர்.




இலங்கைக்கான ஜீஎஸ்பி பிளஸ் சலுகைகளைத் திரும்பப் பெறும்படி ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தினால் முன்மொழியப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காகவே அக்குழு இலங்கை வந்துள்ளதாக, எதிர்க் கட்சியினரும் கூறுகின்றார்கள்.

உண்மையில் அவர்களின் விஜயத்தில் இரண்டு விடயங்கள் உள்ளடங்கியுள்ளன.

ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தில், கடந்த ஜூன் மாதம் நடுப்பகுதியில், இலங்கைக்கான ஜீஎஸ்பி பிளஸ் சலுகையைத் தற்காலிகமாகத் திரும்பப் பெறுமாறு தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. இந்த யோசனைக்குச் சார்பாக 628 வாக்குகள் கிடைக்கப்பெற்றன. எதிராக 15 வாக்குகள் அளிக்கப்பட்டு, இலங்கைக்கு அந்தச் சலுகையைத் தொடர்ந்து வழங்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டன. 40 பேர் வாக்களிப்பைத் தவிர்த்திருந்தனர். ஐரோப்பிய பாராளுமன்றமே இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. இருப்பினும், ஜீ.எஸ்.பி. தொடர்பான நடவடிக்கைகளை ஐரோப்பிய பாராளுமன்றம் முன்னெடுப்பதில்லை. ஐரோப்பிய ஆணைக்குழுவே இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில், தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ள குழுவினர், ஐரோப்பிய பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் அல்லர். அவர்கள், ஐரோப்பிய ஆணைக்குழுவின் உறுப்பினர்களாவர். எவ்வாறாயினும், இவர்களின் இறுதித் தீர்மானம், இறுதியில் ஐரோப்பிய பாராளுமன்றத்துக்கே சமர்ப்பிக்கப்படும். அதனால், ஐரோப்பிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு எந்த அதிகாரமும் இல்லையென்றும் எம்மால் கூறிவிட முடியாது. எவ்வாறாயினும், ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகை தொடர்பான இறுதித் தீர்மானத்தை ஐரோப்பிய ஆணைக்குழு எடுத்து, அதை ஐரோப்பிய பாராளுமன்றத்துக்கு அறிவிக்கும் என்பதே உண்மை.

ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகைகளை இலங்கை மீளப் பெற்றுக்கொள்வதற்காக, ஜீ.எஸ்.பி. பிளஸ் தொடர்பான 27 சர்வதேச மரபுகளுடனான இணக்கப்பாட்டை இலங்கை தெரிவித்திருக்கிறது. இந்த 27 மரபுகளையும் இலங்கை எவ்வாறு கடைபிடிக்கிறது என்பதை, வருடந்தோறும் ஐரோப்பிய ஒன்றியம் மதிப்பாய்வு செய்து வருகின்றது. கடந்த 2020ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக, அவர்களால் இலங்கைக்கு விஜயம் செய்ய முடியாதிருந்தது. இந்நிலையிலேயே, 2021இல் இலங்கைக்கு வந்துள்ளனர்.

அந்த வகையில், வருடந்தோறும் அவர்களால் மேற்கொள்ளப்படும் மதிப்பாய்வுப் பணிகளுக்காகவே அவர்கள் வந்திருக்கிறார்களே தவிர, இலங்கைக்கான ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகைகளை மீளப் பெறுவதற்காக அல்ல. அத்துடன், அந்தச் சலுகைகளை இழக்கும் பாரதூரமான நிலைமை யொன்று, இலங்கைக்கு ஏற்படவில்லை என்றே கூறவேண்டும்.

ஜீஎஸ்பி பிளஸ் சலுகைகளை இலங்கை இழக்குமாயின், அதனால் கிராமங்களில் ஆடைத் தொழிற்றுறையில் ஈடுபட்டிருக்கும் பெண்கள், மீன்பிடித்துறையில் ஈடுபட்டிருக்கும் மீனவர்கள், விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகள், இறப்பர் தோட்டத்தில் இறப்பர் பால் சேகரிக்கும் ஊழியர்களின் வருமானமே இழக்கப்படும். அவர்களின் வாழ்வாதாரமே பாதிக்கப்படும்.

கொவிட் தொற்றுப் பரவலுக்கு மத்தியில், இலங்கை பாரிய சவால்களை எதிர்கொண்டிருக்கிறது. ஏற்றுமதி, நாட்டுக்கு பணம் அனுப்புபவர்கள் மற்றும் சுற்றுலாத் துறை ஆகியவற்றிலேயே இலங்கை தங்கியிருக்கிறது. இதில், சுற்றுலாத்துறை தவிர்ந்த ஏனைய இரண்டு வழிமுறைகளின் ஊடாக ஓரளவேனும் நாட்டுக்கு வருமானம் கிடைத்து வருகின்ற போதிலும், சுற்றுலாத்துறை என்பது, பாரியளவில் வீழ்ச்சி கண்டுள்ளது. வருடமொன்றுக்கு 5 பில்லியன் வருமானத்தைப் பெற்றுத்தந்த சுற்றுலாத்துறை, இன்று பூச்சியமாகியுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத் திருத்தம், தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு, காணாமற்போனோர் தொடர்பாகக் கண்டறிதல், காணாமல் போனோரின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளும், மனித உரிமைகள் விடயத்தில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இலங்கை அரச தரப்பு சொல்கின்றது.

ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகையைப் பெறும் நாடானது, அதனை ஒரு பரிசாகப் பெற முடியாது. கடந்த காலங்களில் இச்சலுகைகளைப் பெறும் நாடுகளின் தவறான கொள்கை முடிவுகளால் அவற்றை வழங்க முடியாமல் போனதற்கு, எந்த ஒரு பாகுபாடு அடிப்படையிலும் அவை முடிவு செய்யப்படவில்லை.

அந்த வகையில், தற்போது இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம், இலங்கையின் தொழிலாளர்கள், மனித உரிமைகள், முன்னாள் போராளிகளை விடுவித்தல், பாதிக்கப்பட்ட மூவாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கான இழப்பீடுகளை வழங்கல் போன்ற நடவடிக்கை களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து, இலங்கை விளக்கமளித்துள்ளது. மேலும், இவை தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்படும் வரை, சரியான செயல்முறைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல்கள் காரணமாக, பிலிப்பைன்ஸ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கான ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகைகள் திரும்பப் பெறவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட போதிலும், அந்த இரு நாடுகளுக்கான சலுகைகளை திரும்பப்பெற ஐரோப்பிய ஒன்றியம் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. ■




**மேடம்**
குழந்தைகளின் கல்வி விஷயத்திற்காக செலவுகள் சற்றுக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் இருந்த பிரச்னைகள் முடிவுக்கு வரும். வேலையில் கவனமும் விழிப்புணர்வும் அவசியம் தேவை.

**இடபம்**
மனதில் உற்சாகம் ஏற்படுத்தும் செயல் ஒன்று நடைபெறும். குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய நற்செய்தி ஒன்று உண்டு. பண விஷயத்தில் கவனம் தேவை. நோய்கள் நீங்கும்.

**மிதுனம்**
எதிரி ஒருவரால் இருந்த மறைமுக தொந்தரவு முடிவுக்கு வரும். உறவினர்களிடம் கவனம் தேவை. பேச்சில் நிதானம் அவசியம். முகத்தில் பொலிவு கூடும். வசீகரத்தன்மை அதிகரிக்கும்.

**கடகம்**
யாருக்கும் கையெழுத்து போட்டு பணம் வாங்கிக் கொடுக்காதீர். சுறுசுறுப்பும் உற்சாகமும் அதிகரிக்கும். பணிகள் விரைந்து முடியும். நகை போன்றவற்றை கவனமாக வைத்துக்கொள்வது நல்லது.

**சிம்மம்**
பெரிய அளவில் முதலீடு செய்ய வேண்டாம். நிம்மதியான நாள். குடும்ப ரகசியங்களை வெளியில் சொல்ல வேண்டாம். மூன்றாவது நபர்களிடம் பேசும் போது கவனம் தேவை.

**கன்னி**
இளம் வயதினருக்கு மகிழ்ச்சியான சம்பவங்கள் நடைபெறும். செலவு அதிகமாக இருந்தாலும் வரவும் அதிகரித்து நிம்மதி தரும். உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும்.

**துலாம்**
நேற்றைய பிரச்னை இன்று நல்ல முடிவிற்கு வரும். பணியாளர்கள் உயரதிகாரிகளிடம் பேசும் போது கவனம் தேவை. குடும்பச்சுமை குறையும். செலவு சற்றே அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
பொருளாதார பிரச்னை அகல நண்பர்கள் வழி காட்டுவர். குடும்பத்தினருடன் கலகலப்பாகப் பேசி மகிழ்வீர்கள். விலை உயர்ந்த பொருளை வாங்குவீர்கள். கவரும் தன்மை அதிகரிக்கும்.

**தனுசு**
கற்பனை பிரச்னைகளை உருவாக்கி கொண்டு கவலைப்பட வேண்டாம். மனதுக்கு நெருங்கியவர்களின் ஒத்துழைப்பு கிடைத்து மகிழும் நாள். யாரிடமும் வாக்குவாதம் தவிருங்கள்.

**மகரம்**
உங்கள் நலம் விரும்புவோரைப் பகைத்துக்கொள்ளாதீர்கள். புதிய வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான ஏற்பாடுகள் அமையும்.

**கும்பம்**
உறவினர்கள் இடையே ஒற்றுமை பலப்படும். மகிழ்ச்சி கூடும். நண்பர்கள் சந்திப்பு திடீரென்று நிகழ்ந்து உற்சாகம். குழப்பங்கள் அகலும். எதிர்பாலினத்தினரால் நன்மை கிடைக்கும்.

**மீனம்**
வழக்கமாகச் செய்யும் பணியை இன்று மாற்றி அமைப்பீர்கள். எப்போதோ எதிர்பார்த்த லாபம் ஒன்று நிதானமாய் வரும். மதியத்திற்கு மேல் மகிழ்ச்சியான சம்பவமொன்று நடைபெறும்.

# வடக்கு மாகாணத்தில் செப்ரெம்பரில் 348 பேர் கொரோனாவால் உயிரிழப்பு!

## 9,337 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 03

**வடக்கு மாகாணத்தில் செப்ரெம்பர் மாதத்தில் கோவிட்-19 நோய்த்தொற்றினால் 9 ஆயிரத்து 337 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 348 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரத் திணைக்களத்தின் அறிக்கை தெரிவிக்கின்றது.**

ஒக்ரோபர் முதலாம் திகதியான நேற்று முன் தினம்வடக்கு மாகாணத்தில் 78 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் நால்வர் கொவிட் -19 நோயினால் உயிரிழந்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் செப்ரெம்பர் மாதத்தில் அதிகப்படியாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3 ஆயிரத்து 776 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 152 பேர் உயிரிழந்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 2 ஆயிரத்து 467 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 130 பேர் உயிரிழந்துள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 986 தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன், 43 பேர் உயிரிழந்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் 672 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதுடன் 19 பேர் உயிரிழந்துள்ளனர். மன்னார் மாவட்டத்தில் 436 தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

2020 மார்ச் மாதம் முதல் நேற்று முன்தினம் ஒக்ரோபர் முதலாம் திகதிவரையான 18 மாதங்களில் வடக்கு மாகாணத்தில் 36 ஆயிரத்து 584 பேர் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 761 பேர் உயிரிழந்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் மட்டும் 16 ஆயிரத்து 852 தொற்றாளர்கள் கண்டறியப்பட்டதுடன் 413 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரத் திணைக்களத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன.



# யாழில் மகாத்மா காந்தியின் 153 ஆவது பிறந்தநாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 03

மகாத்மா காந்தியின் 153 ஆவது பிறந்த நாள் நிகழ்வு நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் இந்திய துணைத்தூதர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், மாநகர ஆணையாளர் மற்றும் இந்திய துணைத்தூதரக அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கைதான இளம் குடும்பஸ்தர் பொலிஸ் காவலில் மரணம்!

மன்னார், ஒக். 03

மன்னார் எருக்கலம் பிட்டி - புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் வைத்து மன்னார் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் நேற்று சனிக்கிழமை காலை திடீர் சுகயீனம் காரணமாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மன்னார் எருக்கலம்பிட்டி தர்கா நகர் பகுதியைச் சேர்ந்த ரம்ஸான் (வயது-29) என தெரிய வந்துள்ளது.

மன்னார் எருக்கலம்பிட்டி பகுதியைச் சேர்ந்த இருவர் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு ஓட்டோவில் புதுக்குடியிருப்பு பகுதிக்குச் சென்று மீண்டும் எருக்கலம்பிட்டி கிராமத்தை நோக்கி வந்துள்ளனர்.

இதன்போது எருக்கலம்பிட்டி-புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட மன்னார் பொலிஸார் ஓட்டோவை வழிமறித்து சோதனையிட்ட நிலையில் போதைப்பொருள் வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் குறித்த இருவரையும் கைது செய்து மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இந்த நிலையில் இருவரையும் நேற்றுக் காலை மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்ட நிலையில் ரம்ஸான் என்ற இளம் குடும்பஸ்தருக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட இளம் குடும்பஸ்தரை மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையில் நேற்று சனிக்கிழமை காலை பொலிஸார் அனுமதித்தனர்.

இந்த நிலையில் குறித்த நபர் மாவட்ட பொது வைத்திய சாலையில் உயிரிழந்தார்.

குறித்த நபர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் வைத்து கடுமையாக தாக்கப்பட்ட நிலையில் உயிரிழந்திருக்கக் கூடும் என உறவினர்கள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

இந்த நிலையில் சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொது வைத்திய சாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# டெங்கு நோயாளர் எண்ணிக்கை வீழ்ச்சி

கொழும்பு, ஒக். 03

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்தாண்டு டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்தாண்டு டிசெம்பர் மாதம் வரையில் 28,025 டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்ததோடு, இந்த வருடம் செப்ரெம்பர் வரையான காலப் பகுதியில் 12,916 பேர் மாத்திரமே டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஒழிப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# யாழ். மத்திய பஸ் நிலையத்துக்குள் பஸ் மோதி வயோதிப மாது மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 03

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தினுள் இடம்பெற்ற பஸ் விபத்தில் வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று காலை பஸ் நிலையத்துக்குள் நுழைந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ், பஸ் நிலைய வளாகத்தினுள் நின்ற வயோதிப பெண்ணொருவரை மோதியது.

விபத்தில் படுகாயமடைந்த வயோதிபப் பெண்ணை அங்கிருந்தவர்கள் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

சுமார் 30 நிமிடங்களுக்கு மேல் குறித்த வயோதிப பெண்ணுக்கு அதிதீவிர சிகிச்சை வழங்கப்பட்ட போதிலும், சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார்.

உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சவ அறையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# மத்திய வங்கியின் யோசனையால் வாகனங்கள் விலை குறையலாம்?

கொழும்பு, ஒக். 03

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் தாங்கள் விரும்பிய வாகனங்களை நாட்டுக்கு கொண்டுவரும் போது, அவர்களுக்கு சலுகையொன்றை வழங்குவது தொடர்பில் இலங்கை மத்திய வங்கி கவனம் செலுத்தியுள்ளது.

அவ்வாறு வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் நாட்டுக்கு வாகனங்களை கொண்டு வரும்போது அதற்காக அறவிடப் படும் வரிகளை டொலரில் செலுத்துவது குறித்தும் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக தான் முன்வைத்துள்ள யோசனைக்கு இலங்கை மத்திய வங்கி அனுமதி வழங்கும் என பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் தொலவத்த தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டம் நடைமுறைக்கு வரும்போது, நாட்டில் வாகனங்களின் விலை குறைவடையும் என்பதோடு, டொலர் பிரச்னைக்கும் தீர்வு கிடைக்குமென அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நீர்வீழ்ச்சியில் ஆபாச வீடியோ; ஜோடிக்கு ஒத்திவைத்த சிறை!

கொழும்பு, ஒக். 03

பஹந்துடாவ நீர்வீழ்ச்சியில் ஆபாச வீடியோ பதிவு செய்து, இணையத்தில் வெளியிட்டதற்காக கைது செய்யப்பட்ட ஜோடிக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பலாங்கொடை நீதவான் நீதிமன்றத்தில் அந்த ஜோடி குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து, அவர்களுக்கு ரூபா 10,800 அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன், 7 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 3 மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

முடக்க காலப்பகுதியில் பஹந்துடாவ நீர்வீழ்ச்சிக்கு சென்ற இந்த ஜோடி, அங்கு ஆபாச வீடியோவை பதிவு செய்தனர். பின்னர் அதை ஆபாச இணையங்களுக்கு விற்றதாக குற்றம்சாட்டப்பட்டது. அத்துடன், சமூக ஊடகங்களிலும் அதை வெளியிட்டனர். இந்த ஜோடி, ஏற்கனவே பல ஆபாச வீடியோக்களை உருவாக்கி விற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

எல்பிட்டியைச் சேர்ந்த 24 வயது பெண்ணும், மகரகமவைச் சேர்ந்த 34 வயது ஆணுமே கைது செய்யப்பட்டிருந்தனர்.

# ஐஸ் போதைப்பொருளைக் கடத்திய இரண்டு பேர் முருங்கனில் சிக்கினர்

மன்னார், ஒக். 03

10 கிலோ கிராமுக்கு அதிகமான ஐஸ் (மெத்தாம்பேட்டமைன்) போதைப்பொருள் வைத்திருந்ததற்காக முருங்கன் பொலிஸ் நிலையத்துக்கு அண்மையாக வைத்து இரண்டு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு பாரவூர்தி ஒன்றில் போதைப் பொருள் கொண்டு செல்லப்படுவதாக பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்ததும், சோதனைச் சாவடியில் வாகனங்களை சோதனையிடப்பட்டன.



இருப்பினும், பாரவூர்தி பொலிஸாரின் சமிக்ஞையை மீறிப் பயணித்த நிலையில் துரத்திச் சென்று முன்னே டுக்கப்பட்ட சோதனையில் பாரவூர்தியிலிருந்து ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

வவுனியாவைச் சேர்ந்த 30 மற்றும் 42 வயதுடைய சந்தேக நபர்களே கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# சஜித் அணிக்குள் மோதல்!

## 5 ஆக உடையுமா ஐக்கிய மக்கள் சக்தி?



**கொழும்பு, ஒக். 03**

**ஐக்கிய மக்கள் சக்தியின் 53 பாராளுமன்ற உறுப்பினர்களும், ஐந்து அணிகளாக பிரிந்து செயற்படுவதால் கட்சிக்குள் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.**

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, கட்சியின் முகாமைத்துவக்குழு மற்றும் அரசியல் குழுவால் எடுக்கப்படும் தீர்மானங்களின் பிரகாரம் செயற்படாமல் தன் னிச்சையாக செயற்படுவதாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

தலைமைத்துவம்மீதான அதிருப்தி காரணமாக பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி கட்சி செயற்பாடுகளில் பங்கேற்பதில்லை எனக் கூறப்படுகின்றது.

பதுளை மாவட்ட தலைமைத்துவம் தொடர்பில் சமிந்த விஜேசிறி, சமரவீர ஆகியோருக்கும், இரத்தினபுரி மாவட்ட தலைமைத்துவம் தொடர்பில் ஹேஷ விதான கேயுக்கும், தலதா அத்துகோரளவுக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, சம்பிக்க ரணவக்க 43 ஆம் படையணி எனும் அரசியல் இயக்கத்தை செயற்படுத்தி வருகின்றார். இவருடன் சில எம்.பிக்கள் செயற்பட்டு வருகின்றனர்.

மேலும் சில எம்.பிக்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சு நடத்தி வருகின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் தமிழ், முஸ்லிம் கட்சிகளும் தனிவழி செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# நவம்பர் 12 இல் பட்ஜெட்

கொழும்பு, ஒக். 03

2022 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் நவம்பர் 12 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவாலேயே பட்ஜெட் இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டு திட்டங்கள் அறிவிக்கப்படும்.

அதன்பின்னர் பட்ஜெட் மீதான விவாதம் ஆரம்பமாகும். டிசெம்பர் 10 ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்படும்.

பாராளுமன்றத் ஒக்ரோபர் 4ஆம் திகதி கூடும்போது ஒதுக்கீட்டுச் சட்டமூலமும் முன்வைக்கப்படவுள்ளது.

அதேவேளை, பஸில் ராஜபக்ஷவால் முன்வைக்கப்படும் பட்ஜெட்டை, அலாவுதீனின் அற்புத விளக்கு என ஆளுங் கட்சி உறுப்பினர்கள் வர்ணித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்த மாத இறுதிக்குள் பாடசாலைகள் திறப்பு



கொழும்பு, ஒக். 03

இம்மாத இறுதிக்குள் முன் பாடசாலைகளை திறப்பதே எமது இலக்கு என கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொரோனா பரவல் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதை அடுத்து படிப்படியாக நாட்டை மீளத் திறக்கவேண்டிய நிலை உள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

அதனடிப்படையில் கட்டம் கட்டமாக பாடசாலைகளை திறக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அதன் ஒரு அங்கமாக முன் பாடசாலைகளை திறக்க தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

# இளைஞர்களில் பெரும்பான்மையானவர்கள் கொரோனா தடுப்பூசி போடுவதற்கு தயக்கம்

கொழும்பு, ஒக். 03

20 முதல் 30 வயதிற்குட்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள், கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசிகளைப் பெற தயங்குவதாக அரச மருத் துவ அதிகாரிகள் சங்கம் கூறுகிறது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் செனல் பெர்னாண்டோ, 20 முதல் 30 வயதுக்குட்பட்ட 3.3 மில்லியன் இளைஞர்களில் சிறு தொகையினருக்கு மட்டுமே இதுவரை தடுப்பூசி போடப்பட்டுள்ளது என்றார்.

தங்களையும் தங்கள் அன்புக்குரியவர்களையும் பாதுகாப்பதற்காக இளைஞர்களுக்கு விரைவில் தடுப்பூசி போடுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களை அனைத்து குடிமக்களும் தொடர்ந்து கடைப்பிடித் தால் மற்றொரு முடக்கத்தின் நிகழ்தகவு தவிர்க்கப்படும் என்று அவர் கூறினார்.

கடந்த காலத் தவறுகளின் பாடங்களைக் கற்றுக் கொள்ள வும், அமைச்சினால் வழங்கப் பட்ட விதிமுறைகளை கடை பிடிக்கவும் அவர் பொதுமக்க ளுக்கு அழைப்பு விடுத்தார்.

# மேலும் இலட்சம் பைசர் தடுப்பூசிகள் இலங்கைக்கு




கொழும்பு, ஒக். 03

மேலும் ஒரு தொகுதி பைசர் தடுப்பூசிகள் இலங்கையை வந்தடைந்துள்ளன.

மேலும் 400,000 பைஸர் தடுப்பூசிகள் நேற்று முன் தினம் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டன.

இதற்கமைய இந்த வாரத்தில் 8 இலட்சம் பைஸர் தடுப்பூசிகள் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

கொவெக்ஸ் திட்டத்தின் கீழ் குறித்த தடுப்பூசி தொகை நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய அமெரிக்காவிலிருந்து இதுவரையில் 2.4 மில்லியன் தடுப்பூசிகள் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளன

# 5 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை நீடிப்பு!

கொழும்பு, ஒக். 03

நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய வானிலை காரணமாக 05 மாவட்டங்களின் சில பிரதேச செயலக பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில் அந்த எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

காலி, களுத்துறை, கண்டி, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் சில பிரதேசங்களுக்கே இவ்வாறு மண்சரிவு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மதுபோதையில் வாகனம் செலுத்திய 188 பேர் கைது

கொழும்பு, ஒக். 03

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவானது நேற்று முன் தினம் தளர்த்தப்பட்ட நிலையில் மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில் 188 பேர் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இதனைத் தெரிவித்தார்.

நேற்று முன் தினம் இரவு 10 மணிமுதல் 12 மணிவரை மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பொதுமக்கள் இவ்வாறு சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றாமல் நாட்டு சட்டதிட்டங்களைப் பொருட்படுத்தாமல் நடந்துகொள்ளவேண்டாம் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.



# மலையகத்தில் கடும் மழை

கொழும்பு, ஒக். 03

நுவரெலியாவில் பெய்துவரும் கடும் மழை காரணமாக மாவட்டத்தின் பல பகுதிகளில் வெள்ள அனர்த்தம் ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது.


இதன் காரணமாக சுமார் 10 வர்த்தக நிலையங்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு, நுவரெலியா - ஹற்றன் பிரதான பாதையிலும் சில இடங்களில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

மேலும் வான் ஒன்றின் மீதும் மண் திட்டொன்றும் சரிந்து வீழ்ந்துள்ளது. இதில் தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றபோதிலும் குறித்த வீதியின் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

மலையகத்தில் நிலவி வரும் மழையுடனான வானிலை காரணமாக சாரதிகள் மிகவும் அவதானமாக பயணிக்குமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.




# ஸ்டாலின் ஆட்சிக்கு மக்கள் தீர்ப்பாகும் உள்ளாட்சி தேர்தல்கள்!



- பகவான் சிங் -
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

ஒக்ரோபர் ஆறாம் திகதி தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல் நடக்க இருக்கிறது. நாடாளுமன்றம், சட்டமன்றத்துக்கு அடுத்ததாக இந்திய ஜனநாயகத்தின் மூன்றாம் அடுக்கு இந்த உள்ளாட்சி அமைப்பு. ஏற்கனவே இருந்த மாவட்டங்களிலிருந்து உருவான புதிய ஒன்பது மாவட்டங்களில் மட்டுமே தேர்தல் நடக்க இருப்பதால் இது வழக்கமானது, சிறிய விஷயம் என்று நாம் இதைப் புறந்தள்ளிவிடலாம். ஆனாலும், மு. க. ஸ்டாலின் தலைமையிலான ஐந்து மாத திமுக ஆட்சிக்கான மக்கள் தீர்ப்பாகவே அரசியல் கட்சிகளும் செய்தி ஊடகங்களும் இந்த தேர்தலைப் பார்க்கின்றன என்றே மக்களும் நினைக்கின்றனர்

1956இல் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்ற பெயரில் எனது மாநிலம் உருவாக்கப்பட்டபோது 13 மாவட்டங்கள் மட்டுமே இருந்தன. 1969இல் தமிழ்நாடு என்று பெயர் மாற்றப்பட்டது. இப்போதைய தமிழ்நாட்டில் 38 மாவட்டங்கள் இருக்கின்றன.

140 மாவட்ட கவுன்சிலர்கள், 1381 யூனியன் கவுன்சிலர்கள், 2901 பஞ்சாயத்து தலைவர்கள், 22581 பஞ்சாயத்து கவுன்சிலர்கள் உட்பட, வரவிருக்கிற உள்ளாட்சித் தேர்தல்களின்மூலம் 27,003 இடங்கள் நிரப்பப்படும் என்று மாநில தேர்தல் கமிஷனால் அறிவிக்கப்பட்டது. உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தும் தமிழ்நாடு மாநில தேர்தல் கமிஷனால் ஒதுக்கப்படும் சின்னங்களில் போட்டியிடும் பஞ்சாயத்து கவுன்சி லர் வேட்பாளர்களைத் தவிர, மற்ற அனைவருமே கட்சிசார்ந்த சின்னங்களின் கீழ் போட்டியிடுவார்கள். நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தல்கள் இந்திய தேர்தல் கமிஷனால் நடத்தப்படுகின்றன.



சுயேச்சை வேட்பாளர்களைத் தவிர, இந்தத் தேர்தலில் ஏழு முனைகளில் போட்டி நடக்க இருக்கிறது. திமுக மற்றும் அதிமுகவுக்கு இடையேதான் முக்கிய போட்டி என்பது தெரிந்ததுதான். ஆனாலும் இது உள்ளாட்சித் தேர்தல் என்ப தால், சில உள்ளூர்க் காரணங்களால் சிறு கட்சிகளும் இடம்பிடிக்க வாய்ப்பு இருக்கிறது. கமல்ஹாஸனின் மக்கள் நீதி மய்யம், சீமானின் நாம் தமிழர் கட்சி, நோயுற்ற நடிகர் விஜயகாந்த்தின் தேசிய முற்போக்கு திராவிட கழகம், மருத்துவர்.எஸ். ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சி ஆகிய கட்சிகள் தனித்துப் போட்டியிடுகின்றன. மதுராந்தகம் அருகே சிட்டமூரில் 'புகழ்பெற்ற' சாமியார் பங்காரு அடிகளார் தனது மனைவி லட்சுமி பங்காருவை வேட்பாளராக நிறுத்தியிருக்கிறார்.

தேர்தல்களில் திமுகவிடம் தோல்வி அடைந்ததோடு, ஜெயலலிதாவின் மரணத்திலிருந்தே (டிசம்பர் 2016) அஇஅதிமுகவுக்கான மக்கள் ஆதரவு குறைந்துவிட்டது என்பது உறுதியாக முடிவானது.

ஜெயலலிதாவின் ஊட்டி கொடநாடு எஸ்டேட்டில் ஏப்ரல் 2017இல் நடந்த கொலைகளைப் பற்றிய வழக்கை மீண்டும் தொடங்க இருப்பதாக ஸ்டாலின் அரசு முடிவெடுத்திருப்பதும், குற்றம்சாட்டப்பட்ட இருவர், இந்தக் கொலைகளை நடத்தியது அப்போதைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிதான் என்று கூறியிருப்பதும் மாநில அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. எடப்பாடியின் அரசியல் எதிர்காலம், ஏன் அஇஅதிமுகவின் எதிர்காலமும் இதனால் இருண்டுபோயிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் எதிர்காலம் இறந்துபோனதுபோல் தோன்றுகிறது. போலீஸ் விசாரணையை நிறுத்தி வைக்க நீதிமன்றத்தில் அஇஅதிமுக எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன.

ஓ.பன்னீர் செல்வம், ஜெயலலிதாவின் தோழி சசிகலா, அம்மா மக்கள் முன்னேறக் கழகம் (அமமுக) என்ற கட்சியை நடத்திவரும் டிடிவி தினகரன் ஆகியோருக்கு இடையில் சமரசப் பேச்சுவாரத்தை நடந்துவருவதாக ஒரு செய்தி நிலவுகிறது. இந்த சூழல், அஇஅதிமுகவின் நிலையை மேலும் குழப்பத்தில் தள்ளியிருக்கிறது.

எதிர்க்கட்சியில் இதுபோன்ற விஷயங்கள் நடப்பது ஸ்டாலினுக்கு நிச்சயம் மகிழ்ச்சியாக இருக்கக்கூடும். தான் பின்வாங்குவதாக யாரும் நினைக்கக் கூடாது என்பதால், உள்ளாட்சித் தேர்தல்களில் எடப்பாடி தீவிரமாகப் பிரச்சாரம் செய்துவருகிறார். ஏப்ரலில் சட்டமன்றத் தேர்தலின்போது தந்த வாக்குறுதிகளை

## தீவிரவாத நடவடிக்கைகளை கண்காணிக்க காவல்துறையை பணிக்கிறார் ஆளுநர்

எடப்பாடி கே. பழனிசாமி தலைமையிலான அஇஅதிமுக அரசு பதவியில் இருந்தபோது, டிசம்பர் 2019இல் மற்ற 29 மாவட்டங்களுக்கும் உள்ளாட்சித் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. அஇஅதிமுகவை விட திமுக அதிக இடங்களில் வெற்றிபெற்று, இறுதிக் கணக்கெடுப்பில் அஇஅதிமுக இரண்டாம் இடத்தைப் பிடித்தது. "இது, மக்கள் சக்தி. மாநில தேர்தல் கமிஷனையும் அதிகாரத்தால் வளைக்க நினைக்கும் அரசின் அராஜகங்களையும் துஷ்பிரயோகத்தையும் மீறி, மக்கள் சக்தி எழுந்திருக்கிறது" என்று மகிழ்ச்சியுடன் மு. க. ஸ்டாலின் குறிப்பிட்டார்.

அந்தத் தோல்வியின்போதும் அஇஅதிமுக தலைமை ஒரு வெற்று தைரியத்தை வெளிக்காட்டிக் கொண்டது என்பதை நான் நினைத்துப் பார்க்கிறேன். நாடாளுமன்றத் தேர்தலின்போது அஇஅதிமுகவால் 39 இடங்களில் ஓர் இடத்தை மட்டுமே பிடிக்க முடிந்தது, திமுகவோ 38 இடங்களைப் பிடித்திருந்தது. அதிலிருந்து இது ஒரு முன்னேற்றம் என்று அஇஅதிமுக கொண்டாடியது. ஏப்ரல் 2021 சட்டமன்றத் ஸ்டாலின் நிறைவேற்றவில்லை என்று உள்ளாட்சித் தேர்தல் பிரச்சாரத்தில் குற்றம் சாட்டுகிறார்.

ஏற்கனவே தன் அரசு நிறைவேற்றிய உறுதிமொழிகளைப் பட்டியலிட்டு எடப்பாடிக்கு பதிலடி கொடுக்கும் ஸ்டாலின், அடுத்தடுத்த உறுதிமொழிகள் விரைவில் நிறைவேற்றப்படும் என்றும் கூறுகிறார். ஆனால், எடப்பாடி தலைமையிலான முந்தைய அரசு கிட்டத்தட்ட கஜானாவைக் காலி செய்துவிட்ட நிலையில், பொருளாதாரத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற மட்டுமே இந்த பிரம்மாண்ட சட்டங்களைக் கொண்டு வருவது கடினம் என்று நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் நினைக்கிறார்.

நிதி கட்டுப்பாடுகளால் தேர்தல் பிரச்சாரத்துக்கு உதவ முடியாத நிலையில், அரசியல் யுத்திகளும் வெளிப்படையான செயல்திறன் உள்ள நிர்வாக செயல்பாடுகளுமாக ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரத்தில் களம் இறங்கியுள்ளார். புதன்கிழமையன்று தர்மபுரி மாவட்டம் அதியமான்கோட்டையில் உள்ள ஒரு காவல் நிலையத்துக்குச் சென்ற ஸ்டாலின், அங்கு திடீர் ஆய்வு மேற்கொண்டார் (வேறு எந்த முதலமைச்சரும் இப்படி செய்ததாக எனக்கு நினைவில்லை). அரசு ஒப்பந்தங்களில் எந்த கமிஷனும் இருக்கக் கூடாது என்றும் எல்லா அரசு பணப்பரிவர்த்தனைகளும் இணையத்தில் ஏற்றப்பட்டு மக்கள் பார்வைக்கு வைக்கப்படவேண்டும் என்பதில் அவர் பிடிவாதமாக இருப்பது பல மூத்த அமைச்சர்களுக்குப் பிடிக்கவில்லை என்பதும் ஊரறிந்த ரகசியம்தான் (வேறு எந்த முதலமைச்சரும் இதை வலியுறுத்தியதாகவும் எனக்கு நினைவில்லை).

கோவிட் பிரச்னையால் இந்த உள்ளாட்சித் தேர்தல்களைத் தள்ளிவைக்கவேண்டும் என்று ஆளுங்கட்சியான திமுக தேர்தல் கமிஷனுக்குக் கோரிக்கை வைத்தது பரவலாக விவாதிக்கப்பட்டது. செப்ரெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னால் இந்தத் தேர்தல்களைப் பற்றிய தீர்ப்பை உச்சநீதிமன்றத்திடம் அஇஅதிமுக வாங்கிவிட்டது. "கோவிட் சமயத்தில் நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத் தேர்தல்களையே நடத்தினீர்கள், இப்போது என்ன பிரச்சனை?" என்று உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாததால் மக்கள் கேள்வி கேட்பார்கள் என்ற பயத்தாலேயே திமுக தலைவர் தேர்தலைக் கண்டு பயந்து ஒடுகிறார் என்று அஇஅதிமுகவினர் கூறிவரும் நிலையில், அதுபற்றி மூத்த திமுக பிரமுகர் ஒருவரிடம் பேசினேன். "உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதில் எங்களுக்கு எந்த பிரச்னையும் கிடையாது. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு என்ன செய்தோம் என்று மக்களிடம் சொல்வதிலும் எந்தத் தயக்கமும் கிடையாது. ஆனால், அஇஅதிமுக கட்சி சீர்குலைந்து இருக்கிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்கும் தீர்மானத்தை முதல்வர் ஏற்கனவே சட்டசபையில்

## எடப்பாடியின் அரசியல் எதிர்காலத்தில் இருள் சூழ்கிறது

நிறைவேற்றிவிட்டார். ஏழைகளுக்கும் கிராமப்புற மாணவர்களுக்கும் எதிரான இந்தத் தேர்விலிருந்து விரைவில் விலக்கு வாங்குவோம். அந்தத் தேர்தல் வாக்குறுதியையும் நிறைவேற்றுவோம்" என்று அவர் கூறினார்.

ஓ. பன்னீர்செல்வத்தின் ஊடல், கொடநாடு பிரச்னையைத் தவிர, நெடுநாள் ஆதரவாளரான ராமதாஸ் கூட்டணியிலிருந்து விலகியது பற்றியும் ஈபிஎஸ் (எடப்பாடி) கவலைப்படவேண்டியிருக்கும். உள்ளாட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிட இருப்பதாக மருத்துவர் அறிவித்திருக்கிறார். "அடி ஆழத்திலிருந்தே வளர்ச்சியடைய விரும்புகிறோம்" என்று அவர் கூறி உள்ளார். தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் வலுவான ஆதரவு கொண்ட வன்னியர் கட்சியான பாமக கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஏற்கனவே மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு உள்ள 20வீத இட ஒதுக்கீட்டோடு வன்னியர்களுக்குக்கான 10.5வீத உள்ஒதுக்கீட்டையும் தேர்தலுக்கு முன்னதாக அப்போதைய முதல்வர் எடப்பாடி கே பழனிச்சாமி வழங்கினார்.

தனது இன்னொரு நட்புக்கரமான பாஜகவைப் பற்றியும் அஇஅதிமுக கவலைப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. காவிக்கட்சியைப் பல தமிழ்மக்கள் வடக்கின் இந்தி பெல்ட்டிலிருந்து வந்த ஒரு அந்நிய சக்தியாகவே பார்க்கிறார்கள். சென்ற மாதம் உள்துறை அமைச்சர் அமித்ஷா, "அவரவர் தாய்மொழியோடு இந்தியையும் பயன்படுதுவேன் என்று இந்திய மக்கள் எல்லாரும் உறுதிமொழி எடுத்துக்கொள்ளவேண்டும், அப்போதுதான் இந்தியா முன்னேறும்" என்று தெரிவித்திருப்பது, தமிழ் மக்களிடையே கசப்பை ஏற்படுத்தியுள்ளது, இதுபோன்ற நிகழ்வுகள் பாஜகவின் நட்புக்கட்சிகளுக்குத் தேர்தலில் எதிராகவே முடியும்.

இன்னொரு புறம் திமுக, காங்கிரஸ், மதிமுக, சிபிஐ,சிபிஎம், விசிக, முஸ்லீம் லீக், மமக, கொங்கு நாடு மக்கள் கட்சி ஆகிய கட்சிகள் இணைந்து செயல்படுகின்றன.

(18ஆம் பக்கம் பார்க்க)

**ஆளும் தரப்புக்குள் தற்போது மோதல் நிலை. என்றாலும் கடைசி நிமிடம் வரை இன்று போர்க் கொடி பிடிக்கின்றவர்கள் சிறு கட்சிகள் அரசிலிருந்தும், பதவிகளில் இருந்தும் வெளியேற வாய்ப்புக்கள் இல்லை. பிரதமர் அரசை விமர்சனம் பண்ணுபவர் வெளியேறலாம் என்று சொன்னாலும் யாரும் அப்படிப் போக மாட்டார்கள்.**

**நஜீப் பின் கபூர்**





# ‘மொட்டு’ அணிக்குள் பனிப்போர் தீவிரமடையுமா? தணிந்துபோகுமா?

எதிரியின் எதிரி நண்பர்களாவதும், தேர்தல் காலங்களில் முரன்பாடான குழுக்கள் அதிரடியான அரசியல் கூட்டுக்களை ஏற்படுவதும் தேர்தலுக்குக்குப் பின் கூட்டணி கட்சிகளை கருவேப் பிள்ளை போல் தூக்கி எறிவதும் வழக்கமான சங்கதிகள்தான். நமது அரசியலை எடுத்துக் கொண்டால் ஜனாதிபதித் தேர்தல்களில் இதுவரை பெரும்பாலும் சிறுபான்மைக் கட்சிகள் -சமூகம் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களையே தொடர்ச்சியாக ஆதரித்து வந்திருக்கின்றது. அபூர்வமாக ஓரிரு சந்தர்ப்பங்களில் மாற்றமாகவும் இந்தக் ஆதரவுகள் அமைந்திருந்ததும் உண்டு.

பொதுத் தேர்தல் என்று வரும் போது வடக்கிலுள்ள கட்சிகள் தென்னக கட்சிகளுடன் கூட்டுக்களை அமைத்துக் கொள்வதில்லை. அதற்கான தேவைகளும் அவற்றுக்குக் கிடையாது. ஆனால் தேர்தலின் பின்னர் தமிழ் கட்சிகள் தெற்கு அரசியல் சம நிலையை மாற்றியமைப்பதில் அவ்வப்போது பாரிய பங்களிப்புக் செய்து வந்திருக்கின்றன. ஆனால் அதற்கான அறுவடைகளை இவர்கள் பெற்றுக் கொண்டார்களா? அல்லது வடக்கு கிழக்கு தமிழ் சமூகத்துக்கு இந்த ஒத்துழைப்புக்கு கைமாறுதல்கள் நடந்திருக்கின்றனவா என்று பார்த்ததால் அதற்கும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

போருக்கு முன்பும் பின்பும் இப்படித்தான் இந்தக் கூட்டுக்கள் அமைந்திருந்தன. உத்தியோகப்பூர்வமான கூட்டுக்கள் அமையாவிட்டலும் மக்கள் உணர்வுகள் அப்படித்தான் அமைந்திருந்தன. எனவே பல சந்தர்ப்பங்களில் வடக்கு கிழக்கு அரசியல் தலைமைகளின் வழிகாட்டலில் இருந்து தமிழ் மக்கள் விலகிப் போய் இருந்தனர் என்பதுதான் எமது அநுமானம். இது ஆரேக்கியமான ஒரு நிலை என்று நாம் கருதவில்லை. ஆனால் நிகழ்வுகள் அப்படித்தான் அமைந்திருந்தன.

ஏனைய சிறுபான்மைக் கட்சிகளான முஸ்லிம் தனித்துவக் கட்சிகள் என்று சொல்லிக் கொள்ளும் கட்சிகளும் மலையகக் கட்சிகளும் அனேகமாக தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் வலுக்கட்டாயமாகப் போய் ஒட்டிக் கொள்ளும் நிலை இருந்தது. தேர்தல் முடிவுகளுடன் தனது கூட்டு அதிகாரதுக்கு வந்தால் அங்கு அமைச்சுக்களை வாங்கிக் கொண்டு தமது வழக்கமான வியாபாரத்தை செய்து கொண்டிருப்பார்கள். தான் தேர்தலில் நின்ற கூட்டு அதிகாரத்தைக் கைப்பற்றத் தவறினால் சமூக நலனுக்காக என்று காரணம் சொல்லிக் கொண்டு தாம் ஆளும் தரப்புக்குப் போய் அமர்வதில் அவர்கள் ஆர்வமாக இருப்பார்கள். அங்கு போய் அமைச்சுக்களை வாங்கி அங்கேயும் தமது வர்த்தகத்தை வெற்றிகரமாக செய்து கொள்வார்கள்.

இதே காரியத்தை அன்று சௌம்மிய முர்த்தி தொண்டமான், அஷ்ரஃப் போன்றவர்களும் செய்தார்கள். அதன் மூலம் தமது சமூகங்களுக்கும் அவர்கள் பாரிய நண்மைகளைப் பெற்றுக் கொடுத்தார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால் சமகாலத்தில் இப்படியான தனித்துவம் பேசுகின்ற அரசியல் கட்சிகள் சுயநலத்துக்கே தமது காட்சி தாவல்களை செய்து வருகின்றனர் என்பது இன்று தெளிவாக நிரூபனமாகி இருக்கின்றது. இதனால் அந்த அரசியல் கட்சிகள் மீது மக்கள் மிகுந்த வெறுப்பில் இருக்கின்றார்கள். இருபதுக்கு வாக்களித்தன் விளைவைத்தான் இன்று ஒட்டுமொத்த சமூகமும் அனுபவித்துக் கொண்டு வருகின்றது. இந்த இடத்தில் அந்தக் கட்சி பிரதான கட்சிகளை கருவப் பிள்ளையாக தூக்கி எறிந்து விட்டு வந்திருக்கின்றனர். இது நமது கடந்த சமகால அரசியல் கலாச்சாரமாக இருந்து வருகின்றது.

தெற்கில் தற்போது மிகப் பெரிய கொள்ளைகளை அரசியல் வாதிகளும் அரசாங்கத்தால் உயர் பதவிக்கு அமர்த்தி இருக்கிற அதிகாரிகளும் செய்து கொண்டு வருகின்றனர். இதற்கு நல்ல ஒரு உதாரணம் தான் நாட்டில் நடக்க இருந்த வெள்ளைப் பூடு கொள்ளையாகும். 120 ரூபாவுக்கு வாங்கிய பூட்டை 155 ரூபாவுக்கு விற்று, அதனை அவர்களிடமே 445 ரூபாவுக்கு வாங்கிக் கொள்ளை அடிக்கின்ற திட்டத்தின் மூலம் கோடிக் கணக்கில் பணம் சம்பதிக்கும் முயற்ச்சி, கடமையில் இருந்த சதோச நிருவனத்தின் பணிப்பாளர் ரொசன் குனரத்தினாவின் முயற்ச்சியால் இந்தக் கொள்ளை தடுக்கப் பட்டிருக்கின்றது.

இதனை அம்பலப்படுத்திவிட்டு அவர் பதவியையும் இராஜிநாமச் செய்திருக்கின்றார். இது பற்றி ஊடகங்கில் எழுதிய பத்திரிகையாளர்களுக்கு தற்போது நெருக்கடிகள் கொடுக்கப் படுகின்றது. அத்துடன் இதனை மூடி மறைக்கவும் நடவக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. காரணம் இதற்குப் பின்னால் அரசியல் வாதிகள் இருக்கின்றார்கள் என்று சந்தேகிக்கப்படுக்கின்றது. எனவே இந்த நாட்டில் உச்சியில் இருந்து பாதம் வரை அரசியலை முன்னிறுத்திய பகல் கொள்ளையே நாட்டில் நடந்து கொண்டிருக்கின்றது. எனவே தான் நாம் துவக்கத்தில் நமது அரசியல் எப்படி கலங்கப்பட்ட ஆரம்பித்திருக்கின்றது என்று சொல்லி இருந்தோம்.

ஆளும் தரப்புக்குள் தற்போது மோதல் நிலை. என்றாலும் கடைசி நிமிடம் வரை இன்று போர்க் கொடி பிடிக்கின்றவர்கள் சிறு கட்சிகள் அரசிலிருந்தும், பதவிகளில் இருந்தும் வெளியேற வாய்ப்புக்கள் இல்லை என்பது நமது ஆணித்தனமான கணக்கு. பிரதமர் அரசை விமர்சனம் பண்ணுபவர் வெளியேறலாம் என்று சொன்னாலும் யாரும் அப்படிப் போக மாட்டார்கள். அதன் பின்னர் தனக்கு என்ன நடக்கும் என்று அவர்களுக்குத் தெரியும். முன்னாள் ஜனாதிபதி மைத்திரி நிலை கூட அதுதான். இதனால்தான் நம்மை நினைத்தவாறு வெளியே போட எவருக்கும் உரிமைகள் இல்லை என்று வாசு பேசுகின்றார்.

தனது மாவட்டமான குருனாகலையில் பிரதமரின் புதல்வர் யோசித்த ராஜபக்ஷ ஆதிக்கம் செலுத்த வருவதை சு.கட்சி செயலாளர் தயாசிரி விரும்பவில்லை. எனவேதான் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக சஹ்ரன் பாவித்த கணணியில் மதர்போட் ஏன் வெளியே அனுப்பப்பட்டது அது இருந்திருந்தால் சூத்திரதாரி யார் என்று நாட்டுக்குத் தெரிய வந்திருக்கும் என்று அவர் நெருப்பாக கொதிக்கின்றார். மாகாணசபைத் தேர்தலில் தான் முதல்வர் வேட்பாளராக களமிறங்குவது பற்றியும் அவர் பேசி வருகின்றார்.

இதற்கிடையில் மீண்டும் ஞானத் தேரர் தாக்குதல் ஒன்று பற்றிய தகவல்களை அம்பலப்படுத்தி வருகின்றார். அதன் பின்னர் வத்தளை- கடுவாபிட்டிய கிருஸ்தவ தேவலயம் போன கடற்படை அதிகாரிகள் பாதிரியார் வேடம் பூண்டு தாக்குதல் நடக்க இருப்பது பற்றி அங்கு தகவல்களைச் சொல்லி இருக்கின்றார். ஆனால் அன்று அந்தத் தேவாலயத்துக்கு எந்தப் பாதுகாப்பும் கொடுக்கப்படவில்லை.

இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கின்ற தேசிய பிக்கு முன்னணயின் செயலபளர் வகமுல்லே உதித தேரர் நாட்டில் மீண்டும் ஒரு இனக் கலவரத்தை கட்டவிழ்த்து விடவே சிலர் முனைகின்றார்கள். அதற்காக வன்முறையாளர்களுக்கு அரச சார்பு ஊடகங்களில் அதிக வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வருவதையும் அவர் எச்சரித்திருக்கின்றார். பாதுகாப்புச் செயலாளர் கமல் குனரத்தின தேவாலயத் தாக்குதல் கதையைக் கணக்கில் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை என்று பேசி இருப்பதையும் தேரர் வன்மையாகக் கண்டித்திருக்கின்றார்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த இருபது மாதங்களில் இன்றுவரை 125747 கோடி ரூபா பணம் அச்சடிக்கப் பட்டிருக்கின்றது. கப்ரால் பதவிக்கு வந்த மறுகனமே 4784 கோடி ரூபாய் அச்சாகி இருக்கின்றது. ஆலை உரிமையாளர்கள் அரிசி விலையைத் தீர்மானிப்பது. அரசின் இரகசியத் தகவல்கள் அழிக்கப்படுவதும் நாட்டுக்கு ஆரோக்கியமான நிலை அல்ல. இவற்றின் பின்னயில் பெரும் இரகசியங்களும் மோசடிகளும் கொள்ளை கூட்டங்களும் அவர்களை வைத்து பணம் சம்பாதிக்கின்ற அரசியல் வாதிகளும் நிச்சயம் இருப்பார்கள் என்று கருத இடமிருக்கின்றது. ■

# புலம்பெயர் தமிழருக்கான ஜனாதிபதியின் அழைப்பு தமிழ் அரசியலுக்கு வாய்ப்பாகுமா?

பேராசிரியர் கே. ரீ. கணேசலிங்கம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐ.நா பொதுச் செயலாளருடனான சந்திப்பில் இலங்கையின் தேசிய பிரச்னைகக்கு தீர்வு காண புலம்பெயர் தமிழர்களை பேச்சுக்கு அழைத்தமையானது, தென்னிலங்கை அரசியலிலும் ஈழத்தமிழ் அரசியல் களத்திலும் கடுமையான விவாதங்களை ஏற்படுத்தியுள்ளது. ஈழத்தமிழ் அரசியல் களத்தில் எழுந்துள்ள வாதங்களை முறையாக பகுப்பாய்வு செய்வதும், சரியான முடிவை எடுப்பதும் ஈழத்தமிழர் அரசியல் போராட்டத்தின் ஆரோக்கியமான நகர்வுக்கு அவசியமானதாகும். இந்தக் கட்டுரையும் ஜனதிபதியின் அழைப்புக்கு ஈழத்தமிழ் அரசியல் களத்தில் எழுந்துள்ள விவாதங்களை பற்றிய மதிப்பீட்டை மேற்கொள்வதாகவே அமைக்கப்பட்டுள்ளது.

ஐ. நாவுக்கு சென்ற இலங்கை ஜனாதிபதி, பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் உடனான சந்திப்பில், இலங்கையின் பிரச்னைகளை உள்ளகப் பொறிமுறை ஊடாகத் தீர்க்கப்பட வேண்டுமென்றும் அதற்காக, புலம்பெயர் தமிழர்களுடனான பேச்சுக்குத்தான் அழைப்பு விடுக்கிறார் எனவும் தெரிவித்தார். இந்தக் கருத்து ராஜபக்ஷ அரசாங்கத்தின் வழமையான நிகழ்ச்சி நிரலிலிருந்து முழுமையாக வேறுபட்டதோர் உரையாடலாகும். தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில், இங்கிலாந்து பல்கலைக்கழகமொன்றின் அழைப்பின் பேரில் உரையாற்ற சென்ற வேளை இடம்பெற்ற புலம்பெயர் தமிழர்களின் போராட்டத்தை தேச விரோத செயல் எனச்சுட்டிக்காட்டியிருந்தார். அதுமட்டுமன்றி தற்போதைய ஆட்சியிலும் கடந்த மார்ச் மாதம் புலம்பெயர் தமிழர்கள் மற்றும் அமைப்புக்கள் சார்ந்த நீண்டதொரு பட்டியலை கறுப்புப்பட்டியலாகவும் அறிவித்திருந்தது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் சர்வதேச பொது அரங்கில் புலம்பெயர் சமூகத்தை அழைத்திருப்பது கருத்தில் கொள்ள வேண்டிய விடயமாக உள்ளது. உடனடியாக புறந்தள்ளுவதோ நிபந்தனைகளின்றி வரவேற்பதுவோ ஈழத்தமிழரின் அரசியலுக்கு பொருத்தமானதாக அமையுமென எதிர்பார்க்க முடியாது.

இந்தக் கருத்து மாற்றத்துக்கான காரணங்களை நுணுக்கமாக அவதானிக்க வேண்டும்.

2009ஆம் ஆண்டு ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழர் அரசியல் போராட்டத்தை சர்வதேச மயப்படுத்தியமையில் புலம்பெயர் தமிழ் சமூகத்தின் பங்கு அளப்பெரியதாகும். இவர்களின் பலத்திலேயே எதிர்கால நகர்வுகள் அமைய வாய்ப்பு அதிகமாக உள்ளது. சர்வதேச சமூகத்தினரை இலங்கைத் தமிழர் பக்கம் பார்க்க வைக்கக்கூடிய கைங்கரியத்தை இன்றைய நிலையில் செய்யக்கூடியவர்கள் புலம்பெயர் தமிழர்களே ஆவர். இவர்களின் கையில் ஈழத்தமிழர்களின் இருப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது என்பதுவும், ஈழத்தமிழர் அரசியல் உள்நாட்டு பொறிமுறையையும் பிராந்திய பொறிமுறையையும் கடந்து சர்வதேச பொறிமுறை அரசியலாக 2009இற்கு பின்னர் பரிணாமம் பெற்றுள்ளது. இதுவே, இன்றைய இலங்கை ஆட்சியாளர்களுக்கு எழுந்துள்ள சவாலாகும்.

அதேநேரம் சர்வதேச நலன்களோடு ஈழத்தமிழர் அரசியல் பின்னிப் பிணைக்கப்பட்ட ஒன்றாக உருவெடுத்துள்ளது. சர்வதேசத்திடமிருந்தும் இப்பிரச்னையை விலக்கி கொள்ள வேண்டும் என்று, புலம்பெயர்ந்த ஈழத்தமிழர் தளத்திலிருந்தும் இப்பிரச்னைக்கான முடிவை அடைய வேண்டுமென தென்னிலங்கை ஆட்சியாளர்கள் கருதுகின்றனர். இத்தகைய நோக்குநிலையிலேயே இலங்கை ஜனாதிபதியின் புலம்பெயர் அமைப்புக்களுடான உரையாடலுக்கான அழைப்பு முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால், இத்தகைய அழைப்பை ஈழத்தமிழரின் அரசியல் நலனை மையப்படுத்தி அணுகுவது புலம்பெயர்ந்த அமைப்புக்களுக்குரிய பணியாகும். அதனை விரிவாக நோக்குதல் அவசியமாகும்.

முதலாவது, சர்வதேச அரசியலில் பேச்சு என்பது ஓர் இராஜதந்திர செயன்முறையாகும். அரசுகளை எதிர்கொள்ளவும் அவர்களின் இலக்குகளை அடையவிடாது தடுக்கவும் பேச்சு மூலம் ஒரு சமாதான நல்லிணக்கத்தை ஏற்படுத்தி அக்காலப்பகுதியை கடந்து செல்ல முயல்வதே பேச்சின் உள்ளார்ந்த நோக்கங்களாகும். உலகில் நிகழ்ந்த அதிகமான பேச்சுக்கள் முறிவடைந்தும் தோல்வியடைந்தும் போயுள்ளன. மிகச்சொற்ப அளவிலான பேச்சுகளே குறிப்பிட்ட சக்திகளின் நோக்கத்தை எட்ட உதவியுள்ளது. அத்தகைய பொறிமுறைக்குள்தான் தென்னிலங்கை ஆட்சியாளர்களின் உபாயங்கள் அமைந்திருக்கும் என்பது ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்ல உலகத்திற்கே நன்கு தெரியும்.



சுதந்திர இலங்கையின் வரலாற்றில் நூற்றுக்கணக்கான பேச்சுகள் ஈழத் தமிழ் தலைமைகளுக்கும் - சிங்கள தலைமைகளுக்கும் நிகழ்ந்துள்ளன. ஆனால், ஒரு பேச்சுக்கூட ஈழத்தமிழர்களின் இலக்கை வென்றெடுக்க உதவவில்லை. மாறாக குழப்பங்களும் முறிவுகளும் போர்களுமே நிகழ்ந்துள்ளன. ஆனால், இத்தகைய அனுபவத்துக்காக பேசுவதை தவிர்ப்பது என்பது ஈழத்தமிழ் தரப்பின் இராஜதந்திர செயன்முறையின் பலவீனத்தை வெளிப்படுத்துவதாகவே அமையும். 2009களுக்கு பின்னர் ஈழத்தமிழர்களிடம் உரையாடல் என்ற உபாயம் மட்டுமே வலுவானதாக உள்ளது. எனவே உரையாடல் அவசியமானது.

இரண்டாவது, இத்தகைய உரையாடல்கள் நிபந்தனைகளுக்கூடாக கட்டமைக்கப்படுதல் அவசியமானதாகும். அத்தகைய நிபந்தனை ஈழத்தமிழரின் அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்யக்கூடியதாகும். ஈழத்தமிழர்களை நெருக்கடியிலிருந்து மீட்கக்கூடியதாகவும் அமைதல் அவசியமாகும். அரசியல் பிரச்னைகள் முதல் வாழ்வியல் பிரச்னைகள் வரை இத்தகைய நிபந்தனைகளே முன்னிறுத்தப்பட வேண்டும். உலக நாடுகளின் கண்களில் காணப்படும் சட்டத்தின் ஆட்சியையும் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் முன்னி றுத்தி ஈழத்தமிழர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளை தீர்த்து வைப்பதற்கான வாய்ப்பான விடயங்களை முன்னிறுத்த வேண்டும். போரை நிகழ்த்திய ஆட்சியாளர்களே அதற்கான பொறுப்பையும் தீர்வையும் முன்வைக்க வேண்டும். அத்தகையதொரு வாய்ப்பான காலம் ஈழத் தமிழர்களுக்கு கிடைத்துள்ளது. எனவே, உலகத்தை முன்னிறுத்தி அதன் இயல்பூக்கங்களூடாக செயல்படக்கூடிய நிபந்தனைகளை சாத்தியமாக்கி பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

மூன்றாவது, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருடனான உரையாடலிலேயே இலங்கை ஜனாதிபதி அத்தகைய அழைப்பை முன்வைத்துள்ளார். எனவே, நாடுகளை கடந்து நிறுவனங்களை மையப்படுத்தி நடுநிலைமைக்கான களத்தெரிவுகளை உருவாக்கி பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் சபை அதன் உப பிரிவுகள் மட்டுமன்றி ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அதனை சார்ந்திருக்கக்கூடிய நாடுகள் என்ற அடிப்படையில் நடுநிலைக்கான சக்திகளை அடையாளப்படுத்தி இலங்கை அரசாங்கத்தையும் புலம்பெயர் அமைப்புக்களையும் தரப்புக்களாக கொண்டு உரையாடலை ஆரம்பிப்பது ஈழத்தமிழரின் அரசியலை ஆரோக்கியமான வெளியில் திறப்பதாக அமையும்.

நான்கு, ஈழத்தமிழர்கள் பரப்பில் புலம்பெயர்ந்த அமைப்புக்கள் தனித்தனியாக செயல்பட்டாலும், அவை அனைத்தும் ஒரே நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டவையே ஆகும். அத்தகைய நோக்கத்தை இலக்காக கொண்டு உரையாடலுக்கான தீர்மானங்களை வரைபுகளை முன்வைத்து தெளிவான முடிவுகளோடு பேச்சுக்கான களத்தை அணுகுதல் அவசியம். ஈழத்தமிழ் அமைப்புக்கள் தனித் தனியே இயங்குவதென்பது தொடர்ச்சியாக பேணப்பட வேண்டிய ஒன்று. காரணம், இவை அனைத்தும் ஒரே தலைமையின் கீழ் உள்ளடக்கப்படுமாயின் புலம்பெயர் ஈழத்தமிழரின் தலைமையை கையாள விரும்பும் சக்திகள் இலகுவாக பயன்படுத்தி விட்டு போவதற்கான வாய்ப்பு அதிகமுண்டு. அதுமட்டுமன்றி பல தலைமைகள் சமவலுவோடு இயங்குகின்றபோது இலகுவில் அத்தகைய அமைப்புக்களை அழித்துவிட்டு போக முடியாது. புலம்பெயர் ஈழத்தமிழ் அமைப்புக்ககள் இணைத் தலைமைகளாய் இயங்குவது அவசியமாகும்.

ஐந்தாவது, பேச்சு தொடர்பில் இந்தியாவின் கரிசனை ஆரோக்கியமானதாகவே அமையும். காரணம், கடந்த காலத்தை போலன்றி இந்தியா மேற்கு நாடுகளுடன் நெருக்கமான உறவை பேணி வருகிறது. இந்தியாவின் நலன்களும் மேற்கின் நலன்களும் ஒன்றித்திருக்கின்ற ஓர் உலக ஒழுங்கு காணப்படுகின்றது. அதனால், இந்தியா புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களுடன் இலங்கை உரையாடுவதை நிராகரிப்பதை விடுத்து அதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்க வழிவகுக்கும். அதுமட்டுமன்றி இலங்கை ஆட்சியாளர்களும் இந்தியாவை விடுத்து மேற்கு நாடுகளுடன் இந்த விடயத்தை கையாள முயலுகின்றபோது இந்தி யாவின் பக்கம் புலம்பெயர் ஈழத்தமி ழர்கள் பலமான நட்பு சக்திகளாகவே காணப்படுதல் வேண்டும். நிறுவனங் களை கடந்து நாடுகளின் பட்டியலில் பேச்சு மேசையில் இந்தியாவையே புலம்பெயர் ஈழத்தமிழ் அமைப்புக்கள் முன்னிறுத்த வேண்டும். அதுவே இந்த அரசியலின் ஆரோக்கியமான பயணத் துக்கு உதவக்கூடியது. அந்த வகை சூழல் ஒன்றுக்கான முன்னாயத்தங்களிலும் முடிவுகளிலும் தென்னி லங்கை ஆட்சியாளர்கள் போலன்றி ஈழத்தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் இந்தியாவை அனுசரித்து செயல் படுதல் அவசியமாகும்.

எனவே, இலங்கை ஜனாதிபதியின் அழைப்பு என்பது ஈழத்தமிழருக்கான இராஜதந்திர செயன்முறைக்கு ஆரம்பபடியாகும். இதன்மூலம் ஈழத்தமிழரின் அரசியல் பிரச்னையை உலகமயப்படுத்தவும் நிறுவனமயப்படுத்தவும் அரசுகள் மத்தியில் உரையாடவும் ஒரு வாய்ப்பான சூழல் ஏற்பட்டிருக்கிறது. எனவே, அதனை நோக்கி திட்டமிடல்களுடனும் உபாயங்களுடனும் நகர்வதும் அவசியமானதாகும். ஈழத்தமிழரின் யதார்த்தத்தை புலம்பெயர் ஈழத்தமிழ் அமைப்புக்கள் புரிந்து கொண்டு செயல்படுவது தவிர்க்க முடியாததாகும். ■

- நன்றி - அருவி

# இனமுரண்பாட்டின் காரணங்களை கையாள அரசியல் தீர்வும் இணக்கப்பாடும் அவசியம்



## அமெரிக்கத் தூதுவர் அலைனா பி.ரெப்லிட்ஸ் நேர்காணல்

**“வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் நீதியையும் பொறுப்புக்கூறலுக்கான பொறிமுறையையும் பெற உரித்துடையவர்கள். சகல மக்களுக்கும் பொறுப்புக்கூறும் கடப்பாடுடைய அரசாங்கம் ஒன்று குற்றவியல் முறைப்பாடுகளை மெய்யாகவும் நம்பகத்தன்மையுடனும் விசாரித்து சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குத்தொடுக்க முன்வரவேண்டும்**

**ஏ.யதீந்திரா**

இலங்கையில் தனது பதவிக் காலம் முடிவடைந்து நாடு திரும்பும் அமெரிக்கத் தூதவர் அலைனா பி.ரெப்லிட்ஸ் நீண்டதொரு நேர்காணலை வழங்கியிருக்கிறார். இலங்கையின் தேசியப் பிரச்சினை, சர்வதேச பயங்கரவாதம், கொழும்பு துறைமுக நகரம், இலங்கை - சீன உறவுகள் மற்றும் கடன்சுமை என்று பல பிரச்சினைகள் குறித்து தனது கருத்துக்களை அவர் பகிர்ந்திருக்கிறார். அதிலிருந்து முக்கியமான பகுதிகளை ஈழநாடு வாசகர்களுக்குத் தருகிறோம்.

**கேள்வி:** வடக்கு, கிழக்கில் முதலீடு செய்வதற்கு சீனா அண்மைக்காலமாக அக்கறை காட்டிவருகிறது போலத் தோன்றுகிறது. ஆனால், தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற பெரிய அரசியல் அணியான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அதை கடுமையாக எதிர்க்கிறது. இந்தியாவையும் அமெரிக்காவையும் திருப்திப்படுத்துவதற்காகவே அவர்கள் இத்தகைய நிலைப்பாட்டை எடுக்கிறார்கள் என்ற ஒரு அபிப்பிராயமும் இருக்கிறது. அதேவேளை, முதலீட்டுத் திட்டங்களை ஒரு எல்லைக்கு அப்பால் எதிர்க்கமுடியாது என்ற யாதார்த்தமும் இருக்கிறது. ஏனென்றால், இலங்கைக்கு பாரிய பொருளாதாரத் தேவைகள் இருக்கின்றன. சீனாவின் முதலீடுகள் தொடர்பில் அமெரிக்காவின் பொதுவான அவதானிப்பு என்ன?

**பதில்:** பொருளாதார விளைபயனைக் கொண்டுவரக்கூடியதும் தொழில் வாய்ப்புக்களைத் தோற்றுவிக்கக்கூடியதும் கடன் எடுக்கவேண்டிய தேவை இருந்தால் சமாளிக்கக்கூடிய கடன் சுமையை ஏற்படுத்தக்கூடியதுமே நல்லதொரு முதலீடாகும்.வேறு ஒரு நாடு இலங்கையில் முதலீட்டைச் செய்யும்போது ஒவ்வொரு இலங்கையரும் இந்த முக்கியமான கேள்விகளை கருத்தில் எடுக்கவேண்டியது அவசியமாகும். உறுதியளிக்கப்பட்ட விளைபயனை அது தோற்றுவிக்கின்றதா? அது கொண்டுவருகின்ற கடன்சுமை பெறுமதியானதா? முதலீட்டின் ஒட்டுமொத்த தரம் என்ன?

அமெரிக்க கம்பனிகளும் இலங்கை கம்பனிகளும் உற்பத்தி, தயாரிப்பு புத்தாக்கம் மற்றும் விநியோகச் சங்கிலி ஆகியவற்றில் பல நல்ல முதலீடுகளைச் செய்வதில் சேர்ந்து பணியாற்றுகின்றன. இரு நாடுகளும் தரமான பொருட்களை உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கிறது. இந்த உறவுமுறைகள் இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்புக்களைக் கொடுக்கின்றன. இத்தகைய உணர்வுடனான ஒத்துழைப்பும் கூட்டுச் செயற்பாடும் தராதரங்களை உயர்த்துகின்றன.அமெரிக்காவோ இலங்கையோ இதை தனியாக செய்யமுடியாது. விளைபயன்கள் உண்மை நிலைவரத்தை பிரகாசமாக வெளிக்காட்டுகின்றன. இந்த வர்த்தக உறவுமுறைகள் எமது இரு நாடுகளுக்கும் இடையில் இடையறாது சிந்தனைகளின் பெருக்கத்தை உறுதி செய்கின்றன; முன்னென்றுமில்லாத பலம்பொருந்திய வர்த்தக உறவுகளை கட்டியெழுப்புகின்றன.

உலக வங்கிக்கும் இலங்கைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட அண்மைய உடன்படிக்கையொன்று நல்லதொரு முதலீட்டுக்கு ஒரு உதாரணமாகும். நாடு பூராவுமுள்ள அணைகள் மற்றும் நீர்ப்பாசனத்திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக அந்த உடன்படிக்கை சுமார் 70 மில்லியன் டொலர்களை வழங்குகிறது. இந்த உதவித்திட்டம் வெள்ளப்பெருக்கு,வறட்சி மற்றும் மண்சரிவுகளின் தாக்கத்தை தணிக்கும் என்பதுடன் தண்ணீரின் தரத்தையும் விவசாயிகளின் விளைச்சலையும் மேம்படுத்தும். 356,000 கிராமிய குடும்பங்களுக்கு இது பயனளிக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

மேலும், அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் கடந்த 6 மாதங்களாக இலங்கையின் தனியார் வங்கிகளுக்கு 26 கோடி டொலர்களை வழங்கியி ருக்கிறது. உள்நாட்டு சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறையை வலுப்படுத்து வதற்கும் தனியார்துறை முத லீடுகளை பலப்படுத்துவதற் கும் தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்ற பெண்களுக்கு உதவுவதற்கும் இந்த நிதி பயன்படுத்தப்படுகிறது. தொழில்துறைகளிலும் வர்த்தகத்திலும் பெண்களுக்கு உரிமையும் அதிகாரமும் அளிப்பதன் மூலம் இந்த உடன்படிக்கைகள் பால்சமத்துவத்தை கையாளுகின்றன; சகல தரப்பையும் உள்ளடக்கிய நிதிச் செயற்பாடுகளுக்கான இலக்குகளை அடைய உதவுகிறது பெண்கள் தலைமையிலான தொழில் முயற்சிகளுக்கு ஆதரவை அதிகரிக்கிறது.

எமது நீண்கால தோழமையூடாக, அமெரிக்கா இலங்கையில் விவசாயத்தில் இருந்து கல்வி வரை, சுகாதாரத்தில் இருந்து வீடமைப்பு,நீர் மற்றும் கழிவு நீக்கம்,உட்கட்டமைப்பு மீளமைப்பு, பெரும்பாக தொழிற்துறைக்கு ஆதரவு மற்றும் தொழிற்பயிற்சி வரை பெரும்பாலும் சகல துறைகளிலும் ஆதரவளிக்கிறது.இதுவரையில் இலங்கைக்கு நாம் 350 பில்லியன் இலங்கை ரூபாவை (2 பில்லியன் டொலர்கள் ) வழங்கியிருக்கிறோம்.எமது திட்டங்களில் பெரும்பாலானவை எமது அலுவலர்களான இலங்கை நிபுணர்களினால் வடிவமைக்கப்படுகின்றன. நாம் மக்களுடன்,தனியார்துறையினருன், இலங்கை அரசாங்கத்துடன் நெருக்கமாக பணியாற்றுகிறோம்.எமது உதவிகளில் அதிகப் பெரும்பான்மையானவை கடன்களாக அன்றி நன்கொடையாகவே வருகின்றன.இது இலங்கை மக்களின் நல்வாழ்வில் அமெரிக்காவுக்கு இருக்கும் பற்றுறுதியை உணர்த்துகிறது.

**கேள்வி:** காணாமல் போனோரின் உறவினர்கள் தங்களின் ஆர்ப்பாட்டங்களில் அமெரிக்க கொடியுடன் காணப்பட்டார்கள். இது அமெரிக்கா மீதான அவர்களின் நம்பிக்கையின் சான்றாகும். ஆனால்,மனித உரிமைகள் விவகாரங்களில் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் இதுவரையில் ஏற்படவில்லை என்று தமிழர்கள் மத்தியில் அபிப்பிராயம் ஒன்று இருக்கிறது.இதை அடிப்படையாகக்கொண்டு நோக்குமபோது இலங்கையின் மனித உரிமைகள் பிரச்சினைகளில் அமெரிக்காவின் ஈடுபாடு எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளைத் தரவில்லை என்று கருதமுடியுமா?

**பதில்:** அமெரிக்கா சுதந்திர சமூகங்களையும் மனித உரிமைகளையும் மதிக்கிறது. உள்நாட்டுப் போரின்போதும் இலங்கையின் வரலாற்றில் வேறு கால கட்டங்களிலும் காணாமல்போன சகல சமூகங்களையும் சேர்ந்தவர்களின் குடும்பங்களுக்கு பதில் கிடைக்கவேண்டியது அவசியமாகும். தங்களது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்துகொள்ள இன்னமும் நாட்டம் கொண்டிருக்கும் குடும்பங்களுடனான எனது சந்திப்பு இலங்கையில் பணியாற்றிய காலத்திலான எனது நினைவுகளில் என்றென்றும் நிலைத்திருக்கும். அடிப்படையில் இந்தப் பிரச்சினைகளுக்கு இலங்கையர்களே தீர்வைக்காணவேண்டும். நல்லிணக்கத்தை மேம்படுத்துவது தங்களது சொந்த நலன்களுக்கு உகந்தது என்பதைபெரும்பாலான இலங்கையர்கள் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். இது ஒரு மனிதர்கள் செய்யவேண்டியதாகும். காணாமர்போனவர்கள் எமது அன்புக்குரியவர்களாக இருந்து அவர்களுக்கு நேர்ந்த கதி பற்றியும் பதில் கிடைக்காமல் இருந்தால் எமக்கு எப்படியிருக்கும்?

வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் நீதியையும் பொறுப்புக்கூறலுக்கான பொறிமுறையையும் பெற உரித்துடையவர்கள். இந்த இலக்கை அடைவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை போன்ற பொறிமுறைகள் உதவுகின்றன. சகல மக்களுக்கும் பொறுப்புக்கூறும் கடப்பாடுடைய அரசாங்கம் ஒன்று குற்றவியல் முறைப்பாடுகளை மெய்யாகவும் நம்பகத்தன்மையுடனும் விசாரித்து சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடுக்க முன்வரவேண்டும் என்கிற அதேவேளை, மோதலைத் தோற்றுவித்த அரசியல், பொருளாதார,சமூக பிரச்னைகளுக்கு தீர்வுகாண முயற்சிக்கவேண்டும்.

ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியை அமெரிக்கா வலியுறுத்தும்போது இந்த இலட்சியங்கள் எல்லாவற்றையும் நாம் எமது நாட்டில் கச்சிதமாக கடைப்பிடிக்கிறோம் என்றாகிவிடாது. பெருமளவுக்கு கச்சிதமான ஒன்றியம் ஒன்றை அமைப்பதற்கு நாம் எப்போதும் பாடுபடுகிறோம். உயர்ந்த தராதரங்களை பின்பற்ற முயற்சிக்கிறோம். ஆத்ம பரிசோதனை என்பதும் ஒரு சமுதாயமாக வளர்வது என்பதும் எப்போதுமே சிக்கலானதும் வேதனை மிக்கதுமாகும். ஆனால் இவ்வாறுதான் ஜனநாயகங்கள் செயற்படுகின்றன. ஏனென்றால், இறுதியில் ஆட்சி செய்யப்படுகிறவர்களுக்கு உதவுவதற்கே அரசாங்கங்கள் இருக்கின்றன. சமூகங்கள் அமைதியான முறையில் வளர்வதற்கு உதவுவதே அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

(16 ஆம் பக்கம் பார்க்க...)

# பயணங்கள்!

- மாலி -

4



# திக்குத் தெரியாத காட்டில்...

## போரின் அனர்த்தத்தில் தொடரும் புது வாழ்வு

ஒருபுறம் புதிது; மறுபுறம் உடைவு.

இதுதான் இன்றைய யாழ்ப்பாணம்.

மனதில் அது ஏற்படுத்துகின்ற தாக்கமும் அப்படித்தான்.

சில சமயங்களில் புளகாங்கிதம் சில சமயங்களில் விஞ்சும் வேதனை.

நகருக்கு அணிசேர்த்து, நகரின் தனித்துவ அடையாளச் சின்னங்களாகத் திகழ்ந்த பலவற்றை அங்கு அடையாளம் காண இயலவில்லை.

நகரின் மகுடமாக அழகொளிர்ந்த முற்றவெளியையடுத்த மாநகர சபை சூழ்ந்த பிரதேசம், இடிபாடுகளுடன் புதர்கள் அடர்ந்து, யாழ்ப்பாணத்தின் அதி பாழடைந்த காட்டுப் பிரதேசமாக காட்சியளிக்கிறது. திக்குத் தெரியாத அக் காட்டில் நிஜமாகவே சிறிது நேரம் தவித்துப்போனேன்.

மாநகரசபைக் கட்டடமோ, சுப்பிரமணியம் பூங்காவோ எங்கே என்பது தெரியவில்லை. பாதைகளைக் கண்டு கொள்ள முடியவில்லை.

அந்தப் பற்றைப் புதர்கள் நடுவே, காலத்தின் வடுக்களோடு ஞாலத்துக்கு சாட்சிசொல்ல வானுயர்ந்து நிற்கும் இரண்டு நினைவுச் சின்னங்கள்.

ஈழத் தமிழர்களின் அரசியல் நேர்மையைச் சாற்றி, தந்தை செல்வநாயகத்தின் நினைவுத் தூபி ஒன்று.

'... நம் முன்னோர்கள்போல நமக்கென்றொரு தனி நாம்டை நாம் உருவாக்க வேண்டும். அது, சுலபமானதல்ல என்பது எமக்குத் தெரியும். ஆனால், அதைத் தவிர எமக்கு வேறு வழி இல்லை. ஒன்றில், சிங்கள அதிகாரத்திலிருந்து நாம் விடுபட வேண்டும் அல்லது செத்து மடிய வேண்டும்...' என்று, சமரசத் தீர்வுக்கான முயற்சிகளின் தோல்விகள் அளித்த விரக்தியில், தன்னுடைய நீண்ட அரசியல் வாழ்வின் இறுதி உரையாய் அமைந்த பாராளு மன்ற உரையில் செல்வநாயகம் கூறிய அந்த வார்த்தைகள் - அந்த உரையின் அந்தக் காட்சி - அதன்பின்னணி அப் போது நினைவில் எழுந்தன.

1976 நவம்பரில் வரவுசெலவுத் திட்ட விவாதத்தின்போது செல்வநாயகம் இதனைக் கூறினார்.

அவர், மேலும் மிகத் தளர்வடைந்திருந்த காலம் அது. அந்த வரவுசெலவுத் திட்ட விவாதத்தில் தானும் உரையாற்றப் போவதாகவும் அதில் தனக்கு உதவும்படியும் தன்னுடைய கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களை அவர் கேட்டிருந்தார். ஆனால், இவர் எங்கே பேசப்போகிறார் என்ற நினைப்பில், அவர்கள் இவரின் கோரிக்கையைப் பெரிதுபடுத்தவில்லை.

அவ்வேளையில், தானாகவேதான் இந்த உரையை அவர் ஆற்றினார். நினைவுத் தூபியாக நி'றகும் இக் கற்றூணைப்போலத் தான் மிகுந்த வைராக்கியத்துடனும், உறுதியுடனுமான மிடுக்கான அவரது பேச்சு, அன்று சபையில் அனைவரையுமே வியப்பிலாழ்த்தியது. 'நாட்டைத் துண்டுபோடும் பிரகடனம்' என்று, அடுத்துப் பேசிய அரசாங்க உறுப்பினர் வெகுண்டார்.

அந்தப் பேச்சு முடிந்த பின்னர் கண்டபோது, "நான் பேசும்போது நீர் இருந்தீரா, நான் சொன்னவை சரிதானே" என்று கேட்ட அவரின் 'குழந்தை உள்ளம்' ...

மு. திருச்செல்வத்தின் அநுதாபத் தீர்மானம்மீது பிறிதொரு தடவை அவர் பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதும், இதுவே பாராளுமன்றத்தில் அவரின் கடைசி அரசியல் பேச்சாய் அமைந்தது.

நிஜமாகும் அவரின் அன்றைய வார்த்தைகள் அந்தத் தூபியில் எதிரொலித்தன.

அந் எதிரொலிக்கு ஒரு சாட்சியாவது போல், அருகே தமிழ் மக்களின் அளப்பரும் கல்வி ஈடுபாட்டின் சின்னமான யாழ். பொது நூலகம். வெந்தழலில் வெந்து, ஷெல் வீச்சிலும் நிலைகொண்டு நிற்கும் அந்தக் கட்டடமும் ஒரு நினைவுச் சின்னம்தான்.

ஆட்சியாளர்களின் சூழ்ச்சியில், தெற்கு ஆசியாவிலேயே மிப் பெரும் நூலகம் என்று கருதப்பட்ட அந் நூலகம் இரவோடிரவாக தீக்கிரையாக்கப்பட்டது. அந்தச் சூழ்ச்சி பாராளுமன்றத்தில் அம்பலமாகவிருந்தது இன்னொரு சூழ்ச்சியினால் அது மழுங்கடிக்கப்பட்டது. அது தான் 83 ஜூலை கலவரத்துக்கு முன்னோடியாகவும் அமைந்த சூழ்ச்சி.

ஆக, இப்படி நினைவுகள் அலை மோத, இவ்விரு நினைவுச் சின்னங்களும் இருக்கும் இடங்களை வைத்துக்கொண்டு, அவ்விடத்தில் செல்லும் பாதைகளை ஒருவாறு இனங்கண்டு ஊகித்தபோது, நான் தவித்து நின்ற இடம் மாநகர சபைக்கு நேர் முன்னதானது என்பதை உணர்ந்தேன்.

நிலத்துள் புதையுண்ட ஓர் இரும்புக் கம்பி. நிறைந்த பற்றைகள்,செடிகள். இவை தான் எனது இடது புறமாக மாநகர சபை வளவுள் நான் கண்டவை. மேற்கே கோட்டைப் பக்கம் நோக்கிச் சென்றேன். அது இருந்த இடமும்கூட தேடித்தான் கண்டு பிடிக்கவேண்டும். கோட்டை மதில்கள் பெரும்பாலும் உடைக்கப்பட்டே விட்டன. நம்முடைய காலத்திலேயே எத்தனை வகைவகையான வைபவங்களைக் கண்ட முற்றவெளி, பற்றை வெளி யாய்க் கிடக்கிறது. அங்கே, ஈழத் தமிழர் களின் அரசியல் பாதையில் ஒரு திருப்பத் துக்குக் காரணமாயமைந்த நான்காம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு இறுதி நாள் நிகழ்ச்சிகளில் உயிரிழந்த ஒன்பது பேரின் அந்த நினைவுக் கற்களும் வெண் மையாக மிளிர்கின்றன. மறுபுறம், பாழ டைந்த சின்னங்களாக றீகல் படமாளிகை, வீரசிங்கம் மண்டபம், தபால் நிலையம். இந்தப் பகுதியிலே தனித்து விளங்குவது முனியப்பர் கோவில் ஒன்றேதான். எவ் வித பாதிப்புக்குமுள்ளாகாமல், எழிலாகவே காட்சிதருகிறது.

ஆக இவை, நிர்மூலமாகி, ஜன சஞ்சார மற்றப்போய்விட்ட நகரின் அதி முக்கியத் துவம் வாய்ந்த இடத்தின் கோலங்கள்.

இதுதவிர, நகர் முழுவதுமே, நகர் மாத்திரமென்ன எங்குமே இடிபாடுகளுடனான போரின் அனர்த்தங்கள். முழுமையான ஒன்றை அங்கு காண்பதே அரிது. எனினும், இந்த அனர்த்தங்களிடையேயும் அங்கு நடைபெறும் வாழ்வு புதிது.

'மப்பின்றி கால மழைகாணா மண்ணிலே
சப்பாத்தி முள்ளும் சரியாய் முளையாது
ஏர் ஏறாது் காளை இழுக்காது
எனினுமந்த பாறை பிளந்து
பயன் விளைப்போன் என்னூரான்'

- மஹாகவியினுடைய இந்தக் கவிதை வரிகள் மிகவும் பிடித்தமானவை. இத பிரதிபலிப்பான வழ்வே அங்கு எங்கும் நிகழ்கிறது.

போர் விளைத்த அனர்த்தங்களோடு, அங்கு எங்குமே நம் கண்ணில் தெரிவன விடுதலைப் புலிகளின் விடுதலைச் சின்னங்கள். வீதிகளின் சந்திகளெல்லாம் மாவீரர்களுக்கான நினைவுச் சின்னங்கள் அவர்ாகளின் உருவப் படங்கள். நல்லூர் முத்திரைச் சந்தியில் பேரெழிலாய்த் தெரி யும் கிட்டு நினைவுப் பூங்கா. முன்னரெல் லாம் சினிமா படங்களின் சுவரொட்டி கள் நிறைத்த மதிற் சுவர்கள், விடுதலை வீரர்களின் நினைவை மனதில் நிறைக் கின்றன. விடுதலைக்கும், சமுதாய விளிப் புக்குமான வாசகங்களைத் தாங்கிய பலகை கள் வீதிகளில் நாட்டப்பட்டிருக்கின்றன.

'பெண்ணினமே, மண்ணை மீட்கும் மகத்தான பணியுடன் பெண்ணை மீட்கும் பெரும் பணியும் நமதே' என்பதுபோன்ற, சமூக சீர்திருத்த வாக்கியங்கள் நகர்ப்புறங்களிலும், 'மரம் மண்ணின் உரம்' போன்ற சூழல் பாது காப்பு தொடர்பான வாசகங்கள் கிராமப் புறங்களிலும் காணப்படுகின்றன. நகரிலும் சரி கிராமங்களிலும் சரி, அனைத்து வீதிகளுக்கும் பெயர்களிடப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மாவீரரின் பெயர்கள். அவர்களின் இயற்பெயரால் வீஸதகளுக்குப் பெயர் சூட்டப்பட்டு, இயக்கப் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்படி பெயர் சூட்டப்பட்டுள்ள யாழ்ப் பாணத்து முக்கிய வீதிகள்: ஆஸ்பத்திரி வீதி -கேணல் கிட்டு சாலை. பெரிய கடை - மேஜர் சோதியா சாலை. மின்சார நிலைய வீதி - லெப். கேணல் ராசன் தெரு. கஸ்தூரியார் வீதி - சந்தோசம் தெரு. ஸ்ரான்லி வீதி - அர்ச்சுனா வீதி.

நவீன சந்தைப் பகுதியில் (அது இப்போது 'சிறப்பு அங்காடி' என்று அழைக்கப்படுகிறது) எந்நேரமும் காற்றில் விடுதலைக் கீதங்கள் ஒலிக்கின்றன. இராணுவ வண்டிகளையொத்த விடு தலைப் புலி வீரர்களின் மோட்டார் வாகனங்கள் வீதிகளில் செல்லும். சிலர் - பொதுவாக பெண் புலிகள், சைக்கிள் களிலும் செல்வார்கள். இவர்கள் தவிர, தமிழீழ காவல் துறையைச் சார்ந்தவர்களையும் (பொலிஸ்) எங்காவது காண லாம். இவர்கள் எவரையும் கண்டு பொது மக்கள் பதட்டமேதும் கொள்வதில்லை. ஆனாலும், பொதுமக்கள் எவருடனா வது போராளிகள் ஏதாவது பேசிக்கொண் டிருந்தால் 'இயக்கம் நிற்கிறது' என்று அது எல்லோர் கவனத்தையும் ஈர்க்கும்.

பெண் போராளிகள் பொதுவாக பச்சை அல்லது கறுப்பு நிற நீளக் கால் சட்டை, ஷேட்டுடன் இடையில் கறுப்பு நிற 'பெல்ற்' அணிந்திருப்பார்கள். தலை முடி வெட்டப்பட்டிருக்கும் அல்லது இரண்டு பின்னல்களாக வளைத்துக் கட்டியிருப்பார்கள். சிலர் ஆயுதங்களுடனும், பெரும்பாலோர் ஆயுதங் களின்றி சைக்கிள்களிலும், நடந்தும் செல்வார்கள். இவர்களை இலகுவாகவே அடையாளம் கண்டுகொள்ளலாம். பொதுவாக, சாதாரண உடையே அணிந் திருக்கும் ஆண் போராளிகள் அல்லது இயக்கம் சார்ந்தவர்களை அவர்களது டோட்டார் சைக்கிள்களின் பிரத்தியேக இலக்கத் தகடுகளிலிருந்துதான் கண்டுகொள்ளலாம். **(அடுத்த வாரம்)**



அஜித்தின் நேர்கொண்ட பார்வை படத்தை பொலிவூட்டின் பிரபல தயாரிப்பாளர் போனி கபூர் தயாரிக்க, எச். வினோத் இயக்கினார். இந்தப் படத்தின் பெருவெற்றியையும் வரவேற்பையும் பெற்றது.

இந்த நிலையில் அஜித்தின் 60ஆவது படமான வலிமையிலும் இதே கூட்டணியே தொடர்கிறது. இது, வரும் தைப்பொங்கலுக்கு வெளியாகிறது.

இந்த நிலையில், இதே கூட்டணியை அஜித்தின் 61ஆவது படத்திலும் தொடரப் போகிறது. படத்தின் தயாரிப்பாளர் போனி கபூர் இதனை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.




கதிர்வேலு இயக்கத்தில் சசிகுமார், நிக்கி கல்ராணி நடித்துள்ள படம் 'ராஜவம்சம்'. யோகிபாபு, சதீஷ் என 40 பிரபல நடிகர்கள் நடித்துள்ள இப்படம் முழுக்க முழுக்க குடும்ப படமாக உருவாகி உள்ளது. அண்மையில் இதன் முன்னோட்டம் வெளியாகி ரசிகர்களை கவர்ந்தது.

கடந்த முதலாம் திகதி இந்தப் படம் வெளியாகும் என்று அறிவித்த போதிலும், திடீரென எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு - ஆயுதபூசை தினத்துக்கு வெளியீடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



பொலிவூட்டில் முன்னணி நடிகையாக வலம் வருகிறார் கியாரா அத்வானி. ஷங்கர் இயக்கத்தில் ராம் சரண் நடிக்கும் படத்தில் அவர் தற்போது நடித்து வருகிறார். இந்தப் படம் தமிழ், தெலுங்கில் வெளியாகவுள்ளது.

இந்த நிலையில், இயக்குநர் வம்சி விஜயின் 66ஆவது படத்தை இயக்கவுள்ளார். இந்தப் படத்தில் நடிக்க கியாரா அத்வானி இயக்குநரிடம் சம்மதம் தெரிவித்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இதன் மூலம் தமிழ் திரையுலகில் கால் பதிக்கிறார் கியாரா. விஜயின் இந்தப் படம் ஹிந்தியிலும் உருவாகிறது. இதனால்தான் பொலிவூட் நடிகையான கியாராவை தெரிவுசெய்துள்ளாராம்.

விஜய் சேதுபதியின் 46ஆவது திரைப்படத்தை பொன்ராம் இயக்கி வருகிறார். 2016ஆம் ஆண்டு வெளிவந்த 'சேதுபதி' திரைப்படத்துக்கு பிறகு இத்திரைப்படத்தில் விஜய் சேதுபதி மீண்டும் காவல்துறை அதிகாரியாக நடிக்கிறார்.

படப்பிடிப்பு பழனி மற்றும் பொள்ளாச்சி பகுதிகளில் நடைபெற்றுவருகிறது. படத்தின் கதாநாயகி பற்றிய அறிவிப்பு ஏதும் வராமலிருந்த நிலையில், தற்போது புதுமுகமான அனுகீர்த்தி வாஸ் கதாநாயகியாக அறிமுகமாகிறார் என்று தயாரிப்பு நிறுவனம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.





இன்ஸ்ட்ராகிராமில் தமிழ் நடிகைகளின் போட்டோஷூட் அணுகுமுறையையே மாற்றி அமைத்தவர் ரம்யா பாண்டியன். ஆனால், பிக்பாஸ் நிகழ்வில் பெற்ற புகழை திரையுலகில் அவரால் பெறமுடியவில்லை.

இந்த நிலையில், அண்மையில் அவர் வெளியிட்ட சேலை அணிந்த கவர்ச்சி படங்கள் பிரபலமாகின. இதேபாணியை தமிழ் நடிகைகள் பலரும் பின்பற்றினர்.

இந்த நிலையில், கடந்த வாரம் ரென்னிஸ் உடை போன்ற குட்டையான உடை அணிந்த கவர்ச்சி படங்களை சமூகவலைத்தளங்களில் பதிவிட்டுள்ளார் ரம்யா பாண்டியன். இந்தப் படங்களுக்கும் சமூகவலைத்தளங்களில் ரசிகர்கள் செமவரவேற்பு அளித்து வருகின்றனர்.

# திரை விமர்சனம்



| | | |
|---|---|---|
| திரைப்படம் | : | சிவகுமாரின் சபதம் |
| நடிப்பு | : | ஹிப்ஹாப் தமிழா ஆதி, மாதுரி |
| இயக்கம் | : | ஹிப்ஹாப் தமிழா ஆதி |
| இசை | : | ஹிப்ஹாப் தமிழா ஆதி |
| வெளியீடு | : | 30 செப். 2021 |

காஞ்சிபுரத்தில் பட்டு செய்வதில் சிறந்தவர் வரதராஜன். இவர்கள் குடும்பம் பாரம்பரிய மாக பட்டு செய்து வருகிறார்கள். இவருடன் வேலை பார்த்து வந்த சந்திரசேகர் சூழ்ச்சி செய்து சென்னை யில் பெரிய புடவைக்டை ஆரம்பித்து விடுகிறார். வரதராஜனின் மகன் முருகன், சந்திரசேகர் பெண்ணை திருமணம் செய்து வீட்டோடு மாப்பிள்ளையாகிறார்.

ஒரு பிரச்னையில் முருகனை, சந்திரசேகர் வீட்டை விட்டு துரத்தி விடுகிறார். இவருடன் இருக்கும் வரதராஜனின் பேரன் சிவகுமார், சந்திரசேகருக்கு சபதம் போடுகிறார். இறுதியில் சிவகுமார் போட்ட சபதம் என்ன? அதை சிவகுமார் நிறைவேற்றினாரா? என்பதே படத்தின் மீதிக்கதை.

படத்தின் நாயகனாக சிவகுமார் பாத்திரத்தில் நடித்துள்ளார் ஹிப்ஹாப் தமிழா ஆதி. வழக்கமான குறும்பும் மகிழ்ச்சியும் நிறைந்த ஆதியை இந்தப் படத்திலும் காணலாம். படத்தின் கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள், இசை, இயக்கம், தயாரிப்பு என அனைத்து பொறுப்புகளையும் ஏற்றுள்ளார். இத்தனை பொறுப்புகளையும் ஏற்று இருந்தாலும் அவர் எதிலும் சரியாக செயல்படவில்லை. அதீத பணிச் சுமைதான் இதற்கு காரணமோ தெரியவில்லை...!

காஞ்சிபுரம் பட்டின் பெருமை, தறி செய்யும் தொழிலாளர்கள் என்று நல்ல கதையை எடுத்துக் கொண்ட ஆதி, அதைப்பற்றி ஆழமாக சொல்லாதது கவலையே. முதல் பாதியின் திரைக்கதை எங்கு செல்கிறது என்று தெரியாமல் தடுமாறுகிறது. இரண்டாவது பாதியிலும் இதே நிலையே தொடர்கிறது. ஆதி பேசும் நிறைய தத்துவங்கள் அலுப்பை தருகின்றது.

முதல் பாதியில் தொடர்ச்சியாக நான்கு பாடல்கள் வருகின்றன, எவையும் கவர வில்லை. இரண்டாம் பகுதியில் வரும் பாடல்கள் கேட்கும் ரகம் மட்டுமே. பின்னணி இசை ஓரளவுக்கு ரசிக்க வைக்கிறது.

நகைச்சுவைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார் இயக்குநர் ஆதி. ஆனால், சீரியசான காட்சிகள் நகைச்சுவையாகவும், நகைச்சுவையான காட்சிகள் சீரியசாகவும் இருக்கின் றன. படம் பார்க்கும்போதே பல குழப்பங்களை ஏற்படுத்துகின்றன. சண்டைக் காட்சிகளில் ஈர்த்துள்ளார் ஆதி.

நாயகியான மாதுரி கொடுத்த வேலையை செய்துள்ளார். ஆதியின் நண்பராக வரும் கதிர், ரசிக்கும் படியான நடிப்பை கொடுத்து இருக்கிறார். மற்ற கதாபாத்திரங்கள் திரைக்கதை ஓட்டத்திற்கு பெரிதும் உதவி இருக்கிறார்கள்.

அர்ஜூன் ராஜாவின் ஒளிப்பதிவு படத்திற்கு பெரிய பலம். பல இடங்களில் காட்சிகள் தெளிவாக அமைந்துள்ளது.

# மெஸ்ஸி கணக்கு ஆரம்பம்!



ஐரோப்பிய கால்பந்து வரலாற்றில் முதன்முறை யாக மெஸ்ஸியின் கோல் பார்ஸிலோனாவுக் காக அல்லாமல் வேறு அணிக்காக விழுந்திருக்கி றது. முதல்முறையாக வேறு அணியின் சீருடையில் கோல் அடித்து கைகளை வான் நோக்கி உயர்த்தியிருக்கிறார் லயோனல் மெஸ்ஸி!

லயோனல் மெஸ்ஸி எப்போது பாரிஸ் அணிக்கு தன்னுடைய முதல் கோலை அடிப்பார் என அவரின் ரசிகர்கள் மட்டுமல்லாமல், ஒட்டு மொத்த உதைபந்தாட்ட உலகமுமே எதிர்பார்த்துக்கொண்டிருந்தது! இறுதியாக அந்த சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடந்தேறியது.

பார்சிலோனா அணியில் இருந்து வெளியேறி பாரிஸ் அணியில் இணைந்த லயோனல் மெஸ்ஸி ரீம்ஸ் அணிக்கு எதிராக ஓகஸ்ட் 30 அன்று முதல் போட்டியில் விளையாடினார். அந்த போட்டியில் கோல் எதுவும் அடிக்க வில்லை. அதன்பிறகு பங்கேற்ற 2 போட்டிகளிலும் கோல் அடிக்கவில்லை. அடுத்த 3 போட்டிகளில் காயம் காரணமாக விளையாடாமல் இருந்தார். இதனால் மெஸ்ஸி பாரிஸ் அணிக்காக எப்போது முதல் கோலை அடிப்பார் என்று அனைவரும் காத்திருந்தனர்.

மறுபுறம் மெஸ்ஸியுடன் எப்போதும் ஒப்பிட்டு பேசப்படும் கிறிஸ்டியனோ ரொனால்டோ மன்செஸ்டர் யுனைடெட் அணியில் இணைந்ததில் இருந்து இதுவரை 4 கோல்கள் அடித்துவிட்டார். இது மெஸ்ஸிக்கும் மெஸ்ஸி ரசிகர்களுக்கும் மிகுந்த அழுத்தத்தை கொடுத்தது.

இந்நிலையில் காயத்தில் இருந்து மீண்ட லயோனல் மெஸ்ஸி மன்செஸ்டர் சிற்றி அணிக்கு எதிராக ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் தொடரின் லீக் போட்டியில் விளையாடினார்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்கின் சம்பியன், கடந்த ஆண்டு ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக்கில் இரண்டாவது இடம்பிடித்த அணி என பலம் வாய்ந்த மன்செஸ்டர் சிற்றி அணியை பாரிஸ் சென் ஜெர்மைன் அணி தன்னுடைய சொந்த மண்ணில் எதிர்கொண்டது. மன்செஸ்டர் அணியில் சுப்பர் ஸ்ரார் என்று யாரும் இல்லை என்றாலும், கெவின் டி புரூனே, ஜாக் கிரியலிஸ், பெர்னாண்டோ சில்வா, ரியாத் மெக்ரேஸ், ஸ்டெர்லிங், ரூபன் டையஸ் என அணியில் விளையாடும் வீரர்கள் அனைவரும் தரம் வாய்ந்தவர்கள். அந்த அணியின் பயிற்றுவிப்பாளர் பெப் கார்டியாலோ உலகின் சிறந்த பயிற்றுவிப்பாளர்களில் ஒருவர்.

மெஸ்ஸி, நெய்மார், எம்பாப்பே என உலகின் சிறந்த வீரர்களை உள்ளடக்கிய பாரிஸ் அணியும் சிற்றி அணிக்கு சளைத்தவர்கள் அல்ல. இதனால் உதைபந்தாட்ட ரசிகர்கள் மத்தியில் இந்த போட்டியை காண விறுவிறுப்பு கூடி இருந்தது.

போட்டி தொடங்கிய ஆட்டத்தின் 8ஆவது நிமிடத்தில் பாரிஸ் அணியின் இட்ரிஸ்ஸா குயே சிற்றியின் டி பொக்சில் நெய்மர் தட்டிக் கொடுத்த பந்தை கோல் கம்பத்தின் மூலையால் அருமையாக அடித்து கோலாக்கினார். அடுத்து மன்செஸ்டர் சிற்றி அதிக அழுத்தம் கொடுத்து ஆடி, கோல் அடிப்பதற்கான சில வாய்ப்புகளை உருவாக்கியபோதும் கோல் அடிக்கவில்லை. ஸ்டெர்லிங் ஒரு பந்தை தலையால் முட்டி கோல் அடிக்க முயற்சித்த போது, கோல் கம்பத்தில் பட்டு திரும்ப வந்தது.



அதை ஃபெர்னாண்டோ சில்வா எளிதாக கோல் அடித்து இருக்கலாம். ஆனால் கோல் கம்பத்திற்கு மேல அடித்து, சமன் செய்யும் எளிதான வாய்ப்பை வீணாக்கினார்.

இதனால், பாரிஸ் அணி முன்னிலை வகித்தது. போட்டியின் 74-வது நிமிடத்தில் மைதானத்தின் பாதியில் இருந்து பந்தை பெற்று உருட்டி வந்த லயோனல் மெஸ்ஸி, டி பொக்ஸ் அருகில் கிலியன் எம்பாப்பேவிடம் பந்தை தட்டினார். அதை மெஸ்ஸியிடம் மீண்டும் தட்டினார் செய்தார் எம்பாப்பே. கோல் கம்பத்துக்கு 18 மீற்றர் தொலைவில் இருந்து மெஸ்ஸி பந்தை உதைக்க, சுழன்று கொண்டு கோல் கம்பத்தின் மூலையால் சென்று அற்புதமான கோலானது. அவ்வளவுதான். வழக்கமான பார்சிலோனா கோல் போல, மெஸ்ஸி தன்னுடைய முதல் கோலை அடித்து விட்டு, துள்ளி குதித்து சக வீரர்களுடன் மைதானத்தில் ஓடினார். பாரிஸ் மைதானம் முழுவதும் நிரம்பி இருந்த ரசிகர்கள் "மெஸ்ஸி", "மெஸ்ஸி" என கூறி ஆரவாரம் செய்தனர்.

மேற்கொண்டு இரு அணிகளும் கோல் அடிக்காததால் பாரிஸ் சென் ஜெர்மைன் அணி 2-0 என்ற கோல் கணக்கில் சிற்றி அணியை வீழ்த்தியது. இந்த வருடம் சம்பியன்ஸ் லீக் தொடரை வெல்லும் அணி எனக் கணிக்கப்பட்டிருக்கும் பாரிஸ் அதற்கேற்றால்போல் விளையாடி வெற்றி பெற்றது. மன்செஸ்டர் சிற்றி அணி நன்றாக விளையாடிய போதிலும்,கோல் அடிக்கும் வாய்ப்புகளை வீணாக்கியதால் தோல்வியுற்றது.

போட்டி முடிந்து செய்தியாளர் சந்திப்பில் பேசிய மான்செஸ்டர் சிட்டி பயிற்சியாளர் பெப் கார்டியாலோ,"போட்டியில் தோல்வியுற்றது வருத்தமாக இருக்கிறது என்றாலும், லயோனல் மெஸ்ஸி கோல் அடித்தது மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது. ஏனென்றால் பார்சிலோனா அணியில் இருக்கும் போது மெஸ்ஸி என்னை மகிழ்வித்தார்" என்று சொன்னார்.

பெப் கார்டியாலோ லயோனல் மெஸ்ஸியை 2008-2012 வரை பார்சிலோனா அணியில் வழிநடத்தியவர். பெப் கார்டியாலோவுக்கு மட்டும் இல்லை,மெஸ்ஸி ரசிகர்களை தாண்டி ஒட்டுமொத்த உதைபந்தாட்ட ரசிகர்களுக்கும் மெஸ்ஸி பாரிஸ் அணிக்கு தன்னுடைய முதல் கோலை அடித்தது மகிழ்ச்சியான ஒன்றுதான்.

மெஸ்ஸியின் கோல் வேட்டைத் தொடர வேண்டும் என வேண்டுதல்களில் இறங்கிவிட்டார்கள் மெஸ்ஸி ரசிகர்கள்!

# பிபாவின் கனவு சாத்தியமாகுமா?




ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை உதைப்பந்தாட்ட உலகக் கிண்ணத்தை நடத்தும் முனைப்பில் இருக்கிறது சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனமான பிபா. இந்தத் திட்டத்துக்கு ஆதரவை திரட்டும் முனைப்பில் அது செயல் பட்டு வருகின்றது. இதன் ஓர் அங்க மாக அண்மையில் 200இற்கும் மேற்பட்ட நாடுகளின் உதைபந் தாட்ட கூட்டமைப்புக்களுடன் அந்த அமைப்பு கலந்துரையாடலில் ஈடு பட்டது. கடந்த வியாழக்கிழமை இணைய வழியில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

ஒவ்வொரு 4 வருடங்களுக்கும் ஒருமுறை உலகக் கிண்ணத் தொடரை நடத்துவது என்பதை விட, இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்துவது என்ற யோசனையை சாத்தியப்படுத்து வதிலேயே பிபா அதிக கவனம் செலுத்தி வருகின்றது. இந்த யோசனை 1999ஆம் ஆண்டில் அப் போது தலைவராக இருந்த செப் பிளாட்டரால் முன்வைக்கப்பட்டது.

ஆனால், பிபாவின் இந்த நட வடிக்கை தீக்குளிப்பு முயற்சி என்று விமர்சிக்கப்படுகின்றது. பிரான்ஸ் நாட்டின் பயிற்றுவிப்பாளர் டிடியர் டெஷ்சாம்ப்ஸ் "இந்த முயற்சி உலகக் கிண்ணத் தொடரை அற்பமாக்கும்", என்று கூறியுள்ளார். ஜேர்மனி, இங்கி லாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடு களின் உதைபந்தாட்ட அதிகார மையங்கள் இந்தத் திட்டத்தை வெளிப்படையாக எதிர்க்கின்றன. இந்த முயற்சிக்கு பதிலாக ஐரோப்பிய சம்பியன்ஷிப், கோபா அமெரிக்கா போன்ற கண்டங்களுக்கு இடையி லான தொடர்களை ஒவ்வோர் ஆண்டும் மாறிமாறி வருமாறு அமைக்குமாறு அவை பரிந்துரைத் துள்ளன.

ஆனால், 15 ஆயிரம் பேரிடம் நடத்தப்பட்ட இணையவழி கருத்துக் கணிப்பில் 55 வீதமானோர் இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை உலகக்கிண் ணத் தொடரை நடத்த ஆதரவு தெரி வித்துள்ளனர் என்று பிபா கூறுகின் றது.

எனினும், இரு ஆண்டுக்கு ஒரு முறை உலகக் கிண்ணத் தொடர் வீரர் களின், மன, உடல் உறுதியை குலைத்துவிடும். அத்துடன் நாடு களின் சொந்த விளையாட்டுக்கான நாட்காட்டியையும் பாதிக்கும் என்று துறைசார் நிபுணர்கள் தெரிவித்துள்ள னர். இது கழகங்களின் விளை யாட்டை அழிக்கும் செயல் என்று 274 கழகங்களை கொண்டுள்ள ஐரோப்பிய உதைபந்தாட்ட கழகங் களின் கூட்டமைப்பு தெரிவித்துள் ளது.

எது எப்படி இருப்பினும், உலகக் கிண்ணத் தொடரை எத்தனை ஆண்டு களுக்கு ஒருமுறை நடத்துவது என்ற முடிவு இந்த ஆண்டு இறுதிக்குள் - நவம்பரில் நடக்கும் உலகளாவிய ரீதியலான உச்சிமாநாட்டில் முடிவு எடுக்கப்படும் என்று பிபா அறிவித்துள்ளது.

# மீண்டும் டுமினி...!




தென்னாபிரிக்காவின் சகலதுறை வீரர் ஜேக்கப் டுமினி. இவர் கடந்த 2019ஆம் ஆண்டு ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வை அறிவித்தார். ஆனால், இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் விளையாட விரும்புவதாக அறிவித்தார். ஆனால், அவருக்கு அணியில் வாய்ப்பு வழங்கப்படவில்லை. இந்த நிலையில் அவர் உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்க சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. ஆனால், அது அவர் முன்னர் விரும்பியது போன்றல்ல....! இருபது - 20 உலகக் கிண்ணத் தொடருக்கான தென்னாபிரிக்க அணியின் ஆலோசகராக அவர் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார். 2019ஆம் ஆண்டு ஒருநாள் போட்டிகளில் அவர் ஓய்வை அறிவித்தாலும் இருபது -20 போட்டிகளி லும்கூட விளையாடுவதை அவர் தவிர்த்து வந்தார். அவர் மீண்டும் விளையாட விரும்பியபோது அணிக்குள் அவர் உள்வாங்கப்படவில்லை. இந்த நிலையில்தான் அவர் அணியின் ஆலோசகராக அறிவிக்கப்பட் டுள்ளார்.


இதுபற்றி டுமினி கூறுகை யில், "ஞாயிற்றுக்கிழமை, அலுமாரிக்குள் இரு வருடங்களாக முடங்கிக் கிடந்த எனது விளையாட்டு உபகரண பையை மீண்டும் எடுப்பேன் என்று எதிர்பார்க்கவில்லை. ஓய்வு பெற்ற பிறகு அது ஓர் உணர்ச்சிகரமான சந்தர்ப்பம். எனது 15 வருட கிரிக்கெட் அனுபவம் இதற்கு உதவும்", என்றார்.

டுமினியின் இந்தப் பதவி மிகக் குறுகியது. உலகக் கிண்ணத் தொடருக்கு மட்டுமே அவர் பணியாற்றுவார். ஆனால்,"6 கோடி மக்களின் பிரதிநிதித்துவம். அந்தப் பெரும் பொறுப்பை நான் நிறைவேற்றுவேன்", என்று டுமினி இதன்போது குறிப்பிட்டார்.

டுமினி 46 டெஸ்ட் போட்டிகளில் 2,103 ஓட்டங்களையும், 199 ஒருநாள் போட்டிகளில் 5,117 ஓட்டங்களையும், இருபது - 20 போட்டிகளில் 1,934 ஓட்டங்களையும் எடுத்துள்ளார். இதேபோன்று, டெஸ்ட் போட்டிகளில், ஒருநாள் போட்டிகளில் 69 விக்கெட்டுகளையும், இருபது - 20 போட்டிகளில் 41 விக்கெட்டுகளையும் அவர் கைப்பற்றி யுள்ளார்.



# ஹவாய் தீவுகளில் தமிழர் கலாச்சாரம்



**குரு அரவிந்தன்**

‘இந்து சமுத்திரத்தில் ஒரு முத்து’ என்று எப்படிக் கடற்பயணிகள் இலங்கைத்தீவை வர்ணித்தார்களோ அதேபோலத்தான் சுற்றுலாப் பயணிகள் ‘பசுபிக்சமுத்திரத்தின் பரடைஸ்’ என்று இந்தத் தீவுகளை அழைக்கிறார்கள். இந்த ஹவாய் தீவுகள் எரிமலைக் குளம்புகளால் உருவானவை என்பதை நீங்கள் நம்பமறுக்கலாம். ஆனால் அதுதான் உண்மை. சுமார் 2000 மைல்கள் சுற்றாடலில் எந்த நிலப்பரப்பும் இல்லாத ஹவாய் தீவுகள், அமெரிக்காவின் 50 வது மாகாணமாக ஒகஸ்ட் மாதம் 1959 ஆண்டு பிரகடனப் படுத்தப் பட்டது. சுமார் 1500 வருடங்களுக்கு முன்பாக போலிநேஷன் (Polynesian) என்று சொல்லப்படுகின்ற குடும்ப அமைப்பு இங்கே முதலில் உருவானது. முக்கியமாக Samoa, Cook Islands, New Zealand, Easter Island, Tonga, Tuvalu, Wallis and Futuna, Fiji போன்ற இடங்களில் இருந்து கடலில் திசைமாறி வந்து, திரும்பிச் செல்ல வழியில்லாமல் குடியேறியவர்களே இங்குள்ள பழங்குடி மக்களாவார். இங்குள்ள தீவுகளில் சுமார் எட்டுத் தீவுகளே ஓரளவு பெரிய தீவுகளாக, மனிதர் வாழக்கூடியதாக இருக்கின்றன.

1778 ஆம் ஆண்டு ஐரோப்பியரான கப்டன் ஜேம்ஸ் குக் என்ற கடற்பயணிதான் முதன் முதலாக இத்தீவுகளில் கால் பதித்தார். புகழ்பெற்ற பேர்ள்ஹாபர், உயிர்ப்புடன் இருக்கும் எரிமலைகள், தொலைநோக்கி மையம் இந்துக்கோயில், டோல் அன்னாசிப்பழத் தொழிற்சாலை போன்றவற்றைப் பார்க்க வேண்டும் என்ற எனது ஆவலை நிறைவேற்ற பாம்புகளே இல்லாத ஹவாய்க்குப் பயணமானேன். ஹவாயில் உள்ள விமான நிலையத்தை டானியல் கே. இனோஜி சர்வதேச விமான நிலையம் என்று அழைக்கிறார்கள். சுமார் 22 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இந்த விமான நிலையத்திற்கூடாக வருடாவருடம் பயணிக்கிறார்கள். விமானத்தை விட்டு வெளியே வந்ததும் ஹவாயின் பாரம்பரிய உடையணிந்த, கழுத்திலே பூமாலை அணிந்து, தலையிலே ஒற்றைப்பூ சூடியிருந்த இளம் பெண்கள் எங்களை வரவேற்றார்கள். காதில் விழுந்த முதல் வார்த்தை ‘அலோகா’ என்பதாகும். ‘அலோகா’ என்றால் வணக்கம், சென்ற இடமெல்லாம் அலோகா சொன்ன போது, எனக்கு ‘அரோகரா’ என்பது போலக் கேட்டது. ஏன் அப்படிச் சொல்கிறார்கள் என்று அதைப்பற்றிப் பின்பு ஆராய்ந்து பார்த்த போது, எங்கள் பண்பாட்டிற்கும் அதற்கும் ஒருவித தொடர்பு இருப்பதை அறிய முடிந்தது.

அங்கே உள்ள ஒரு வீதிக்குப் ‘பழனி வீதி’ என்ற பெயரும் உண்டு. நேப்பாளிகளின் சைவ உணவகத்து வாசலில் சிவனின் பதாதை ஒன்று மின்விளக்குளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அருங்காட்சியகத்திற்குச் சென்ற போது, அவர்கள் பாதுகாப்பு வேலி போட்டிருந்த ஓரிடத்தில் சிவலிங்கம் போன்ற உருவ அமைப்பைக் கொண்ட கருங்கல்லைக் கண்டேன். அதில் மூன்று வீபூதிக் குறிகள் இல்லாததுதான் ஒரு குறையாக இருந்தது. பிறிதொருநாள் அவர்களுடைய கலாச்சார விழா நடக்கும் இடத்திற்குச் சென்ற போது மாவிட்டபுரம் மாவைக் கந்தனின் கோபுரம் போன்ற அமைப்பை கொண்ட சுமார் 40 அடி உயரமான ஒரு கோபுரத்தை தடிகளாலும் ஓலைகளாலும் உயரமாக அமைத்திருந்தார்கள். பிஜி நாட்டில் இருக்கும் இந்துக் கோபுரத்தின் அமைப்பு அது என்பதை அவர்களிடம் இருந்து தெரிந்து கொண்டேன். பிஜி நாட்டில் இருந்து இங்கு வந்து குடியேறிய பழங்குடி மக்கள் பலர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். பிஜி தீவுகளுக்கு தமிழ் நாட்டில் இருந்து தமிழர்கள் கரும்புத் தோட்டத்திற்குப் பணிபுரியச் சென்றதும், பாரதியார் அதைப்பற்றிப் பாடியதும் நினைவில் வந்தது. அவர்களின் வழித்தோன்றல்களும் ஹவாயின் பழங்குடி மக்களாக இருக்கிறார்கள்.



இவர்கள் ‘பல்லே’ என்ற பெண் நெருப்புத் தெய்வத்தை வணங்குவதாக எங்களைத் தன்னுடைய வண்டியில் வழிபாட்டு தலத்திற்கு அழைத்துச் சென்ற ஹினா என்ற பட்டதாரிப் பெண் குறிப் பிட்டார். வாசலில் இரண்டு பந்தங்கள் குறுக்கே வைக்கப் பட்டிருந்தன. பூசாரியோ அல்லது அவரால் அனு மதிக்கப்பட்டவரோ தான் பாடலைப் பாடிப் பந்தத்தை நிமிர்த்தி வைத்துவிட்டு உள்ளே செல்ல முடியும். அந்தப் பெண் கைகளைக் குறுக்கே கட்டிக்கொண்டு ஒரு பாடலைப் பாடினார். நாங்கள் வழிபாட்டுத் தலங்களில் தேவாரம் பாடுவதுபோல அந்தப் பாடலும், நிகழ்வும் இருந்தது. அவர்கள் வழிபடும் தெய்வங்களின் விக்கிரகங்கள் சற்று உயரமான பீடத்தில் வைக்கப்பட் டிருந்தன. கிட்டத்தட்ட அய்யனார், கருப்பண்ணசாமி போன்ற உருவ அமைப்புகளைப் போன்று மரத்தினால் செய்யப்பட்ட சில கிராமத்து தெய்வங்களைக் காணமுடிந்தது. அதற்குக் கிட்டவாக பூசாரியின் குடிசை ஒன்று இருந்தது. சற்றுத் தள்ளி அவர்களின் பாரம்பரிய “பறைகள்“ ஒரு குடிசையில் வைக்கப்பட்டிருந்தன. அதைப் பார்த்ததும் சித்திரைக் கஞ்சிக்கு எங்கள் கோயில்களில் அடிக்கும் மேளங்கள் போல இருந்தன. வழிபாட்டுத்தல பூசைக்காகவோ அல் லது அவசர தேவைகளுக்காகவோ இந்தப் பறைகளை அடித்துப் பொதுமக் களை அங்கே வரச்செய்வதாகவும் ஹினா குறிப்பிட்டார். எங்களைப் போலவே, உருவ வழிபாடு அவர்களிடமும் இருப்பதை அவதானித்தேன்.

ஹவாயில் பெண்கள் இடது காதுக்குப் பின்னால், தலையில் பூவைச் செருகியிருந்தால் திருமணமானவர் என்றும்



வலது காதுக்குப் பின்னால் பூச்செருகியிருந்தால் திருமணமாகாதவர் என்றும், எம்மவர் குங்குமப் பொட்டு வைப்பது போல, அடையாளப் படுத்தினார்கள். அனேகமான பெண்கள் அழகாகக் கொண்டை போட்டு, வெள்ளைநிற அலரிப்பூவையும், சிலர் ஓக்கிட், அல்லது செவ்வரத்தம் பூவையோ முடியில் செருகி இருந்தார்கள். இதில் வேடிக்கை என்வென்றால் அவர்களில் சிலர் முடியில் இரண்டு பக்கமும் பூ வைத்திருந்தது தான். வலது பக்கம் இடது பக்கம் என்று விபரமாகச் சொன்னவர்கள் இரண்டு பக்கமும் பூ வைத்தால் என்ன அர்த்தம் என்று சொல்லவேயில்லை.

‘தழையணி அல்குள் தாங்கல் செல்லா
நுழைசிறு நுசப்பிற் கெவ்வ மாக அம்
மெல் ஆக நிறைய வீங்கிக் கொம்மை
வரிமுலை செப்புடன் எதிரின’

நடன நிகழ்ச்சி ஒன்றுக்குச் சென்ற போது, சங்க இலக்கியப் பாடல் ஒன்று நினைவில் வந்தது. அவர்கள் தங்கள் பாரம்பரிய உடைகளான தழை உடைகளை அணிந்தே நடனமாடினர். சிலர் இலைகுழைகளில் செய்த தழையணி பாவாடைகளையும், சிலர் நாணல் புல், வைக்கோல் போன்றவற்றில் செய்த பாவாடையும் அணிந்திருந்தனர். தமிழர்களின் பாரம்பரிய கோலாட்ட நடனத்தைப் போல தழையணி அணிந்த பெண்கள் கையிலே உள்ள கோலாட்டக் கோல்களைப் பலவிதமாக அடித்து சுற்றிச் சுற்றி ஆடுவதைக் ஹவாயில் காண முடிந்தது. அவர்கள் இந்த நாட்டார் கலையான நடனங்களை ஆடிக்காட்டிய போது என்னால் நம்பமுடியாமல் இருந்தது. இதுவரை கற்பனையில் இருந்த சங்ககாலக் காட்சிகளை நிஜமாகவே கண்முன்னால் கொண்டு வந்து நிறுத்தியது போல இருந்தது. இரண்டாயிரம் மைல்களுக்கப்பால் சென்று ஹவாய் தீவுகளில் 2500 வருடங்களுக்கு முற்பட்ட தமிழர்களின் பாரம்பரிய தழையுடை அணிந்த கோலாட்ட நடனத்தைக் காண்பேன் என்று நான் ஒருபோதும் நினைத்தும் பார்த்ததில்லை.

இன்னுமொரு தீவான ‘காவாய்’ இந்துக்களின் பிரபலமான சிவன் கோயிலும், சைவ சித்தாந்த மன்றமும் இருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த யோகசுவமியின் சீடரான சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் தான் இங்கே கோயில் அமைவதற்கு முக்கிய காரணமாக இருந்தார். பூங்காவில் உருட்திராட்ச மரங்கள் இருக்கின்றன. வெளியே உள்ள உணவகங்களில் சைவச்சாப்பாடு எடுப்பது கஷ்டமானது. நாங்கள்தான் கொண்டு செல்ல வேண்டும். 562 சதுரமைல் பரப்புள்ள இந்தத் தீவுக்கும் விமானத்தில்தான் பயணிக்க வேண்டும். அழகான நிறங்களில் காட்டுக்கோழிகள் எங்கும் காணப் பட்டன. பாம்பு, கீரி, மரநாய், கழுகு போன்ற எதிரிகளே இல்லாததால், சுதந்திமாகத் திரிந்தன. இரண்டாம் உலக யுத்தத்தின் திருப்பு முனையாக இருந்த ஹவாயின் புகழ் பெற்ற இயற்கைத் துறைமுகமான பேர்ள் ஹாபரைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பினால் அடுத்த கட்டுரையில் சுருக்கமாக எழுதுகின்றேன். ∎

# மீட்சி



குந்தவை

பிரமை பிடித்தவன் போலிருந்த நாகராஜன் சுயநினைவு பெற்றான். யோசித்த பிறகே, உள் மனத்தில் அப்பிக் கொண்டிருந்த ஏதோ ஒரு திகைப்பில், தன்னை மறந்து இருந்தது தெரிந்தது. பஸ்சிற்குள் பிராயாணம் செய்யும் உணர்வும் தட்டியது.

பஸ், எகிறி எகிறி ஓடிக்கொண்டிருந்தது. அவ்வோட்டத்திற்கேற்ப, வெளியே இருந்து வீசிய காற்று: உள்ளேயோ, பகல் உக்கிரம் சிந்தி மறைந்த வெப்பத்தின் நெடி; இரண்டும் சேர்ந்த ஒரு வினோதமான கலவை, விட்டு விட்டு வந்து முகத்தை அழுத்தி யது.

அவன் தன் "கோம்ரேட்டு"களுடன் நாவலப்பிட்டியிலிருந்து திரும்பிக் கொண் டிருந்தான் அங்கு வசதியற்ற நிலையில் இருக்கும் தோட்டச் சிறுவர்களுக்குக் கல்வி போதித்துவிட்டு பேராதனை - கம்பெசுக்குத் திரும்பிப் போய்க் கொண்டிருந்தனர். "கல்விப்போதனை" - மனத்தில் அதேகாட்சி.

தோழன் குருநாதன். தோட்டக் குழந்தைகளை வரிசையாக அமர்த்தி விட்டு தன் 'போதனை'யை நடத்து கிறான். "உலகப் பெரியார்கள் - 'மார்க்ஸ் லெனின், ஸ்டாலின், மா - சே - துங் நீங்களும் அவர்களைப் போல... பக்கத்தில் நின்று கேட்டுகொண்டிருந்த அவனுக்கு "கரீல்"என நெஞ்சில் ஏதோ இறங்கியது.

பிஞ்சு நெஞ்சங்களில் படியும்படி சொல்லிக் கொடுக்கும் படிப்பு இது தானா?

அவனால் அடக்கிக் கொண்டிருக்க முடியவில்லை பஸ் ஸ்டாண்டுக்க வரும் பொழுது குருநாதனிடம் இதைக் கேட்டேவிட்டான். 'அதுக்கு என்னடா? இதுதான் எங்கட பிரச்சாரம். எங்கட கொள்கைகளை எப்படியும் புகட்ட வேணும். அவ்வளவுதான்' தன் கட்சிக்காரன் என்ற உரிமையில், அவனிடம் குருநாதன் உண்மையை அப்படியே பச்சையாகச் சொல்லிவிட்டான்.

தூய பயன் கருதாப்பணி என வெளியில் சொல்லிக் கொண்டு பல்கலைக் கழகத்திலிருந்து இங்கு வருகின்றார்களே! அந்தத் தூய்மையின் விலை இவ்வளவுதானா?

புனிதமான சேவை என்ற உணர்வும், அது அளித்த உற்சாகமுமாய் அவன் தோட்டத்திற்குள் நுழைந்தானே. தன்னருமைத் தோழர்களளோடு. இவர்கள் கட்சி என்ற குறுகிய எல்லைக்குள்ளேயே எல்லாவற்றையும் அடக்கும் திறமை பெற்றவர்கள். புனிதம் என்ற சொல்லே இவர்களுக்குத் தெரியாது. தெரிந்த செல்வம் கட்சி ஒன்றுதான்.

மனத்தைச் சமாதானப்படுத்த முயன்றான். இவர்களின் இலட்சிய நாடுகளில் கையாளப்படும் கல்விமுறை இத்தகையதுதான், இதை இங்கும் பிரத்தியட்சமாகச் செய்து பார்க்கிறார்கள் அவ்வளவுதான். இப்பொழுதே இப்படி என்றால்... இலங்கையும் இவர்கள் விரும்பிய மாதிரி வந்து விட்டால்... ஐயய்யோ வேண்டாம்!

என்ன ஐயய்யோ வேண்டிக்கிடக்கிறது. தானும் அவர்களில் ஒருவனாக இதுவரை இருக்கும் பொழுது...

பஸ், ஒரு குலுக்கலுடன் ஒரு ஸ்டாப்பில் வந்து நின்றது. விழப்போனவன் பக்கத்து சீட்டின் விளிம்பைப் பிடித்துக் கொண்டு சமாளித்தான்.

ஒரு தோட்டத் தொழிலாளக் குடும்பம். ஏறி வந்தது. அதில் ஒரு சிறுமி, இருக்க இடம் தேடி அவன் சீட்டருகில் வந்து ஒதுங்கினாள். தள்ளியிருந்து அவளுக்கு இடவசதி அளித்தவன், கேட்டான். "தங்கச்சி எங்க போறீங்கள்?"

'சினிமா பார்த்திட்டு தோட்டத்துக்குத் திரும்பிட்டு இருக்கோம்' இலங்கைத் தமிழும் இந்தியத் தமிழும் சங்கமமாயின.

அவன் சிறுமியை நோட்டமிட்டான். சீத்தைத் துணியில் தைத்த மண்ட் சட்டை; தலைப் பின்னலை நுனியில் வெள்ளைத் துணி வைத்து முடிந்திருந்தது. கையில் கண்ணாடி வளையல். அவளிலும், பக்கத்து ஆசனத்தில் இருந்த அவள் தாய், தமக்கை ஆகியோரிடமும் வறுமையின் தேக்கத்தினையும் அறியாமையின் வெகுளித் தோற்றத்தையும் காண முடிந்தது.

எண்ணிக்கைப் பொருளாக ஐந்து வருடத்திற்குள் நாடு கடத்தப்படப் போகும் ஐந்து லட்சம் பேரில் இக்குடும்பமும் ஒன்றாய் இருக்கலாம். கடும் உழைப்பைக் கொட்டி தாம் வளமாக்கிய நாடு. இப்பொழுது குடி இருக்கக்கூட உரிமை அளிக்க மறுத்து தம்மை துரத்துவதற்காகவே எடுக்கும் கல் நெஞ்ச நடவடிக்கைகளை இவர்கள் இன்னும் உணராததும் இருக்கலாம் இவர்களைப் பற்றி ஏக கட்சி ஒன்றும் சொல்லவில்லை? கட்சியின் நிலைதான் என்ன? தமக்க வெட்டுப் பழி குத்துப்பழி.

அக்குடும்பமே பக்கத்து இரு சீட்டுகளிலும் ஏகாதிபத்தியம் செலுத்தியது. 'ஏகாதிபத்தியம்' கட்சியின் றெடிமேட்" சொல். அடிக்கடி உச்சரிப்பதால் நினைவில் கூட ஒரு சொல்லே வருகின்றது. உண்மையாகப் பார்த்தால் இவர்கள் தான் ஏகாதிபத்தியவாதிகள் தம் கொள்கையைத் தோட்டச் சிறுவர்களுக்கும் திணித்து ஆதிக்கம் பெற முனைபவர்கள், ஒன்றையே திரும்பச் திரும்பச் சொல்வதன் மூலம் சுய அறிவை மழுங்க வைத்து...

பக்கத்திலிருந்த குருநாதன் உசுப்பினான். 'என்னடா மச்சான். பெரிய யோசினை? எங்களுக்கு படிப்பிச்ச அலுப்பு கண்டியோ. அதை போக்காட்ட ஹிந்துகலையிலை இறங்கிறம். நீதான் 'நல்ல பிள்ளை'யாச்சே பத்திரமாக கம்பசுக்கு போய்ச் சேர். நாளைக்குப் பின்னேரம் கட்சிக் கூட்டம் மறந்திடாதை' என்னவென்றோ எல்லாவற்றுக்கும் தலையாட்டி விட்டான்.

பூங்கா வாசலில் இறங்கி ஹோலை நோக்கி நடந்தான். இருபுறமும் உயர்ந்த மேடுகளுக்கு நடுவான பாதையில், இருண்ட அமைதியில் "விறுவிறு" என நடப்பது உளையும் மனத்துக்கு ஏற்றதாக இருந்தது. ஆவேசமான நடையினால் தூரம் குறுகியது. சதுரக் கோடுகளாய் வழிவந்த விசயவர்த்தனா விடுதியின் மின்சாரம் அவனுக்கு வழி காட்டுவது போல ஒளிர்ந்தது. அதை நோக்கி நடக்க நடக்க மனம் தெளிவாவது போல இருந்தது.

அறையை அடைந்ததும் அவன் படுக்கையில் விழுந்தான். சாப்பாட்டுக்கும் போகவில்லை. "ரூம்மேட்"விளக்கை அணைத்து வெறும் படுக்கும் வரை காத்திருந்துவிட்டு எழுந்து, இருட்டோடு இருட்டாம் கட்டிலில் உட்கார்ந்து கொண்டான்.

பழைய நினைவுகள் அசைந்து ஊர்ந்தன. முதன் முதன் தழிழ்ச்சங்கப் பேச்சுப் போட்டியில் கலந்துகொண்ட பொழுது கற்றுக்குட்டி தான். பேரளவில் அவனுக்குத் தெரிந்திருந்த மார்க்கசீய தத்துவங்கள். அப்பொழுது இனிக்கவே செய்தன. அவற்றை மட்டும் வைத்துக்கொண்டு அவன் தன் போச்சு வன்மையால் முதல் பரிசைத் தட்டியபொழுது. அவனை வந்து பாராட்டி. தாமாகவே தம்மை அறிமுகம் செய்து கொண்ட கம்யூனிச மாணவர்கள்:

பின் அவர்கள் கூட்டிச் சென்ற கூட்டங்கள் போதனா வகுப்புக்கள். முதற் கட்சிப் போதனா வகுப்புக்களிலிருந்து அவன் வெளியே வந்தபொழுது ஒரு புதிய உலகைத் தரிசித்துவிட்டது போல அவனுக்கு ஏற்பட்ட மலைப்பு.

ஆனால் நாள் ஆக ஆக கட்சி வகுப்புக்கள் யாவும் ஒன்றையையே திரும்ப திரும்பச் சொல்லிச் சொல்லி அதன் படியே நடப்பிப்பது போலே அவனுக்கு படும். பாதகமான கருத்துக்கள் யாவும் மழுப்பி மறைக்கப்படுவதாகவும் அவனுக்கு சில வேளைகளில் தோன்றும். இந்த நினைவை அவன் கஷ்ரப்பட்டு வேறுபக்கம் திருப்பிக் கொள்வான். இன்றுதான் கட்டவிழ்த்து உசுப்பிவிடப்பட்ட அவன் சுயசிந்தனை...

ஏதோ ஒரு ஆவேசத்துடன் லைட்டைப் போட்டுவிட்டு மேசையில் கிடந்த மார்ச்சீயப் புத்தகங்களைப் புரட்டினான். அவை எல்லாம் வெறும் பிரச்சாரங்களாகவே இப்பொழுது அவனுக்குத் தெரிந்தன. மனிதனை சிந்திக்கத் தேவையற்றவனாக்கி, அவன் சுய அறிவை மழுங்க அடிப்படையாக அவை காட்சியளித்தன.

புத்தகங்களை மூடிவிட்டு படுக்கையில் குடைந்து கொண்டு படுத்துக் கொண்டான்.

எல்லா நினைவுகளையும் விலக்கி மேடிட்டு எழுந்த ஒரு தீர்மானம் குழப்பத்தைக் கலைத்து மனத்தைத் தெளிவாக்கி தெம்பளித்தது போல இருந்தது. அத்தீர்மானம் சரியானது என்பதால் எழுந்த ஒருவித துணிவுணர்ச்சி, நெஞ்சுக்குத் தைரியம் ஊட்டி முட்டிக்கொடுத்தது.

ஒரு கிழமை கழித்து

அன்றும் அதே மாதிரி நாகராஜன் கட்டிலில் படுத்திருந்தான். ஆனால் இப்பொழுது முன்போல் எண்ணங்கள் குமுறிக்கொண்டு அலைபாயவில்லை. குழப்பமில்லை. மாறாக வெளியேற்றப்பட வேண்டிய ஏதோ ஒரு இடத்திலிருந்து, வெற்றிகரமாக தப்பித்து வெளியேறிய திருப்தியும், அமைதியாக ஏதோ அபூர்வ சாதனையைச் செய்து விட்டு பெருமிதமும் நெஞ்சில் நிறைந்து ததும்பியது.

இனம் தெரியாத பரவசம் ஊறி வந்து சுழி பரப்புகையில் அந்தச் சுழிப்பிலே குமிழ் காட்டிப் பொடியும் வளையங்கள் - அந்த ஒரு கிழமைக்குள் அவனுக்குக் கிடைத்த அனுபவங்கள்.

இதுவரை காலமும் தன் குருவாக இருந்த குருநாதனிடம், அவன் தன் முடிவை - கட்சியிலிருந்து விலகி நிற்கப் போவதைக் கூறிய அடுத்த நாள், குருநாதன், வேறு ஒருவனோடு வந்து அவனைத் கண்டிக்கு வரும்படி அழைத்தான்.

அவனின் பெருந்தன்மையான போக்கை மெச்சிக்கொண்டு அவர்களோடு புறப்பட்ட நாகராஜனுக்கு வழிநெடுகக் கிடைத்தவைகள் எல்லாம் 'போதனைகளே'.

"கொள்கை என்று சொல்லிக் கொண்டு இவ்வளவு நாளும் எங்களோடு திரிச்சு போட்டு, இப்ப நீ விலகுறது பிழை, பச்சோந்தித்தனம் எண்டு தான் சொல்லுவங்கள்."

'ஓம் பிழை தான்' நாகராஜன் ஒத்துக் கொண்டான். "என்ர அறிவு சரியாச் சிந்திக்க முன்னம், உங்கட் கொள்கையால கவரப்பட்டனான்தான், இப்ப யோசிக்க, யோசிக்க உங்கட கொள்கை - அதைவிட நீங்கள் அதுக்காகக் கையாளுகிற முறையெல்லாம்..."

"யோசி, தம்பி யோசி, உன்ர அறிவு இன்னும் சரியாப் பண்படுத்தப்படவில்லை. அதுதான் தீர்க்கமா, ஒரு முடிவுக்கு வர முடியாமை, இப்படி அவதிப்படுறாய் என்றவன், நாகராஜன் அதை மறுத்து ஏதும் சொல்லமுன் உடனே தொடர்ந்தான்" எல்லாக் கொள்கையிலும் சில குறைகள் இருக்கத்தான் செய்யும். கொள்கை எண்டு வந்திட்டா, அதை எப்படியும் விட்டுக்கொடுக்கக் கூடாது. அதுக்காக எதையும் செய்யக் கூடிய தீவிர ஆவேசம் வேணும். கட்சிகளில் ஈடுபடுகிற எவனும் இப்படித்தான் செய்கிறான். ஒருத்தனும் தன்ர கட்சியில் இருக்கிற சின்னக் குறைகளைப் பாராட்ட மாட்டான். இதுகளால் யாரும் தன்ர கட்சியைக் குறைத்துச் சொல்லவும் விட மாட்டான்."

பஸ் ஸ்டாண்டு வந்துவிட்டது. நாகராஜனுக்கு மூளை குழப்பப்படுவது போலிருந்தது. **(16 ஆம் பக்கம் பார்க்க)**

# மீட்சி

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

அவன் எதிர்பார்த்த திசைக்கு எதிர்ப்புறமாக வந்து நின்ற பஸ்சில், குருநாதன் அவனை தள்ளிக் கொண்டு ஏறினான். "இதிலா? என நாக ராஜன் திகைப்பற்று ஏறடா சொல்றன்" என்பதே பதிலாகக் கிடைத்தது.

சீட்டில் அமர்ந்த பிறகுதான் குரு நாதன் சொன்னான் 'எங்கட சொர்க்கத் திற்கு' போறம். 'ஹிந்துக்கலைக்கு'. இண் டைக்கு என்ரை 'றீற்' உனக்கு நீ கட்டா யம் குடிச்சுத்தான் பார்க்கோணும்.

நாகராஜனுக்கு தெற்றென ஏதோ புலப்படுவது போலிருந்தது. மூளை யைப் 'பண்படுத்தும்' முறையில் இதுவும் ஒரு அம்சமோ?

உடனேயே, வாய், நினைத்தவற்றுக்கு. ஏதோ ஒரு உத்வேகத்துடன் சொல்லுரு வம் கொடுத்தது. "சில நாடுகளிலை 'மூளைச்சலவை' முறை கையாளப்படு கிறதாய் கேள்விப்பட்டிருக்கிறன். அந்த முறை இப்ப என்னிலை நேரில் பரிட்சித் துப் பார்க்கப்படப் போகுது போல கிடக்கு'.

குருநாதன். உள்ளுக்குள்ளே திகைத் துப்போனது தெரிந்தது. "தம்பி நீ என் னமோ கனக்கத் தெரிஞ்சது மாதிரி கதைக் கிறாய்."

நாகராஜனும் தயங்கவில்லை. அடுத்த ஸ்டாப்பிலேயே விருட்" என இறங்கிக் கொண்டு விட்டான்,

அடுத்த கட்டம் - பயங்கரமானது.

பயமுறுத்தல்: எச்சரிக்கை. ஒரு நாள் அந்தி நேரம். அவனைத் தனியே வழி மறித்தனர் பழைய 'தோழர்கள்'.

அவர்கள் பேசிய தோரணையைக் கண்டபொழுது அவர்களிடமிருந்து பத்திரமாகத் தப்பி வரமுடியுமென்ற எண்ணம் அவனுக்கு இருக்கவில்லை. "எங்களைப் பகைச்சா, உனக்கு கம்பெசுக் குள்ளை, நல்ல காலம் இல்லை. இங்கே யிருந்து நீ உருப் படியா பாஸ் பண்ணிக் கொண்டு போக ஏலாது. இதை நினைவில் வைச்சுக்கொள்".

"உங்களை நான் எங்கை பகைச்சேன்? என்ரை கருத்து உங்களுடையதோடை ஒத்துப் போகவில்லை எண்டு சொல்லு றது கூடப் பிழையா?" அவன் அமைதி யாக, ஆனால் ஏகத்தாளமாகக் கேட்டான்.

"டேய்! கனக்க கதையாதையடா! எங்களைப்பற்றி உனக்கு தெரியேல்லை நாங்கள் என்னவும் செய்வம்".

"ஓ செய்வீங்ககள். பார்க்கத்தான் தெரி யுதே" அவன் எட்டி நடக்க முயன்றான் நல்ல வேளையாக, வீதி வழியாக யாரோ தெரிந்தவர்கள் வரவே, அவர்களும் விலகிச் செல்ல நேரிட்டது.

அவனுக்கு எங்கோ, ஸ்டாலின் கால 'இரும்புத்திரை' நாடுகளின் தெரு ஒன் றில் நடப்பது போலிருந்தது. ஆனால், நல்ல வேளையாக இலங்கை அப்படிப் பட்ட நாடு இல்லை. "தோழர்'களின் வெறும் சொற்கள் ஆத்திரத்தின் ஒலிவடி வங்களே. அவர்களால் அவனை ஒன்றும் செய்ய முடியாது. பலாத்காரத்தில் நம் பிக்கை உள்ளவர்கள் தான். ஆனால், அதை இங்கு இவர்களால் செயற்படுத்த முடியாது. இது பொதுவுடமை நாடல்ல.

வேறுபட்ட கருத்துடையானை 'திருத்தி' எடுக்க, தம் இலட்சியம் நாடு களில் கையாளப்படும் முறைகளை இங் கும் அப்படியே செய்து பார்க்கும் ஒரு கூட்டத்தாரிலிருந்து தான் பங்கு பெறாது தப்பிவிட்டதை நினைக்க, நினைக்க, படுத்திருந்த நாகராஜனுக்கு பெருமை பிடிபடவில்லை.

இந்த நிறைவினை, அப்படியே தனியாக கொஞ்ச நேரம் அனுபவிக்க வேண்டுமென்ற துடிப்புணர்ச்சி, அவ் உணர்வினுள் இருந்த இதமே, மெல்லமாக வந்து அவன் கண்ணிமைகளை அழுத்தியது. ■

- (சுதந்திரன் 24.01.1965)



# காதலுக்காக அரச பட்டத்தை துறந்து காதலரை கரம் பிடிக்கும் இளவரசி

## 26 ஆம் திகதி திருமணம்

காதலுக்காக அரச பட்டத்தை துறந்த ஜப்பான் இளவரசி காதலரை வருகிற 26 ஆம் திகதி திருமணத்தில் கரம் பிடிக்கிறார்.

ஜப்பான் மன்னர் நருகிடோவின் இளைய சகோதரர் புமிகிடோவின் மகளும், அந்த நாட்டின் இளவரசியுமான மகோ (வயது 29), கடந்த 2012 ஆம் ஆண்டு கல்லூரியில் படித்த போது தன்னுடன் படித்த கீ கோமுரோ (29) என்னும் சாதாரண குடும்பத்தை சேர்ந்த இளைஞருடன் நட்பாக பழக ஆரம் பிக்க, பின்னர் இருவருக்கும் இடையில் காதல் மலர்ந்தது. அதை தொடர்ந்து, 2017 ஆம் ஆண்டு இருவரும் தங்களது திருமண அறிவிப்பை வெளியிட்டனர்.

பல நூற்றாண்டுகளாக தொடரும் அரச வழக்கப்படி, இளவரசி சாதாரண குடும்பத்தை சேர்ந்த நபரை திருமணம் செய்து கொண்டால் அவர் தனது அரச பட்டத்தை துறக்க வேண்டும். காத லனை கைப்பற்றுவதற்காக தனது அரச பட்டத்தை துறந்ததுடன், அரச குடும் பத்தில் இருந்து வெளியேறும் பெண் களுக்கு இழப்பீடாக வழங்கப்படும் 1.3 மில்லியன் அமெரிக்க டாலரயை/ம் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.9 கோடியே 63 லட்சம்) நிராகரித்தார் மகோ.

2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நவம்பரில் தங்களின் திருமணம் நடைபெறும் என மகோ-கீ கோமுரோ ஜோடி அறிவித்த நிலையில், கீ கோமு ரோவின் தாயின் கடன் பிரச்சினையால் இந்த திருமணம் ஒத்திவைக்கப்பட்டது. இதைதொடர்ந்து, 2018 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கீ கோமுரோ தனது சட்டப்படிப்பை தொடர்வதற்காக அமெரிக்கா சென்றுவிட்டார். 3 ஆண்டு களாக தனது காதலியை பிரிந்து இருந்த அவர் கடந்த திங்கட்கிழமை ஜப்பான் திரும்பினார்.

இந்த நிலையில் மகோ-கீ கோமுரோ வின் திருமணம் வருகிற 26 ஆம் திகதி நடைபெறும் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இருவரும் தங்களின் திருமணத்தை உள்ளூரில் உள்ள ஒரு அரசு அலுவலகத்தில் பதிவு செய்வார்கள் என்றும், திருமணத்துக்கு பிறகு இருவரும் அமெரிக்காவில் குடியேறுவார்கள் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# இனமுரண்பாட்டின் காரணங்களை...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சாசனத்தில் கூறப்பட்டுள்ள சுதந்திரங் களை மேம்படுத்துவதற்கு எமது நண்பர்களையும் பங்காளிகளையும் நாம் ஊக்கப்படுத்துகின்றாம். நல்லிணக்க முயற்சிகளை தொடர்ந்து நாம் ஆதரிக் கிறோம். ஜனநாயக ரீதியானதும் சுபிட்சமுடையதும் சகல தரப்பினரை யும் அரவணைக்கின்றதுமான இலங்கை யொன்றின் மீது நாம் பற்றுறுதி கொண்டிருக்கிறாம்.

**கேள்வி:** தமிழர் பிரச்சினையானது அடிப்படையில் ஒரு அரசியல் பிரச் னையாகும். அரசியல் பிரச்னை அரசி யல் தீர்வொன்றின் ஊடாக மாத்திரமே தீர்க்கப்படமுடியும். போர் முடிவுக்கு வந்து 12 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், தமிழர் பிரச்னையில் ஆரம்ப கருத்தொருமிப்பு இன்னமும் எட்டப் படவில்லை. இந்திய - இலங்கை உடன்படிக்கையினால் கொண்டுவரப் பட்ட 13ஆவது திருத்தம் கூட இன்னமும் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படவில்லை. அரசியல் தீர்வொன்றில் அமெரிக்காவுக்கு அக்கறை இருப்பதாக தமிழ் அரசியல் வட்டாரங்களில் கருத்தொன்று இருக்கிறது. இது விடயத்தில் இந்தியா அக்கறை வெளியிட்டு வருகின்றது. இந்த பின்னணியில் தமிழ் மக்களுக்கான அரசி யல் தீர்வொன்றில் அமெரிக்க நிலைப் பாடு என்ன?

**பதில்:** இலங்கையின் பல்வேறுபட்ட சமூகங்களையும் சேர்ந்த சகலருக்குமான நல்லாட்சி, மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியை அமெரிக்கா ஆதரிக்கிறது. அரசியல் ரீதியில் அதற்கு இருக்கக்கூடிய தடைகளைத் கடந்து பணியாற்றவேண்டியதும் இதில் அடங்கும்.ஐக்கிய நாடுகளின் நிலை பேறான அபிவிருத்தி இலக்குகள் மீது இலங்கை பற்றுறுதி கொண்டுள்ளது. அந்த இலக்குகளை அடைவதில் இலங்கைக்கு நாம் ஆதரவளிக்கிறோம்.

இலங்கையில் ஆட்சிமுறை மற்றும் மனித உரிமைகளுக்கு அரசியல் பரிமா ணம் இருப்பதை நாம் ஏற்றுக் கொள் கிறோம். அரசியல் முனையில் முன் னேற்றம் ஏற்படவேண்டும் என்று நாம் வலியுறுத்துகின்றோம். அரசியலமைப்பு ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படு வதை நாம் ஆதரிக்கிறோம். மாகாண சபைத் தேர்தல்களை நடத்துமாறு அரசாங்கத்தை நாம் ஊக்கப்படுத்து கிறோம். இலங்கையின் அரசியல் முறைமையில் மாற்றங்களை பேச்சுவார்த்தை மூலம் ஏற்படுத்துவதற்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்திருக கின்றன என்பதை நான் அறிவேன். இலங்கை அரசுக்குள் பிராந்திய மற்றும் உள்ளூராட்சிகள் மட்டத்தில் அதிகார வலுவூட்டல் செயன்முறைகள் முன்னெ டுக்கப்படுவதையும் நான் அறிவேன். அத்தகைய மாற்றங்களை தீர்மானிப்பது இலங்கை மக்களைப் பொறுத்தவிடயம் என்கிற அதேவேளை, இனமுரண்பாட் டின் ஆணிவேர்க்காரணங்களை கையாளுவதற்கு அரசியல் தீர்வும் வேறு இணக்கப்பாடுகளும் அவசியம் என்று அமெரிக்கா கருதுகிறது.

வன்முறையால் பாதிக்கப்பட்ட வர்கள் நீதியையும் பொறுப்புக்கூறலுக் கான பொறிமுறையையும் பெற உரித் துடையவர்கள். இந்த இலக்கை அடை வதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமை கள் பேரவை போன்ற பொறிமுறைகள் உதவுகின்றன.சகல மக்களுக்கும் பொறுப்புக்கூறும் கடப்பாடுடைய அரசாங்கம் ஒன்று குற்றவியல் முறைப் பாடுகளை மெய்யாகவும் நம்பகத்தன் மையுடனும் விசாரித்து சம்பந்தப்பட்ட வர்கள் மீது வழக்குத்தொடுக்க முன்வர வேண்டும் என்கிற அதேவேளை, மோதலைத் தோற்றுவித்த அரசியல், பொருளாதார,சமூக பிரச்னைகளுக்கு தீர்வுகாண முயற்சிக்க வேண்டும்.

ஜனநாயகம், மனித உரிமைகள் மற் றும் சட்டத்தின் ஆட்சியை அமெரிக்கா வலியுறுத்தும்போது இந்த இலட்சியங் கள் எல்லாவற்றையும் நாம் எமது நாட் டில் கச்சிதமாக கடைப்பிடிக்கிறோம் என்றாகிவிடாது. பெருமளவுக்கு கச்சித மான ஒன்றியம் ஒன்றை அமைப்பதற்கு நாம் எப்போதும் பாடுபடுகிறோம். உயர்ந்த தராதரங்களை பின்பற்ற முயற் சிக்கிறோம்.ஆத்ம பரிசோதனை என்ப தும் ஒரு சமுதாயமாக வளர்வது என்ப தும் எப்போதுமே சிக்கலானதும் வேதனை மிக்கதுமாகும். ஆனால் இவ்வாறுதான் ஜனநாயகங்கள் செயற்படுகின்றன. ஏனென்றால், இறுதியில் ஆட்சி செய் யப்படுகிறவர்களுக்கு உதவுவதற்கே அரசாங்கங்கள் இருக்கின்றன.சமூகங்கள் அமைதியான முறையில் வளர்வதற்கு உதவுவதே அரசாங்கத்தின் பொறுப் பாகும்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சாசனத்தில் கூறப்பட்டுள்ள சுதந்திரங் களை மேம்படுத்துவதற்கு எமது நண்பர் களையும் பங்காளிகளையும் நாம் ஊக்கப் படுத்துகின்றாம். நல்லிணக்க முயற்சி களை தொடர்ந்து நாம் ஆதரிக்கிறோம். ஜனநாயக ரீதியானதும் சுபிட்சமுடை யதும் சகல தரப்பினரையும் அரவணைக் கின்றதுமான இலங்கையொன்றின் மீது நாம் பற்றுறுதி கொண்டிருக்கிறாம். ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II
நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

### முன்னோடி வினாத்தாள் 3 - I

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. (3) | 2. (1) | 3. (1) | 4. (1) | 5. (3) | 6. (3) | 7. (3) |
| 8. (2) | 9. (2) | 10. (1) | 11. (3) | 12. (1) | 13. (2) | 14. (3) |
| 15. (1) | 16. (2) | 17. (2) | 18. (2) | 19. (3) | 20. (3) | 21. (1) |
| 22. (2) | 23. (3) | 24. (3) | 25. (1) | 26. (3) | 27. (3) | 28. (2) |
| 29. (1) | 30. (2) | 31. (3) | 32. (1) | 33. (1) | 34. (3) | 35. (1) |
| 36. (2) | 37. (1) | 38. (3) | 39. (3) | 40. (2) | | |

### II

01. i) ஆதரவு ii) பேசுகிறான் / நேசமாகவும் iii) அன்பாகவும் - நேசமாகவும் / அன்பு - நேசம்
iv) பேசுகிறான் / சொல்கிறான் v) வகுப்பு + ஆசிரியரை vi) வகுப்பாசிரியர்
vii) அன்பு / நேசம் / ஒழுங்கு / மரியாதை viii) மாணவர்கள் / மாணவர்களும் / பலர் (08 புள்ளிகள்)
02. i) அழி ii) ஊண் iii) அரிய (03 புள்ளிகள்)
03. i) விதண்டாவாதம் ii) மனமின்றிச் செய்தல் (02 புள்ளிகள்)
04. i) வேட்பாளன் ii) பவள விழா iii) வாதி (03 புள்ளிகள்)
05. i) t ii) r (02 புள்ளிகள்)
06. i) தயவு செய்து உங்கள் புத்தகத்தைத் திறவுங்கள்.
ii) நான் தாவரங்களுக்கு நீர் ஊற்றுகின்றேன் / ஊற்றிக் கொண்டிருக்கின்றேன். (02 புள்ளிகள்)
07. I want to sing. (02 புள்ளிகள்)
08. i) தும்றிய ஸ்தானய ii) மொணரா (02 புள்ளிகள்)
09. i) மிருகக் காட்சிச் சாலைக்குப் போவோமா? ii) துள்ளிப் பாயுங்கள். (02 புள்ளிகள்)
10. நாமும் நினைக்க வேண்டும்.
11. கற்றோனின் / கற்றவரின்
12. ஞாலத்தின் மாணப் பெரிது. (03 புள்ளிகள்)
13. i) டங்கன்வைட் ii) மையச் செயலகம் iii) 1968 (03 புள்ளிகள்)
14. பொருத்தமான வாக்கியங்கள் (06 புள்ளிகள்)
15. எழுபத்தோராயிரத்துப்பத்து
16. i) viii ii) 2
17. 64, 81
18. 33
19. 900*l*
20. 7 மணி 25 நிமிடம்
21. 10
22. $\frac{9}{10}$
23. 13305
24. i) 16cm ii) $15cm^2$
25. 55mm
26. i) 24 ii) 12
27. செவ்வகம்
28. 81
29. i) 20 ii) பொருத்தமாக வரைக (30 புள்ளிகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| 30. 4 | 31. 3 | 32. 2 | 33. 1 | 34. 1 |
| 35. 3 | 36. 3 | 37. 2 | 38. 4 | 39. 2 |
| 40. 4 | 41. 2 | 42. 3 | 43. 2 | 44. 2 |
| 45. 1 | 46. 2 | 47. 3 | 48. 3 | 49. 3 |
| 50. 4 | 51. 1 | 52. 1 | 53. 4 | 54. 1 |
| 55. 3 | 56. 3 | 57. 4 | 58. 1 | 59. 2 |

(30 புள்ளிகள்)

**குறிப்பு:** உறுப்பெழுத்து – 02 புள்ளிகள்
100 புள்ளிகள்

---

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

கிராமம் முழுவதும் கடும் வறட்சி நிலவியது. காட்டு மரம் செடி கொடிகள் யாவும் கருகிக் கிடந்தன. விட்டுவிட்டு வீசுகின்ற அனல் காற்றினால் மக்கள் அவதிப்பட்டனர். கிராமத்தினூடாகப் பாய்ந்து சென்ற ஆறும் வற்றிவறண்டு போயிற்று. கிராமவாசிகளுக்குக் குடிப்பதற்குத் தானும் ஒரு துளி நீரும் கிடைக்கவில்லை. மிருகங்கள் தமக்குச் சௌகரியமான இடங்களை நோக்கிச் சென்றன. மூத்த கிராமவாசிகள் தமது சொந்த இடங்களை விட்டுத் தாமும் போக நேரிடுமோ என்று அஞ்சி அஞ்சிக் காலங் கழித்தனர்.

- பந்தியை **மாத்திரம்** துணையாகக் கொண்டு விடையளிக்குக.
  (i) மரம் செடி கொடிகள் கருகிக் கிடந்தமைக்குக் காரணமான இயற்கை இயல்பு எது?
  : ..............................
  (ii) மக்கள் எதனால் அவதிப்பட்டனர்? : ..............................
  (iii) இணைமொழி ஒன்றினைத் தருக. : ..............................
  (iv) 'இளைய' என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. : ..............................
  (v) மிருகங்கள் எவ்வாறான இடங்களை நோக்கிச் சென்றன? : ..............................
  (vi) சொந்த இடங்களை விட்டுப் போக நேரிடுமோ என்ற அச்சத்துடன் இருந்தவர்கள் யார்?
  : ..............................

2. (i) அஃறிணைப் பன்மை நிகழ்கால வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
(1) பாடின (2) உண்கின்றனர் (3) கூவுகின்றன.
(ii) உயர்திணைப் படர்க்கைப் பன்மைப் பெயர்ச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
(1) பெற்றோர் (2) நாங்கள் (3) அவை

3. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.
(i) வாகை சூடுதல் : ..............................
(ii) நட்டாற்றில் விடல் : ..............................

4. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.
(i) அங்குள்ள சிற்பங்களைத் தொடவேண்டாம் என்று காவலாளி கூறினான்
(ii) திங்கள் புதன் வெள்ளி ஆகிய நாட்களில் மாலை நேர வகுப்புக்கள் நடைபெறும்

5. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.
நகரங்களுள் / ஒன்றாகும் / இலங்கையின் / அநுராதபுரமும் / பழைமையான
..............................
..............................

# கொரோனா இன்னமும் முற்றாக அடங்கவில்லை; பொருளாதாரச் சிக்கலாலேயே ஊரடங்கு நீக்கம்!

## பொறுப்பற்று செயற்பாட்டால் மீண்டும் பேராபத்து; இராணுவத் தளபதி எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 03

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் இன்னமும் முழுமையான கட்டுக்குள் வரவில்லை. பொருளாதாரப் பிரச்சினைகளால் நாட்டைத் தொடர்ந்து மூடிவைக்க முடியாத நிலை ஏற்பட்டதாலேயே ஊரடங்குச் சட்டத்தை நீக்கினோம். வைத்திய நிபுணர்களின் கூற்றின்படி மக்கள் பொறுப்பற்ற முறையில் செயற்பாட்டால் மீண்டும் கொரோனாவின் பேராபத்தை நாடு எதிர்கொண்டே தீரும்."

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்ட போதிலும் மக்களின் பொறுப்



பான செயற்பாடுகளே ஒக்ரோபர் மாதத்தின் நிலைமையைத் தீர்மானிக்கும்.

ஒரு மாதத்துக்கும் அதிக காலம் நாட்டை மூடி கொரோனாத் தொற்றை ஓரளவு கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டோம்.

மக்கள் நிலைமையைப் புரிந்துகொண்டு அவதானமிக்க முறையில் செயற்பட வேண்டும்.

நாட்டைத் தொடர்ந்து மூடிவைக்க முடியாது. கடந்த காலங்கள் முழுவதுமாக மக்கள் வழங்கிய ஆதரவுக்கமைய தொற்றை ஓரளவு கட்டுப்படுத்த முடிந்தது.

இந்தக் காலப்பகுதிகளிலும் அதேபோன்று அவதானமாக செயற்பட்டால் மாத்திரமே நாட்டை முன்கொண்டு நடத்திச் செல்ல முடியும்.

அதற்கமைய அரச ஊழியர்களின் பணிகள் வழமையான முறையில் நடத்திச் செல்லப்படவுள்ளது. அதேவேளை, அத்தியாவசிய சேவைகளுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு அதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன" - என்றார். (இ)

# நாடு பாதுகாப்புடன் இல்லை; மக்களே மிகவும் அவதானம்!

## வெவ்வேறு வடிவங்களில் வீரியம் மிக்க வைரஸ் பரவலாம் என்கின்றார் சந்திம

கொழும்பு, ஒக். 03

டெல்டா வைரஸ் பரவலே நாட்டில் காணப்படுகின்றது. ஆகவே, டெல்டா வைரஸ் தொற்றுப் பரவலுக்கு மத்தியில் நாடு பாதுகாப்பாக இருக்கின்றது என ஒருபோதும் கூறமுடியாது. மேலும் வெவ்வேறு வடிவங்களில் வேறு தன்மைகளில் வீரியத்தை அதிகரித்துக் கொண்டு வைரஸ் பரவலாம். அதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன. இவ்வாறான வைரஸ் பரவல்களை உடனடியாக அழித்துவிட முடியாது என்பதை சகலரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

- இவ்வாறு ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவின் பணிப்பாளரும் விசேட வைத்திய நிபுணருமான சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-



ஊரடங்கு மட்டும்தான் நீக்கப்பட்டுள்ளது. நாடு இன்னமும் முழுமையாகத் திறக்கப்படவில்லை. இறுக்கமான கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ளன.

எனவே, நாடு முழுமையாகத் திறக்கப்பட்டுள்ளது என்று நினைத்துக்கொண்டு மக்கள் வழமை போன்று கொரோனாவுக்கு முன்னர் செயற்பட்ட விதத்தில் செயற்பட முடியாது.

இப்போது வைரஸ் பரவல் ஓரளவு கட்டுப்பாட்டில் உள்ளதென்றால் கடந்த ஒன்றரை மாதங்களாகக் கையாளப்பட்ட கட்டுப்பாட்டு விதிமுறைகளே காரணமாகும்.

ஆகவே, இனியும் சுகாதார வழிமுறைகளை அதிகமாகக் கையாள வேண்டியது நாட்டில் வாழும் சகல மக்களினதும் கடமையாகும். இது தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன், ஏனைய சகலரதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்.

கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றிக்கொள்வது தமது உயிர் பாதுகாப்புக்கு இப்போது இருக்கும் ஒரே தெரிவாகும். ஆனால், தடுப்பூசியை ஏற்றிவிட்டோம் என்ற எண்ணத்தில் முகக்கவசம் இல்லாது, சுகாதார வழிமுறைகள் இல்லாது மக்கள் செயற்பட முடியாது" - என்றார். (இ)

# ஒய்வூதியம் வழங்க அரசிடம் பணம் இல்லாத நிலை வரும்

## ஐ.தே.க. தலைவர் ரணில் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 03

ஒய்வூதியம் வழங்க அரசிடம் பணம் இருக்காத நிலை விரைவில் வரும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சமூக ஊடக ஆர்வலர்களுடன் சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொரோனாத் தொற்று நோயால் ஏற்பட்ட நெருக்கடியை மட்டுமே ஏனைய நாடுகள் எதிர்கொள்கின்றன. ஆனால், கொரோனா காரணமாக ஏற்பட்ட நெருக்கடியுடன் நாமே உருவாக்கிய நெருக்கடி இரண்டுமே நாட்டில் உள்ளது.

மற்ற நாடுகளில் அந்நியச் செலாவணி கையிருப்பு குறையவில்லை. எனினும், நாங்கள் நேபாளத்துக்குக் கீழே இருக்கின்றோம்.

இந்நிலையில், ஒய்வூதியம் வழங்க அரசிடம் பணம் இருக்காத நிலை விரைவில் வரும். இன்று நாட்டுக்கு அந்நியச் செலாவணி இல்லை. உள்ளூர் வருமானம் இல்லை. முன்பு இதுபோன்ற சூழ்நிலை



இல்லை.

மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக இந்த ஆண்டுக்கான கடன் 108 சதவிகிதம் அமைந்துள்ளது. எனினும், நாங்கள் நாட்டை ஒப்படைத்த போது அது 88.6 ஆக இருந்தது.

நாங்கள் அரசை ஒப்படைத்துவிட்டு சென்றபோது ஏழரை பில்லியன் டொலர்கள் இருப்பு இருந்தது. கூடுதலாக, டொலர் இருப்புக்களில் இரண்டரை பில்லியன் இருந்தன. இன்று கையிருப்பில் இரண்டு பில்லியன் டொலர்கள் மட்டுமே உள்ளன.

நாங்கள் செய்தது பொருளாதாரத்தை மறுசீரமைத்து கடன் சுமையை குறைப்பதாகும். சம்பளத்தை அதிகரித்தது மட்டுமல்லாமல் முதலீட்டாளர்களுக்குத் தேவையான சூழலை மேம்படுத்தினோம்" - என்றார். (இ)

# தடுப்பூசிக்குக் கட்டுப்படாத வைரஸ்கள் உருவாகலாம்!

## இலங்கை வைத்தியர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 03

நாட்டில் கொரோனாத் தடுப்பூசிக்குக் கட்டுப்படாத புதிய வைரஸ்கள் உருவாகலாம் என்று இலங்கை வைத்தியர்கள் சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொரோனா வைரஸ் பரவல் நிலைமைகள் இப்போது ஓரளவு கட்டுப்பாட்டில் இருந்தாலும் கூட மீண்டும் வைரஸ் தொற்றுகள் உருவாக அதிக வாய்ப்புகள் உள்ளன. தடுப்பூசிக்குக் கட்டுப்படாத புதிய வைரஸ் தொற்றுகள் உருவாகலாம். எனவே, இறுக்கமான சுகாதார வழிமுறைகளை மக்கள் அனைவரும் தவறாது பின்




பற்றிச் செயற்பட வேண்டும்.

டெல்டா வைரஸ் பரவலின் எச்சரிக்கை நிலையில் இருந்து நாடு முழுமையாக விடுபடவில்லை என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நீண்ட நாட்களாக நாடு தனிமைப்படுத்தல் ஊரடங்கின் கீழ் இருந்த போதிலும் கட்டுப்பாடுகள் முழுமையாகப் பின்பற்றப்படவில்லை. அத்தியாவசிய சேவைகள் என்ற பெயரில் பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், பொதுப் போக்குவரத்து நிறுத்தப்பட்டமை மற்றும் பொது ஒன்றுகூடல், நிகழ்வுகள் நடத்த தடைவிதிக்கப்பட்டமை என்பன சாதகமான பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளன என்றே கூற வேண்டும்.

எவ்வாறு இருப்பினும் நாட்டில் அச்சுறுத்தல் நிலை காணப்படுகின்ற நேரத்தில்தான் நாடு திறக்கப்பட்டுள்ளது என்பதை சகலரும் தெரிந்து கொள்ள வேண்டும்.

மீண்டும் வைரஸ் பரவும் அச்சுறுத்தல் நிலைமை உள்ளது. தடுப்பூசி ஏற்றிவிட்டோம் என்பதற்காக சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாது செயற்பட கூடாது" - என்றார். (இ)

# ஸ்டாலின்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வாரத்துக்கான உரையாடலை முடித்துக்கொள்வதற்கு முன்பாக, ஆளுநர் ரவியின் செயல்பாடுகளைப் பற்றியும் குறிப்பிடவேண்டும். மூத்த அரசு அதிகாரிகளை சந்தித்து அவர் நிலவரங்களைக் கேட்டறிந்து வருகிறார். தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் தீவிரவாத நடவடிக்கைகளைக் கண்காணிக்குமாறு காவல்துறை டி.ஜி.பி சைலேந்திர பாபுவிடம் அவர் கூறியிருக்கிறார். பட்டா கத்தி, அருவாள், ஈட்டி போன்ற ஆயுதங்களைத் தயாரிக்கும் சட்டவிரோத அமைப்புகள்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சைலேந்திர பாபு எல்லா மாவட்ட காவல்துறை அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

இதுபற்றி அடுத்த ஞாயிற்றுக்கிழமை விரிவாகப் பேசலாம், இந்த வாரம், உங்கள் எல்லோருக்கும் சிறப்பாக அமையட்டும். வணக்கம்.

வேலையாள்கள் தேவை

• ரொட்டி போடுபவர் • சமையலாளர் (ஆண், பெண்)
• சாப்பாடு பரிமாறுபவர் • ஓட்டோ சாரதி

ஆண்களுக்கு தங்குமிட வசதி செய்து தரப்படும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 077 766 0776

## மத சார்பு...

சபையின் மேயர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

ஆரியகுளத்தின் மத்தியில் மத நல்லிணக்க மண்டபம் அமைப்பது தொடர்பில் ஊடகங்களில் வெளிவந்த செய்தி தொடர்பாக விளக்கமளிக்கும் முகமாக நேற்று ஊடக சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஊடகங்களுக்கும் சமூகவலைத்தள நண்பர்களுக்கும் நன்றிகள். செய்திகளில் தொடர்ச்சியாக என்னைப் பற்றி எழுதி எனது பெயரை மக்களின் மனங்களில் நிலைத்து நிற்க உதவியுள்ளீர்கள்.

பத்திரிகையாளர்களிடமும், சமூக வலைத்தள எழுத்தாளர்களிடமும் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். உங்களுடைய எழுத்துக்கள் பிரதேச மக்களுடைய அபிவிருத்தியை பாதிக்காததாக இருக்க வேண்டும். என்னுடைய நற்பெயருக்கு களங்கம் விளைவித்தால் அதனை நான் கண்டுகொள்ளமாட்டேன். ஆனால், என்மேல் உள்ள காழ்ப்புணர்ச்சியில் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய அபிவிருத்தியை பாதிக்குமாறு எழுதாதீர்கள்.

ஆரியகுளம் புனரமைப்பு என்பது என்னால் தயாரிக்கப்பட்ட திட்டம். அதில் என்ன உள்ளன என்பதைப் பகிரங்கமாகவே வெளிப்படுத்தியுள்ளோம். ஆரியகுளம் அபிவிருத்தியில் எந்தவொரு மதச் சார்பு அடையாளங்களையும் உட்புகுத்தவில்லை; உட்புகுத்தப் போவதுமில்லை.

நான் மேயராக இருக்கும் வரை குளத்தில் எந்தவொரு மதமும் பிரதிபலிக்க இடமளிக்கப்படமாட்டாது. இது தொடர்பில் மக்கள் அச்சப்பட வேண்டாம். மக்கள் அச்சப்படும் வகையில் போலியான தகவல்களைப் பரப்புவதைத் தவிர்க்குமாறு ஊடகம் மற்றும் சமூக வலைத்தள எழுத்தாளர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

விகாராதிபதியால் அனுப்பப்பட்ட கடிதத்தில் புத்தர் சிலை பற்றி எதுவும் கூறவில்லை. மத நல்லிணக்க மண்டபம் அமைப்பது பற்றியே கூறப்பட்டிருக்கின்றது.

ஒரு கடிதம் வந்தால் அதனை மாநகர சபைக்கு விடுவதுதே என்னுடைய வழமை. நாவலர் மண்டப விவகாரத்திலும் அதையே செய்தேன். நான் தனித்து முடிவெடுக்க இது என்னுடைய சொத்தல்ல. அதைச் சபையே தீர்மானிக்க வேண்டும். இதை என்னால் நிராகரிக்க முடியும். ஆனாலும், நான் நிராகரிக்காமல் அதைச் சபைக்கு விடுவதே வழமை. மத நல்லிணக்க மண்டபம் அமைக்க விடுக்கப்பட்ட கோரிக்கைக் கடிதம் உடனடியாக ஆணையாளருக்கு அனுப்பப்பட்டு, ஆணையாளர் ஊடாக செயலாளருக்கு அனுப்பப்பட்டது.

கூட்ட நிகழ்ச்சிகளைத் தயாரிப்பது செயலாளரே. இந்தக் கடிதம் அடுத்த சபையில் எடுத்துக்கொள்ளப்படும். அதன்போது, "மதச்சார்பற்ற இடமாகத் தொடர்ந்தும் ஆரியகுளத்தைப் பேணுவதுடன் மக்களுக்கான பொழுதுபோக்கு மையமாகப் பேணப்பட வேண்டும்" என்று நான் தனிப் பட்ட முறையில் ஒரு வேண்டுகோளை விடுப்பேன். அதை ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக்கொள்ளாததும் சபையின் வேலை.

இப்போது ஆரியகுளம் பகுதியில் முதலாம் கட்ட அபிவிருத்திப்பணிகள் இடம்பெறுகின்றன. முதலாம் கட்டமாக நடைபாதை மற்றும் குளத்தைச் சுற்றி கம்பி வேலியடைத்தல் என்பன இடம்பெறும். இரண்டாம் கட்டப் பணிகளுக்குரிய நிதிகளை நன்கொடையாளர்கள் தர முன்வந்தால் அபிவிருத்திப் பணிகள் தொடரும்.

இப்போது ஆரியகுளம் பற்றி முகநூலில் எழுதுபவர்கள் நாவற்குழியில் விகாரை கட்டப்பட்டபோது எங்கே சென்றார்கள் எனத் தெரியவில்லை. டிசம்பருக்குப் பின்னர் நாங்கள் அதிகாரத்தில் இருக்க மாட்டோம். அதன் பின்னர் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கையை மேற்கொள்ளப்பட்டால் அதனை அரசியல்வாதிகளும் சமூக ஆவலர்களுமே தடுக்க வேண்டும்" - என்றார். (இ - 03)

## இலங்கையில்...

கொழும்பில் ஊடகங்களுக்கு நேற்று கருத்து வெளியிட்ட அவர், உயிர்த்த ஞாயிறு தீவிரவாத தாக்குதல்கள் பற்றி இலங்கை அரசு நடத்திவரும் விசாரணைகள் போதுமானதாக இல்லை என்று முன்வைக்கப்படும் விமர்சனங்களை நிராகரித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஞானசார தேரர் குறிப்பிடுவதுபோல இலங்கையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் மீண்டுமொரு தீவிரவாத தாக்குதல் மேற்கொள்ள வாய்ப்புகள் இருக்கின்றன. ஏனென்றால் ஐ.எஸ் தீவிரவாத போதனைகளைக் கொண்டிருப்பவர்கள் இருக்கலாம். அவர்களால் தாக்குதல் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது. நான் அனைத்து முஸ்லிம் மக்களையும் குற்றம் சுமத்துவதில்லை. ஆனால் சிங்களவர்கள், தமிழ் மக்கள் தவிர முஸ்லிம் மக்களே இந்த அடிப்படைவாத போதனைகளில் ஈர்க்கப்படுகின்றனர்.

கடந்த மாதம் நியூஸிலாந்தில் நடந்த கத்திக்குத்து தாக்குதலுக்கு முன்னதாக அவர் நாடு கடத்தப்படவிருந்தார். அவ்வாறு நாடு கடத்தப்பட்டிருந்தால் இலங்கையில்தான் அந்தத் தாக்குதலை அவர் நடத்தியிருந்திருப்பார். சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா சஹ்ரானுடன் தொடர்பில் இருந்தார். அவர் ஊடாகவே ஐ.எஸ் போதனைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதேபோல உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் பற்றி இதுவரை 09 வழக்குகள் 05 மேல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதுவரை 79 சந்தேக நபர்கள் தடுப்பிலும், 200 பேர்வரை விளக்கமறியலிலும் வைக்கப்பட்டுள்ளனர். எம்மால் முடிந்த அனைத்து நடவடிக்கையையும் மேற்கொண்டுள்ளோம். ஒரு இலட்சத்து 10 ஆயிரம் தொலைபேசி அழைப்புக்கள் பற்றி விசாரிக்கின்றோம். சந்தேக நபர்களுக்கு எதிராக 23000 குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கின்றோம். இந்த விவகாரம் பற்றி குற்றப் புலனாய்வுப் பிரிவின் 58 பேர் சட்டமா அதிபர் அலுவலகத்தில் இரண்டரை மாதங்களாக இராப்பகலாக பணிகளை செய்தார்கள். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகளை தாமதப்படுத்துகின்றார்கள் என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை முற்றாக நிராகரிக்கின்றேன். கர்தினாலிடமும் இந்த விடயத்தை தெரிவித்திருக்கின்றேன்-என்றார். (அ)

## 2 சிறுநீரகங்களும்...

கைச் சேர்ந்த கணேசன் கிருசிகன் (வயது - 16) என்பவராவார்.

உடல் நலக் குறைவு காரணமாக நேற்று முன்தினம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார்.

இது தொடர்பில் நேற்று கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையில் இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் மாணவன் உயிரிழப்பு ஏற்பட்டதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ - 02)

## நேற்று தொற்று...

நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 19 ஆயிரத்து 630 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 561 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 58 ஆயிரத்து 646 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## மதவாதத்தை...

செயற்பாட்டை உடன் நிறுத்துங்கள்."

- இவ்வாறு யாழ்ப்பாணம் நாக விகாரையின் விகாராதிபதி ஸ்ரீ விமல தேரர் தெரிவித்தார்.

யாழ். ஆரியகுளம் பகுதியில் பௌத்த விகாரை அமைக்கப்படவுள்ளது என ஊடகங்களில் வெளிவந்த செய்தி தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நான் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றில் ஆரியகுளம் அபிவிருத்தி சம்பந்தமாகவும் அதில் புத்த விகாரை அமைக்க முயற்சி என்ற செய்தியையும் பார்த்தேன். அந்தச் செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை.

நாக விகாரைக்கு அண்மையில் சுற்றுலா மையத்தை அமைப்பது தொடர்பில் எனது அதிருப்தியை வெளியிட்டிருக்கின்றேன்.

குறித்த அபிவிருத்தி தொடர்பில் எம்முடன் கலந்தாலோசிக்கபடவில்லை. இது ஒரு புனித பூமி. இந்தக் குளத்தில் சுற்றுலா ஹோட்டலை குளத்தின் நடுவில் அமைப்பதை நிறுத்தி இந்து மற்றும் ஏனைய மதத்தவர்கள் ஒன்றிணைந்து செயற்படக்கூடியவாறு ஒரு நல்லிணக்க மண்டபம் ஒன்றை அமைக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தேன்.

ஆனால், குறித்த பத்திரிகையில் நாம் புத்தர் சிலை அமைக்கப் போகின்றோம் எனச் செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். நாங்கள் அவ்வாறு ஒன்றும் செய்வதற்கு எண்ணவில்லை. ஒரு தியான மண்டபமாக மாற்றுவதற்குத்தான் யோசித்துள்ளோம்.

புனித பிரதேசம் என்பதால் குளத்தின் நடுவில் ஒரு தியான மண்டபத்தை அமைத்தால் அது அனைத்து மதத்தினருக்கும் உதவியாக இருக்கும் என்பது எமது நிலைப்பாடு.

இந்து மதமும் பௌத்த மதமும் சர்வமத குழுவாக இணைந்து யாழில் ஒற்றுமையாகச் செயற்பட்டு வருகின்றோம். விசேடமாக ஆரியகுளம் பகுதியில் அண்மையில் சைவ ஆலயம் உள்ளது. அதேபோல் அண்மையில் பௌத்த விகாரையும் உள்ளது.

இந்து மக்கள், வேறு மத மக்கள் என்று பார்க்காது அனைவரும் இணைந்து செயற்படுகின்றோம்.

நாக விகாரை நுழைவாயிலில் பார்த்தால் தெரியும். இந்துமத தெய்வங்களின் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாளும் சிறப்பு பூஜைகளும் இடம்பெறுகின்றன.

இந்து மதத்தில் முழுமுதல் கடவுளின் சிலையும் வைக்கப்பட்டு பூஜை வழிபாடு இடம்பெறுகின்றது. நாம் கூறுவது என்னவென்றால் இந்தப் பகுதியை ஒரு புனித பிரதேசமாக மாற்ற வேண்டும்.

விகாரையுடன் சம்பந்தப்பட்ட குளம் என்பதால் எம்முடனும் கலந்தாலோசித்திருக்கலாம். ஆனால், அவ்வாறு இடம்பெறவில்லை. யாழ். மாநகர மேயரை நேரில் கண்டபோது ஏன் குள அபிவிருத்தி தொடர்பாக எம்முடன்

கலந்துரையாடவில்லை எனக் கேட்டேன். தற்போது கொரோனா சூழ்நிலை காரணமாக தாங்கள் யாருடனும் கலந்துரையாடவில்லை என்று அவர் கூறினார்.

எனவே, நான் ஒன்றைக் கூற விரும்புகின்றேன். சுற்றுலா மையமாக மாற்றினால் இது ஒரு புனித பிரதேசமாக இருக்காது. எனவே, இந்து - பௌத்த நல்லிணக்க மண்டபம் ஒன்றை அமைக்குமாறு நான் மேயரிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றேன்.

நாங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் அனைத்து மதத்தவர்களுடனும் இணைந்து செயற்படுகின்றோம். நேற்றுக்கூட அனைத்து மதத் தலைவர்களும் இணைந்து பூஜை வழிபாட்டில் கலந்துகொண்டோம். எனவே, யாழ். மாவட்டத்தில் அனைத்து மதத்தவர்களும் ஒன்றிணைந்து செயற்படுகின்றோம்.

சிலர் தமது அரசியல் தேவைகளுக்காக மதவாதங்களைத் தூண்டி மக்களைக் குழப்பி விட யோசிக்கின்றார்கள். மக்களைத் தூண்டி விடுகின்றார்கள். எனவே, இதனை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். நாங்கள் இந்த நாட்டில் நல்லிணக்கத்தோடு சமாதானமாக வாழ முயற்சிக்கின்றோம். எனவே, ஒரு சிலரின் அரசியல் இலாபங்களுக்காக மதங்களுக்கிடையில் பிரச்சினைகளைத் தூண்டிவிடும் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும்" - என்றார். (இ - 03)

## தமிழ் கூட்டமைப்பின்...

சில தினங்களுக்கு முன்னர் கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளின் தலைவர்கள் சந்தித்து, கூட்டமைப்பின் ஒற்றுமையை குலைக்க சுமந்திரன் முயற்சி செய்வதாக குற்றம்சாட்டிய பின்னர் சம்பந்தன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய பொறுப்புக்களை வகிக்கும் அங்கத்தவர்கள் பொதுவாக வடக்கு, கிழக்கு மாகாண மாவட்டங்களில் வசிக்கின்றார்கள். கொரோனா வைரஸின் தாக்கத்தால் தனியாகவும் குழுக்களாகவும் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்குத் தடையாக அமைந்துள்ளது. இதன் விளைவாக சில விடயங்கள் தொடர்பில் தெளிவற்ற நிலைமை உருவாகியுள்ளது.

தேசிய பிரச்னைக்கான அரசியல் தீர்வை அரசமைப்பினூடாகப் பெற்றுக் கொள்வதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மிகப் பிரதானமான குறிக்கோளாகும்.

இந்த நாட்டில் தமது பூர்வீகத்தைக் கொண்டுள்ள மக்களின் இறையாண்மையானது முழு நாட்டிலும் அவர்களுக்கான ஆட்சி அதிகாரம், அடிப்படை உரிமைகள், வாக்குரிமை என்பவற்றை உள்ளடக்கும் அவர்களின் வரலாற்று ரீதியான பூர்வீகம் மற்றும் இலங்கை அரசும் தலைவர்களும் உள்நாட்டிலும் சர்வதேசத்துக்கும் கொடுத்த வாக்குறுதிகளின் அடிப்படையிலும், இலங்கை அரசு ஏற்றுக்கொண்டுள்ள சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் பிரமாணங்களின் அடிப்படையிலும் அமையப்பெற்றதாகும்.

இந்த அடிப்படை விடயம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளது.

ஏனைய சில விடயங்கள் தொடர்பில் ஒருங்கிணைத்த கூட்டங்கள் இடம்பெறாமையானது சில தெளிவற்ற நிலைமைகளையும் குழப்பங்களையும் தோற்றுவித்துள்ளன.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையைச் சிதைப்பதற்கும் சில சக்திகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. ஒற்றுமையை உறுதி செய்யும் முகமாக இந்த விடயங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடல்கள் இடம்பெறும்.

முழுமையான அனைத்தும் உள்ளடங்கிய ஓர் அரசமைப்பை இந்த நாடு உருவாக்க முனைவதாகக் கூறப்படுகின்றது. இந்த முக்கிய தருணத்தில் ஒற்றுமையைப் பேணுவது அடிப்படையானதாகும். மக்கள் மத்தியில் ஒரு தெளிவு இருக்க வேண்டும் மாறாக அவர்களைக் குழப்பக்கூடாது.

ஒன்றுபட்ட பிளவுபடாத நாட்டுக்குள் சமத்துவம், நீதி மற்றும் சுயகௌரவம் என்பவற்றின் அடிப்படையில் ஒரு தீர்வை எட்டும் எமது குறிக்கோளில் உறுதியாகப் பயணிப்பதற்குத் தெளிவின்மைகளையும் குழப்பங்களையும் தவிர்த்துக் கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்" - என்றுள்ளது.

## பிறந்து 24...

யாழ். போதனா வைத்தியசாலைக்கு குழந்தை அழைத்துச் செல்லப்பட்டது.

வெளிநோயாளர் பிரிவில் பரிசோதனை செய்தபோது குழந்தை உயிரிழந்தமை தெரியவந்தது.

பி.சி.ஆர் பரிசோதனையில் குழந்தைக்கு கோவிட்-19 நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேமகுமார் மேற்கொண்டார். (அ)

ஈழநாடு
Eelanadu




# அரசிடமிருந்து தீர்வு கிடைக்காவிடின் அரசியலிலிருந்து விடை பெறுவேன்

## வெள்ளைப்பூடு மோசடி தொடர்பில் அமைச்சர் பந்துல அதிரடிக் கருத்து



கொழும்பு, ஒக். 03

**“வெள்ளைப்பூடு மோசடிக்கு அரச தரப்பிடம் உரிய தீர்வு கிடைக்காவிட்டால் நான் அரசியலில் இருந்து ஓய்வுபெறுவேன்.”**

**- இவ்வாறு வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங் கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“சதொச நிறுவனத்தில் இடம் பெற்ற வெள்ளைப்பூடு மோசடி சம்பவத்துக்கு என்னைத் தொடர்பு படுத்தும் சதித் திட்டம் இடம பெறுகின்றது.

அரசில் எனக்குத் தொடர் பில்லாத எந்தவொரு விடயம் தொடர்பாகவும் நான் கருத்து வெளியிடுவதில்லை” - என்றார்.

வெள்ளைப்பூடு மோசடி தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அமைச்சர் பந்துல குண வர்தனவிடம் வாக்குமூலம் பெற் றுக்கொண்டனர் என்பது குறிப் பிடத்தக்கது.

(இ)

## நாட்டுக்கு நாளொன்றுக்கு 5,000 சுற்றுலா பயணிகள்

*கொழும்பு, ஒக். 03*

நவம்பர் மாதத்துக்குள் நாளொன்றுக்கு 5,000 சுற்று லாப் பயணிகளை ஈர்ப்பதே அரசாங்கம் நோக்கம் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித் துள்ளார். நேற்று காலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக் கும் போதே பிரசன்ன ரணதுங்க இதனை தெரிவித்தார்.

மேலும் புதிய சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்ப இந்த இலக்கை அடைய தேவையான நடவடிக்கைகள் எடுக் கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## காந்தியின் 152 ஆவது ஜெயந்தி தினம்

*வடமராட்சி, ஒக். 03*

*மகாத்மா காந்தியின் 152ஆவது ஜெயந்தி தினத்தை முன்னிட்டு பருத் தித்துறை வீரசந்திரன் வடிவல் மூலையில் அமைந்துள்ள அன்னாரின் உருவச் சிலைக்கு நேற்று மலரஞ்சலி செலுத்தப் பட்டது.*

*அகில இலங்கை காந்தி சேவாசங்கம் மற்றும் அறவழிப்போராட்டக் குழு ஆகி யன இணைந்து மலரஞ்சலிக்கு ஏற்பாடு செய்திருந்தது.*

*இந்த நிறுவனங்களின் சார்பில் வி.ஜி.தங்கவேல் மலரஞ்சலி செலுத்தி னார்.*

*கொட்டும் மழைக்கு மத்தியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.* (இ - 02)



# மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 11 - 06 - 1938 |  | 01 - 10 - 2021 |

## திருமதி மரிய அருளானந்தம் மரியறோஸ்

சாவகச்சேரி கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மரிய அருளானந்தம் மரிய றோஸ் அவர்கள் கடந்த (01.10.2021) வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இறப்பியேல் - கதெரினா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செபமாலை மரிய அருளானந்தம் அவர்களின் பாசமிகு மனைவியும், மரிய பேணாட்(JP), மரியதாஸ் (கனடா), காலஞ்சென்ற மரிய அல்போன்ஸ், மரிய அருள்தாஸ் (கனடா), மரிய ஞானசீலன் ( சுவிஸ்), மரிய அன்ரனி (இலங்கை), காலஞ்சென்ற மரிய யேசுதாசன், மரிய பொன்கலன் (பிரான்ஸ்), மரிய நவசீலன் (இத்தாலி), மரிய அல்வீனா (இலங்கை) ஆகியோரின் அன்புத் தாயாரும், மரிய திரேசா (இலங்கை), ஜேன்மரியா (கனடா), காலஞ்சென்ற மேரி கிளமென்ற் (லதா- கனடா), சியாமளா (சுவிஸ்), ரசியா (இத்தாலி), மேரி புளோரிடா (இலங்கை), ஜெயசுதா (பிரான்ஸ்), ஜோன் ஸ்ரெலா (இத்தாலி), பொபிசான்டஸ் (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியாரும்,காலஞ்சென்ற சிங்கராசா, மொனிக்கம்மா (இலங்கை), தேவசகாயம்பிள்ளை(இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரான்சிஸ்கா (பொன்னார்), காலஞ்சென்ற அகுஸ்தீன், செபமாலைஅம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஞானேஸ்வரி (இலங்கை), சந்திரராசா (பிரான்ஸ்), தேவபரன் (இலங்கை), தேவபாலன் (பிரான்ஸ்), தேவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் ஆசைப் பெரியம்மாவும், காலஞ்சென்ற மரிய இராபேல் (ரஞ்சித்- பிரான்ஸ்), மரிய கதரீன் (இலங்கை), மரிய அருள்ராணி (இலங்கை), மரிய ஜெறோம் (இலங்கை), மரிய நியூட்டன் (லண்டன்), மரிய பெனடிற்றா (லண்டன்), மரிய நிறொஜன் (இலங்கை), மரிய கொறற்றி (சுவிஸ்), மரிய அன்ரனி (இத்தாலி), மரிய நாயகி (சுவிஸ்), மரிய அஞ்சலா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், செங்கோல் ராணி- ஜேசு, M. ஜோசப்- டோனா, ஆரோக்கியமேரி- ராஜகுரு, M.சிந்தாத்துரை- ஜெயராணி, ஆ.கஸ்மீர்ராஜ்- மகாஜோதி ஆகியோரின் அன்புப் பெறாமக்களும், மரிய ஜெகநாத்(லண்டன்), மரிய ஜெயந்தினி (லண்டன்), மரிய ஜெயவதனி (இலங்கை), மரிய ஜெயறமணி (லண்டன்), மரிய ஜெகதீபன்(சுவிஸ்), மரிய ஜெகரூபன் (லண்டன்), மரிய ஜெகரூபினி ( இலங்கை), ஜெனீபர்(கனடா), யோனத்தன் (கனடா), மீர்த்தி (கனடா), அல்போன்ஸ் (சுவிஸ்), யூலியா (சுவிஸ்), மரிய ஜெனிற்றா (இலங்கை), மரிய அன்ரனிற்றா(இலங்கை), மரிய யூட் நிக்சன் (இலங்கை), மரிய ஜஸ் ரீனா(இலங்கை), சுயந்தன் (இத்தாலி), சோபி (பிரான்ஸ்), பிறித்தி (இத்தாலி), செறின் (இத்தாலி), மரிய செடோன் (இலங்கை), மரிய செறோன் (இலங்கை), மரிய செறொனி (இலங்கை) ஆகியோரின் அன்புப் பேத்தியும், நிவான்(லண்டன்), நவின் (லண்டன்), அபிசா (லண்டன்), டிவானா (லண்டன்), அக்சயா (இலங்கை), அஸ்வினி (இலங்கை), நிதர்சினி (இலண்டன்), நிதர்சன் (லண்டன்), சந்தோஸ் (சுவிஸ்), சரன் (சுவிஸ்), றிசானா (இலங்கை), ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
**மரிய அருள்தாஸ் - மகன்**
+14167106196

தகவல்:
**குடும்பத்தினர்.**







*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்




6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-தாள்
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-திறமையாளர்களுக்கான களம்

**இரவு**
7.00 மணி : SPOTLIGHT - சிரேஸ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி :செல்லாடுகளம் -சிறுவர் உரிமைகளுக்கு மதிப்பு கொடுப்போம்




10.00 மணி:-நேர்கொண்ட பார்வை

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## சிவ ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு